
GOKULAM

கோகுலம்

ஜனவரி 2002

ரூ.6/-



காலண்டர் உள்ளே...



கோகுலம் கோப்பை ஹீரோக்கள்!


20%
PRODUCE THIS
DISCOUNT COUPON
ENJOY THE DAY WITH FAMILY
Bring this coupon & avail discount
ENJOY
LIKE NEVER BEFORE!
SPL. BONANZA
17 Rides Rs.75 Only!
(Unlimited)
10AM - 8PM
MGR FILM CITY
FUN WORLD
Tharamani
Chennai.
Tel :2541500/2541700

கோகுலம்

மலர் : 19
இதழ் : 12
ஜனவரி 2002



*உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.*

- பாரதியார்.

வலையில்



இன்டர்நெட்டில் சிறுவர்களுக்கென்று நிறைய இணைய தளங்கள் (வெப்சைட்) இருக்கின்றன. தவிர பொதுவான வெப் சைட்களிலும், குழந்தைகளுக்கான பிரிவுகள் உள்ளன. அங்கு சென்று பார்த்தால் சுவாரசியமாக ஏராளமான விஷயங்கள் கிடைக்கும். விளையாட்டுகள் இருக்கும். படித்துத் தெரிந்து கொள்ளலாம், விளையாடி மகிழலாம்.



இந்த அம்பு வலது பக்கம் நோக்கித்தானே இருக்கிறது? அம்பு படத்தைத் தொடாமல் அதை இடது பக்கம் நோக்கித் திருப்ப வேண்டும். (நீங்கள் எதிர்பக்கத்துக்குப் போய் இப்போது இடது பக்கம் நோக்கித் திரும்பிவிட்டது என்று சொல்லக் கூடாது. என்ன சரியா?) விடை தெரியவில்லையென்றால் கவலை வேண்டாம், கடைசியில் பார்த்துக் கொள்ளுங்கள்.

அடுத்து ஜாலியாக இன்டர்நெட் ஜோக்குகள் சில படித்து ரசிக்கலாமா?

ராஜா : மருத்துவமனைக்கு சீக்கிரம் போக வேண்டும் என்றால், குறுக்கு வழி ஏதாவது இருக்கிறதா?





ராதா : ம்... நடுரோட்டில் போய் நில்! அடிபட்டால், உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு போவார்கள்.

ஒருவர் உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனார். டாக்டர், தனது பரிசோதனைகளை முடித்துக் கொண்டு, சிவப்பு, பச்சை, வெள்ளை நிற மாத்திரைகளைக் கொண்ட மூன்று பாட்டில்களைக் கொடுத்து விட்டுச் சொன்னார் :


"காலையில் சாப்பிட்ட பின் ஒரு சிவப்பு மாத்திரையைப் போட்டுக் கொண்டு, இரண்டு டம்ளர் தண்ணீர் குடி. பகலில் பச்சை மாத்திரையும் இரண்டு டம்ளர் தண்ணீரும், இரவு சாப்பிட்டபின் வெள்ளை மாத்திரையும் இரண்டு டம்ளர் தண்ணீரும் குடி."

சரியென்று தலையாட்டியபடியே "டாக்டர் என் உடம்புக்கு என்ன?" என்று கேட்டார் நோயாளி.





"நீ போதுமான அளவு தண்ணீர் குடிப்பதில்லை. அதுதான் பிரச்னை" என்றார் டாக்டர்.



அருகில் உள்ள படத்தை நன்றாகப் பாருங்கள். கறுப்பு சதுரங்களுக்கு இடையே, இடது பக்கத்திலிருந்து வலதுபக்கமாகச் செல்லும் கோடுகள் வளைந்திருப்பது போலத் தோன்றுகின்றன அல்லவா?

உங்கள் கண்கள் உங்களை ஏமாற்றுகின்றன. ஒரு ஸ்கேலை அந்தக் கோடுகளின் மீது வைத்துப் பரிசோதித்துப் பாருங்கள். அவை எல்லாமே நேர்க் கோடுகள். ஒன்றுக்கொன்று இணையானவை.

சிக்கியவை!

ஆரம்பத்தில் கொடுத்த புதிருக்கு விடை : அம்புக்கு முன் தண்ணீர் நிரம்பிய கண்ணாடி டம்ளரை வையுங்கள். அதன் முன் நின்று, டம்ளரில் உள்ள தண்ணீர் வழியே அம்பைப் பாருங்கள். இடது பக்கம் தோற்றமளிக்கும்.

சிபாரிசு

இன்டர்நெட்டில் சிறுவர்களுக்கென்றே பிரத்யேகமான இணைய தளங்கள் நிறைய உள்ளன. அவற்றிலிருந்து ஒன்றை உங்களுக்குச் சிபாரிசு செய்கிறேன். அதுதான் www.appukids.com

இதில் சிறுவர் சிறுமியர்க்கு ஏற்ற கதைகள், கவிதைகள், பொது அறிவு விஷயங்கள், வண்ணம் தீட்டி மகிழ சித்திரங்கள் என்று ஏராளமான விஷயங்கள் இடம் பெற்றுள்ளன.

தவிர, உங்கள் நண்பர்களுக்குப் புத்தாண்டு, தீபாவளி, குழந்தைகள் தினம், பிறந்த நாள் போன்றவற்றுக்கு அனுப்புவதற்கு ஏற்ற பலவிதமான வாழ்த்துகளும் தயாராக இருக்கின்றன. (இவற்றை 'ஈகார்டு' என்று சொல்வார்கள்) இந்த வாழ்த்துகளை, தக்க தருணத்தில், இன்டர்நெட் மூலமாகவே அனுப்பி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

இந்த இணைய தளத்தில் சிறுவர் சிறுமியர்க்கு மிகவும் பிடித்த சமையல் குறிப்புகள்கூட இடம் பெற்றுள்ளன. உங்கள் அம்மாவிடம் சொல்லி, அவற்றைச் செய்து தரச் சொல்லி, சாப்பிட்டுப் பாருங்கள்!

இன்னொரு விஷயம்! இங்கே இடம் பெறும் விஷயங்களைப் படித்துவிட்டு உங்களுக்கும் கதை, ஜோக், பாட்டு என்று ஏதாவது எழுத வேண்டும் போல இருந்தால், நீங்கள் தாராளமாக இந்த இணைய தளத்துக்கு அனுப்பலாம். சிறந்தவற்றிற்குப் பரிசும் உண்டு.

- கௌதம் ராம்

மந்திபூரில் ராமசாமி என்று ஒரு விவசாயி இருந்தான். அவனிடம் ஒருவெள்ளரித் தோட்டம் இருந்தது. நல்ல விளைச்சல். விவசாயத்துல நல்ல வருமானம். நிறைய காசு சேர்த்து வைத்திருந்தான். ஆனால் ரொம்பக் கஞ்சன். சரியாக்கூட சாப்பிட மாட்டான்.

ஒருநாள் அவனுக்குக் கனவுல அவன் செத்துப் போற மாதிரியும் எம தூதர்கள் அவனை நரகத்துக்கு இழுத்துட்டுப் போற மாதிரியும் தெரிந்தது. பயந்து போன அவன் மறுநாள் ஊரில் இருந்த கோயில் பூசாரியைப் போய் பார்த்து விளக்கம் கேட்டான்.

"கஞ்சத்தனம் பண்ணினால் கைலாசத்துக்கா போக முடியும். நரகந்தான் கிடைக்கும்'' என்று சொன்ன பூசாரி "நூறு ஏழைகளுக்கு ஒரு நாள் ஒருவேளை சோறு போடு'' என்றார்.


''நூறு பேருக்கா?'' வாயைப் பிளந்தான் ராமசாமி.

''நிறைய செலவாகுமே!'' என்று அவன் முணுமுணுக்க "சரி! ஐம்பது ஏழை பசங்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வாங்கிக் கொடு" என்றார் பூசாரி.

அதற்கும் ராமசாமி மறுப்புத் தெரிவித்தான்.


''யாருக்காவது ஒருவருக்கு ஒருவேளை சோறாவது போடுய்யா'' என்று சொல்லிவிட்டுக் கோயிலை கவனிக்கப் போய்விட்டார் பூசாரி.

வீட்டுக்கு வந்து மனைவியிடம் விவரத்தைச் சொன்னபோது அவள் தாம் தூம் என்று குதித்தாள். ''வர்றவங்க போறவங்களுக்கெல்லாம் வடிச்சுக் கொட்ட இங்கே என்ன கொட்டியா கிடக்குது?'' என்று சண்டை பிடித்தாள்.



"கொஞ்சமா சாப்பிடற ஆளா பார்த்துக் கூப்பிடுவோம். சின்ன இலை போடுவோம். முதலிலேயே இரண்டாம் சோறு கிடையாதுன்னு சொல்லிரு வோம்" என்று மனைவியைச் சமாதானப் படுத்தினான் ராமசாமி.





மறுநாள் காலையில் குளித்து முடித்து வாசலுக்கு வந்து நின்றார்கள் ராம சாமியும் அவன் மனை வியும். வழியில் வருவோர் போவோரைப் பார்த்து "இவங்களுக்கு அண்டாச் சோறும் அகப்பைக் கறியும்ல வேணும்" என்று சலித்துக் கொண்டார்கள். தூரத்தில் ஒரு துறவி வருவது தெரிந்தது. 'சாமியார் கொஞ்சமா தான் சாப்பிடுவார்' என்று நினைத்துத் துறவியை வணங்கி, வீட்டுக்கு விருந் துண்ண அழைத்தார்கள். துறவி வந்து அமர்ந்ததும், இலை பறிக்கப் போனாள் ராம சாமியின் மனைவி. ராமசாமி துறவியின் அருகில் உட் கார்ந்து கொண்டு தனக்குக் கனவு வந்த கதையைச் சொல்லிக்கொண்டிருந்தான்.

வெள்ளரிக்காய் கசப்பது ஏன்?

"சாப்பிட்டு திருப்தியா எங்களை ஆசீர்வாதம் செய் யணும் சாமி" என்று வேண்டிக்கொண்டான் ராமசாமி.

இலை பறிக்கப் போன அவன் மனைவி வாழை மரத்தின் அருகே போனாள். "இவ்வளவு பெரிய இலையா?" என்று சொல்லிவிட்டுத் தேக்கு மரத்து இலையை பறிக்கப் போனாள். "இதுவும் பெரிசாதான் இருக்கு" என்று சொல்லிவிட்டுப் பலாமரத்து இலை யைப் பறித்தாள்! "அடேங்கப்பா உள்ளங்கை அளவு இருக்கே" என்று அதைத் தூக்கி எறிந்துவிட்டு சுற் றும் முற்றும் பார்த்தாள். அவள் கண்களில் வேப்பமரம் பட "அடடே இதைக் கவனிக்காமல் போயிட்டோமே" என்று சொல்லி வேப்ப இலை ஒன்றை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள்.

"இலை பறித்து வர இவ்வளவு நேரமா?" என்று கோபித்துக்கொண்டான் ராமசாமி.


வேப்பிலையைத் துறவி முன் விரித்து, தண்ணீர் தெளித்து, ஐந்தாறு சோற்றுப் பருக்கைகளை எடுத்து வைத்தாள். இரண்டு சொட்டு குழம்பை ஊற்றினாள். நான்காய் வெட்டிய கண்டைக்காயின் ஒரு பகுதியை வைத்தாள். "இலை நிறைய வெச்சிருக்கோம் திருப் தியா சாப்பிடுங்க சாமி" என்று வேண்டிக்கொண்டாள். பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டார் துறவி. சாப்பிட்டு விட் டுக் கை கழுவி னார். ராமசாமியும் அவன் மனைவியும் துறவி யின் காலில் விழுந்து வணங்கினார்கள். 'ஆசீர்வாதம் பண்ணுங்க சாமி' என்று.

"உங்களைப் போல கஞ்ச பிசினாரிகளை நான் எங்கேயும் பார்த்ததில்லை. வேப்பிலையில் சோறு போட்ட வெட்டி மனிதர்களே! உங்கள் தோட்டத்துக் காய்களும் அந்த வேம்பாய் கசக்கட்டும்" என்று சொல்லிவிட்டு விருட்டென வெளியே போய்விட்டார். அன்று முதல் ராமசாமியின் தோட்டத்து வெள்ளரிக் காய்கள் கசக்க ஆரம்பித்தன. அந்தச் செடியின் விதைகளை எங்கு ஊன்றினாலும் அவையும் கசப்புக் காய்களையே தந்தன. ஒரு சில வெள்ளரிக்காய்கள் கசப்பது இதனால்தான்!

எஸ். துர்கா காத்யாயனி,

பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

'ஆனி ஃப்ராங்க் டைரி'



• ஆனி வாழ்ந்த வீடு



ஆனி ஃப்ராங்க், பதின்மூன்று வயது பெண்களுக்கே உரிய அழகும் சுறுசுறுப்பும் கொண்டவள். நாஜிக்களால் அழிக்கப்பட்ட யூத இனத்தைச் சேர்ந்தவள் என்ற காரணத்திற்காக ஒரே இரவில் தன்னுடைய சாதாரண வாழ்க்கையிலிருந்து விலகித் தேடப்படும் நபர்களில் ஒருவராகக் குடும்பத்துடன் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டியதாகிவிட்டது.

ஆனியின் குடும்பத்தினர் ஜெர்மனியில் வசித்து வந்தவர்கள் தான் என்றாலும் 1933ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரத்திற்குக் குடிபெயர்ந்தனர். 1940 ஆம் ஆண்டு ஜெர்மானியர்கள் ஹாலந்து நாட்டைக் கைப்பற்றியபோது அங்குள்ள யூதர்களின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. யூதர்கள் என்பதைக் காட்டிக் கொள்ள ஒவ்வொருவரும் மஞ்சள் நிற நட்சத்திரக் குறியொன்றை எந்நேரமும் அணிந்திருக்க வேண்டுமென்றும் இரவு எட்டு மணிக்கு மேல் வெளியே வரக் கூடாது வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டுமென்றும் நிபந்தனை விதித்திருந்தனர்.

ஆனியின் தந்தை ஓட்டோ, நாஜிக்களிடமிருந்து தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற தன்னுடைய புத்தகக் கடைக்குள்ளேயே ரகசிய மறைவிடம் ஒன்றை உருவாக்கினார். மேல் தளத்துக்குச் செல்லும் வழியை புத்தக அலமாரிகளை வைத்து அடைத்து வைத்தார்.

ஆனி தன்னுடைய 13வது பிறந்த நாளன்று பரிசாகக் கிடைத்த டைரியில் மறைவாக இருந்த அந்த இரண்டாண்டுகளில் மனத்தில் எழுந்த பயம், ஆசைகள், துயரங்கள், எண்ணங்கள், குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவுகள், சந்தோஷங்கள், பார்த்த, கேட்ட யுத்த பயங்கரங்கள் அனைத்தையும் எழுதி வைத்திருந்தாள். யுத்தம் முடிந்து வாழ்க்கை சகஜ நிலைமைக்குத் திரும்பிய பிறகு என்னென்ன செய்ய வேண்டுமென்பதையும் தான் ஒரு எழுத்தாளராக வர வேண்டுமென்ற ஆசையையும் குறிப்பிட்டதோடு, ஒரு வேளை நாங்கள் பிடிபட்டால் சுட்டுக் கொல்லப்படலாம் என்ற பயத்தையும் அதில் எழுதியிருந்தாள். அந்த டைரிக்கு 'கிட்டி' என்று பெயரிட்டிருந்தாள்.

இவர்கள் மறைந்திருக்கும் ரகசியத்தை 1942 ஆம் ஆண்டு ஜூலை மாதம் எப்படியோ ஜெர்மானிய ராணுவத்தினர் தெரிந்து கொண்டுவிட்டனர். அவர்

களிடமிருந்து தப்பிக்க நினைத்த இவர்கள் வட துருவத்துக்குச் செல்லும் பயணிகள் போல் உடையணிந்து அதற்குள் வேண்டிய துணிமணிகளை அடைத்துக் கொண்டனர். ஆனியும் மறக்காமல் அந்த டைரியை தன்னுடன் எடுத்துக் கொண்டாள்.

1944 ஆம் ஆண்டு பிரிட்டன் அமெரிக்கா போன்ற நேச நாடுகளின் படைகள் முன்னேறி வருவதையும் யுத்தம் முடிவடையலாம் என்ற செய்தியையும் ரேடியோ மூலம் கேட்டறிந்த ஆனி, 'அமைதியென்பது மிகப்பெரிய விஷயம்' என்று டைரியில் குறிப்பிட்டிருக்கிறாள். ஆனால் எதிர்பாராத துயரம் போல் இந்த விடுதலையை அவளால் அனுபவிக்க முடியவில்லை. அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாஜி உளவாளி மூலம் மாடுகள் ஏற்றிச் சென்ற வண்டியொன்றில் பதுங்கிச் சென்ற ஆனியின் குடும்பத்தினர் பிடிபட்டு 'கான்சன்ட்ரேஷன்' முகாமுக்கு அனுப்பப்பட்டனர். அதன்பிறகு ஆனி திரும்பவே இல்லை. ஆனியும் அவள் சகோதரி மார்கேட்டும் விஷ வாயு செலுத்தப்பட்டு இறந்து போனார்கள். அதிர்ஷ்டவசமாக அந்தக் குடும்பத்தில் ஆனியின் தந்தை ஒட்டோ மட்டும் உயிர் பிழைத்தார். முகாமில் குவிந்திருந்த குப்பைகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஆனியின் டைரி மட்டும், ஆம்ஸ்டர்டாம் திரும்பிக் கொண்டிருந்த ஆனியின் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவளுடைய டைரி குறிப்புகள் எப்போதுமே மறக்க முடியாத நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று விரும்பிய ஒட்டோ, 'தி டைரி ஆஃப் ஆனி ஃப்ராங்க்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட ஏற்பாடு செய்தார். இன்றைய 'டீன் ஏஜ்' பருவத்தினருக்கு தன்னம்பிக்கை ஊட்டுவது போல் ஆனி விரும்பியது போலவே அவள் இறந்த பிறகும் அவளுடைய எண்ணங்களும் தன்னம்பிக்கையும் இன்றும் புத்தக வடிவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

- அ. குமார், பெங்களூர்.

பவளம்

பவளம் என்பது உயிரினம் என்று சொன்னால் வியப்பாக இருக்கும். உண்மை இதுதான். கடலில் வாழும் இவ்வுயிருக்குப் பிறக்கும்போது எலும்புக்கூடு இருப்பதில்லை. பிறகே அவை தனக்கென எலும்புக் கூட்டை உருவாக்கிக் கொள்ளுகின்றன. உடலுக்குள் அல்ல, உடலுக்கு வெளியே. சின்னஞ்சிறு உயிர்களான அவை, பெருங்கூட்டமாகவே வாழுகின்றன. அவற்றின் எலும்புக் கூடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து சிறிய மரங்கள், கீரைக் கட்டுகள், தாறு மாறான பந்துகள் போலிருக்கும். இவைதாம் பவளம் எனப்படுகிறது. வெப்பக் கடலில் இவை வெகு தூரத்துக்குப் பரவி மலைப் பாறைகள் போல் அமையும். இப்பூச்சிகளுக்கு 'போலிப்ஸ்' என்று பெயர்.

- எஸ்.மோகன்ராஜ், சீர்காழி.



வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்!



1986ம் வருடம். மெக்ஸிகோவில் நடந்த கால்பந்துப் போட்டியில் அரை இறுதிப் போட்டி. மோதியவர்கள் கால்பந்து விளையாட்டில் தலை சிறந்து விளங்கும் பிரேஸிலும், அர்ஜென்டினாவும், லட்சக்கணக்கான ரசிகர்கள் காலரிகளில் கூட உட்காராமல், பட படப்புடன் நின்று கொண்டே ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மொத்த ஆட்ட நேரமே 90 நிமிடங்கள் தான். 86வது நிமிடம் வரை எந்த அணியும் கோல் போடவில்லை. 'சரிதான் பெனால்டி வாய்ப்புகளில்தான் இந்த போட்டியின் தலைவிதி தீர்மானிக்கப்படப் போகிறது.' என்று ரசிகர்கள் முடிவு கட்டிக் கொண்டிருக்கும்போதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. சிறந்த கால்பந்து ஆட்டக்காரரான மரடோனா லாவகமாக பாஸ் செய்து கொடுத்த பந்தை அர்ஜென்டினாவின் முன்னணி வீரர் ஒருவர் கோல் கம்பத்திற்குள் தள்ளிவிட அர்ஜென்டினா 1 - 0 என்ற கணக்கில் போட்டியை வென்றது. புல்லில் புரண்டு அழுதுவிட்டனர்







பிரேஸில் வீரர்கள்.

"கடந்த இருபது வருடங்களில் நடந்த மறக்க முடியாத கால்பந்து போட்டிகளில் இதுவும் ஒன்று" என்கிறார் கே.சங்கர். மிகச் சிறந்த கால்பந்து ஆட்டக்காரரான இவர் சர்வதேச கால்பந்தாட்டக் கழகம் அங்கீகரித்துள்ள நடுவர். இன்று சென்னையில் கால்பந்து ஆர்வம் உள்ள சிறுவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி கொடுத்து வருபவர்.

"ஒரு வேளை 90 நிமிடங்களிலும் எந்த அணியும் கோல் போடாவிட்டால் என்ன ஆகும்?"

"அதன்பிறகு ஒவ்வொரு அணிக்கும் பதினைந்து நிமிடமாக, இரண்டு முறை தரப்படும். அதிலும் வெற்றி - தோல்வி தெரியாமலிருந்தால் ஒவ்வொரு அணிக்கும் ஐந்து முறை பெனால்டி அடிக்கும் வாய்ப்புத் தரப்படும். எப்படியும் இந்த நிலையில் முடிவு தெரிந்து விடும். அதிலும் தெரியவில்லையென்றால் ஒவ்வொரு அணியும் மாற்றி, மாற்றி, பதினோறு ஆட்டக்காரர்களும் அடித்து முடிக்கும் வரை பெனால்டி வாய்ப்புத் தரப்படும். ஆனால் எனக்குத் தெரிந்த வரை உலக அளவில் நடந்த எந்தப் போட்டியிலும் முடிவு தெரிய இந்த நிலை வரை செல்லவில்லை" என்கிறார் சங்கர்.

சங்கரின் மிகப் பெரிய வருத்தம் - இந்தியாவில் கிரிக்கெட்டுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் கால்பந்து, ஹாக்கி போன்றவற்றிற்குக் கொடுக்கப்படவில்லையே என்பதுதான். "மீடியாக்கள் மற்ற விளையாட்டுக்களை அலட்சியம் செய்கின்றன" என்கிறார் சங்கர்.

"எந்தெந்த நாடுகள் இங்கிலாந்திடம் அடிமைப்பட்டு கிடந்ததோ, அந்த நாடுகளில்தான் கிரிக்கெட் ஆட்டம் முதன்மையாக ஆடப்படுகிறது. மற்ற நாடுகளில் கால்பந்தும், ஹாக்கியும்தான். இங்கிலாந்து தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள், தென் அமெரிக்க நாடுகள், ரஷ்யக் குடியரசுகள், ஆப்பிரிக்க நாடுகள் போன்றவற்றில் கால்பந்திற்குத்தான் முதலிடம். அதிலும் கொலம்பியா, பிரேஸில், அர்ஜென்டினா போன்ற நாடுகளில்



உள்ள கால்பந்து ரசிகர்கள் வெறிபிடித்தவர்கள். ஒருமுறை கொலம்பியாவிற்கும் நெதர்லாந்திற்கும் இடையே ஒரு போட்டி நடந்தது. மிக விறுவிறுப்பாக நடந்த அந்தப் போட்டியில் கொலம்பியா வீரர் ஒருவர் செய்த தவறின் காரணமாக self goal போடப்பட்டு நெதர்லாந்து வெற்றி பெற்றுவிட்டது. இது நடந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் முடிந்த பிறகு கொலம்பியாவின் கால் பந்து வீரர் ஒருவர் நடுவீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். "நெதர்லாந்துடன் நடந்த போட்டியில் நமது நாடு தோற்றதற்கு இவர்தான் காரணம். அதனால்தான் சுட்டுக் கொன்றேன்" என்றான் அந்தக் கொலைகாரன். விளையாட்டின்மீது ஆர்வம் இருக்கலாமே

கால் பந்தாட்டத்துக்குக் கை கொடுப்போம்!

தவிர இது போன்ற மூர்க்கத்தனங்களை நாம் வளர்த்துக் கொள்ளக் கூடாது.''

இந்தியாவில் கால்பந்து ஆட்டத் துக்குப் பெயர் போன மாநிலம் மேற்கு வங்காளம். அதிலும் கொல்கத்தாவில் மிகச் சிறந்த அணிகள் பல உள்ளன. உதார ணமாக கிழக்கு வங்காளம், மோகன் பெகன், மொகமதியன்ஸ் போன்ற அணி களுக்கிடையே போட்டிகள் நடக்கும்போது மைதானத்தில் அனல் பறக்கும். பல முறை ரசிகர்களுக்கிடையே மோதல்கள் வந்து துப்பாக்கி சூடுவரை கூடப் போன துண்டு. அதனால் இந்த அணிகளுக் கிடையே போட்டி நடக்கும்போது, டிக்கெட் கொடுக்கும் போதே 'நீங்கள் எந்த அணி யின் ரசிகர்?' என்று கேட்டு டிக்கெட் கொடுப்பார்கள். அந்தக் குறிப்பிட்ட கலர் டிக்கெட்டைப் பெற்றதும் அந்த அணியின் ரசிகர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் போய் அமர வேண்டும். மோதல் வராமல் இருக்கவே இந்த ஏற்பாடு. இந்த அணிகள் உருவானதே ஒரு தனி வரலாறு. 1947ல் நாடு பிரிந்த போது கிழக்கு வங்கத் திலிருந்து லட்சக்கணக்கில் அகதிகள் இந் தியாவுக்கு வந்தனர். வகுப்புக் கலவரங்கள் நடந்தன. ஒவ்வொரு இனத்தவரும் தங்களை காப்பாற்றிக் கொள்ள குழுக்களை அமைத்தனர். இந்தக் குழுக்களே கால்பந்து அணிகளாக உருவாகின.

இப்போது கொல்கத்தா போன்று மற்ற மாநிலங்களிலும் கால்பந்து ஆர்வம் தொற்றிக் கொண்டு வருகிறது. 'ஜென்டில் மேன் ஆட்டமான கிரிக்கெட்டின் மவுசு குறைய இந்தியாவிலும் கால்பந்துக்கு மவுசு கூடும்' என்று உறுதியுடன் சொல் கிறார்கள் கால் பந்து ரசிகர்கள். இதுவரை இந்தியா உலகக் கோப்பை போட்டியில் ஆட தகுதி பெறவில்லை.



• ஓாம், விஜயன்

''சிறுவர்களிடம் விளையாட்டு ஆர் வத்தை வளர்க்க, முதலில் நமது பள்ளி களில் விளையாட்டு மைதானம் இருக்க வேண்டும். இன்று பெரும்பாலான பள்ளி களில் மைதானமே கிடையாது. இருப்பதும் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன'' என் கிறார் சங்கர். ''இப்போதெல்லாம் பெற் றோர்கள் பையன்களைப் படிப்பு, படிப்பு என்று போட்டு அழுத்தி விடுகிறார்கள். விளையாட்டில் ஆர்வம் உள்ள பையன் களை திசை திருப்பி விடக் கூடாது. திட் டம் போட்டு செயல்பட்டால் படிப்பு, விளையாட்டு என்று இரண்டிலும் பளிச் சிடலாம். ஒரு கால்பந்து வீரராக முதல் தகுதி அவர் உடல்ரீதியாக ஃபர்பெக்டாக இருக்க வேண்டும். எனவே உடற்பயிற்சி, ஸ்டாமினாவை வளர்த்துக் கொள்வது போன்றவற்றைத்தான் முதலில் சொல் லிக் கொடுப்போம்.'' என்கிறார். தற் போது நிறைய சிறுவர்கள் கால் பந்தாட்டத்தில் ஆர்வம் காட்டுகிறார் களாம்.


கால்பந்தாட்டத்தில் மொத்தம் பதினோறு ஆட்டக்காரர்கள். முன் னணியில் மூன்று வீரர்கள் இடை நிலை ஆட்டக்காரர்கள் மூன்று பேர். டிபென்ஸ் என்று சொல்லப்படும் பின் நிலை ஆட்டக்காரர்கள் நான்கு பேர். ஒரு கோல் கீப்பர். இதில் முன்னிலை ஆட்டக்

காரர்கள்தாம் கோல் போடுபவர்கள். அதற்கேற்றபடி பந்தை பாஸ் செய்து கொடுப்பவர்கள இடைநிலை வீரர்கள்.

''ஒருவர் தன்னை எந்த நிலையில் விளையாட பயிற்சி மேற்கொள்ள வேண்டும்?''

''எல்லா நிலைகளிலும் விளையாடும் பயிற்சியைப் பெற்றுக் கொள்வது நல்லது. உங்கள் ஆட்டத் திறமையைப் பார்த்து பயிற்சியாளரே உங்கள் நிலையை நிர்ணயிப்பார். அப்படி நிர்ணயித்தவுடன் பல போட்டிகளில் நீங்கள் உங்கள் திறமையைக் காண்பிக்கும் பட்சத்தில் அதே நிலையில் உங்களை உறுதி செய்து கொள்ளலாம்.''

பொதுவாக கால் பந்தில் முன்னிலை ஆட்டக்காரர்கள் தான் ஆட்டத்தில் பிரபலமாவார்கள். பிரேஸிலின் பீலே, ரொனால்டோ, ரிவால்டோ அன்ஜென்டினாவின் மரடோனா, இத்தாலியின் பாகியோ, பிரான்ஸைச் சேர்ந்த மைக்கேல் பினாடொனி ஆகியோர் கோல் போடும் முன்னிலை ஆட்டக்காரர்கள்தான். இன்று இந்தியாவில் கால் பந்து உலகின் 'டெண்டுல்கராக' இருப்பவர் கேரளாவைச் சேர்ந்த ஐ.எம்.விஜயன். இவருடைய பெற்றோர்கள் கேரளாவில் கால் பந்து ஸ்டேடியத்தில் பாப்கார்ன் விற்றுக் கொண்டிருந்தவர்கள். சிறு வயதிலிருந்தே பல போட்டிகளைப் பார்த்து, கால்பந்தின் மீது ஆர்வம் கொண்டு, பயிற்சியில் ஈடுபட்ட விஜயன் இன்று நமது நாட்டில் நம்பர் ஒன் முன்னிலை ஆட்டக்காரர். அதே போல் சிக்கிமில் ஒரு சின்ன கிராமத்திலிருந்து மிகவும் சிரமப்பட்டு, இன்று உயர்ந்திருப்பவர் பவு சிங் புட்டா என்ற ஆட்டக்காரர். 12 வயதில் பயிற்சியைத் துவக்கிய மரடோனா, 17 வருடங்கள் உலகக் கோப்பை ஜூனியர் நிலையிலும், 19 வருடங்கள் சர்வ தேச ஆட்டக்காரராகவும் விளங்கி, கால் பந்து உலகில் ஒரு தனி முத்திரை பதித்து ஓய்வு பெற்றுள்ளார். இன்று





• கே. சங்கர்

கால்பந்து விளையாட்டில் ஆர்வத்துடன் ஈடுபடும் சிறுவர்கள் மரடோனா ஆடிய போட்டிகளை வீடியோவில் அடிக்கடி பார்க்க வேண்டும்.

இப்போது சென்னையில் கால் பந்து குழுக்கள் நூற்றுக்கு மேல் இருக்கின்றன. சந்தோஷ் டிராபி, பெடரேஷன் கப் போன்ற போட்டிகளை ரசிகர்கள் ஆவலுடன் வருடா, வருடம் எதிர் பார்க்கிறார்கள். சென்னையில் பல பள்ளிகளும் கல்லூரிகளும் கால்பந்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அணிகளை அமைத்திருக்கின்றன. ''என் வருத்தம் என்னவென்றால், பல விளையாட்டு வீரர்கள் விளையாட்டுத் தகுதியை வைத்துக் கொண்டு அரசிலும், பெரிய நிறுவனங்களிலும் வேலையில் சேருகிறார்கள். ஆனால் அப்படி சேர்ந்த சில வருடங்களிலேயே அவர்களது ஆர்வம் போய் விடுகிறது. எனவே, எந்த விளையாட்டில் திறமையைக் காட்டி அவர் வேலையில் சேர்கிறாரோ, அதே ஆட்டத்தில் இன்னமும் சிறப்புகளைக் காட்டினால் மட்டுமே பதவி உயர்வு போன்றவை கொடுக்கப்பட வேண்டும்'' என்கிறார் சங்கர்.


''2002 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளில் நடைபெறப் போகிறது. ஜனவரி மாதத்திலிருந்தே கால்பந்து ரசிகர்களைக் காய்ச்சல் பற்றிக் கொண்டு விடும்'' என்று சொல்கிறார் சங்கர்.

சந்திப்பு : **ப்ரியன்**


படங்கள் : ராஜன்

எது பலம்?

வேணுவாரியத் எம். மோகன்தாஸ்






அப்போது அந்த வழியாக ஒரு வேட்டைக்காரன் வந்தான்.
எல்லாரும் சீக்கிரம் ஓடுங்கள்.
கண்டிப்பாகச் சுட்டுடுவான். வேகமாக ஓடுங்கள்.
ம்... இன்னும் வேகமாக...
சிங்க ராணி மட்டும் ஓடாமல் நின்றது.
ஆ... ஐயோ!
வேட்டைக்காரன் சென்றவுடன்-
நண்பர்களே, வேட்டைக்காரன் சென்று விட்டான், தைரியமாக வெளியில் வாருங்கள்.
சிங்க ராணி பேச ஆரம்பித்தது-
நிறையப் பேர் இருந்தால் பலம்னு சொன்னீங்க. ஆனால் வேட்டைக் காரனைப் பார்த்ததும் எல்லோரும் ஓடிட்டீங்களே!
பலமில்லாதவர்கள் நிறையப் பேர் இருந்தும் என்ன பயன்? பலமாக ஒருவர் இருந்தாலே போதும்.
நீ சொல்வது தான் உண்மை.
மற்ற பிராணிகள் வெட்கித் தலை கவிழ்ந்தன.

சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டு முதல் கோகுலம் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. 1998ஆம் ஆண்டு வத்தலக்குண்டு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியும், 1999 ஆம் ஆண்டு ஆண்டிபட்டி பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், 2000வது ஆண்டு



செந்துறை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும் கோப்பையை வென்றன. 2001 ஆம் ஆண்டு சுழல் கோப்பையை இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலச்சீத்தையிலுள்ள ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி கைப்பற்றிக் கொண்டது.

இந்த ஆண்டு 28 பள்ளிகள் போட்டியில் பங்கு கொண்டாலும் 5 பள்ளிகளிடையேதான் ஆரம்பத்திலிருந்தே கடுமையான போட்டி இருந்து வந்தது. அதிலும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலேயே புனித அலாய்சியஸ் பள்ளிக்கும் ஆண்டிபட்டி பள்ளிக்கும் போட்டி ஆரம்பித்து விட்டது. திடீரென மார்ச் மாதம் முதல் கோகுலத்துக்கு மேலச்சீத்தை பள்ளி அறிமுகமானது.

• கோப்பை வழங்கப்பட்டபோது தாளாளர் மற்றும் உதவி தலைமை ஆசிரியருடன் மாணவர்கள்.



அவர்களிடமிருந்து படைப்புகள் வந்து குவிந்தன. தாமதமாகப் போட்டியில் பங்கு பெற்றாலும் இறுதியில் மேலச்சீத்தை பள்ளியே கோப்பையை வென்றுவிட்டது.

நவம்பர் 30ந் தேதி மேலச்சீத்தையில் கோப்பை வழங்கும் விழா நடந்தது.

சென்னையிலிருந்து நீ...ண்ட தூரத்தில் இராமநாதபுரம் மாவட்டம் உள்ளது. அங்கிருந்து அரைமணி நேரம் பயணம் செய்தால் உத்திரகோசமங்கைக்குச் சற்று முன்னால் உள்ளது மேலச்சீத்தை கிராமம். இராமநாதபுரம் என்றாலே வறட்சியான பிரதேசம் என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால் இந்த சீசனில் நல்ல மழை பெய்து எல்லா இடங்களும் பசுமையாகக் காட்சியளித்தன. மேலச்சீத்தைக்குப் போகும்

வழியெல்லாம் நீர் நிரம்பிய வயல்கள், அவற்றில் பெயர் தெரியாத பறவைகளின் விளையாட்டுகள், பச்சை வயல்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வேலை செய்யும் மனிதர்கள் என்று காட்சிகள் கண்ணைக் கவர்ந்தன.

பேருந்தை விட்டு இறங்கி நடக்கும்போது 'கோகுலத்திலிருந்து வருகிறீர்களா?' 'சேதுமாணிக்கம் பள்ளிக்கூடத்துல விழாவாமே?' என்று மக்களின் அன்பான விசாரிப்புகள்.

தலைமையாசிரியருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் வரவில்லை. பள்ளியின் தாளாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

• பள்ளி ஆசிரியர், ஆசிரியைகளுடன்...



வென்றது மேலச்சீத்தை

முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையுள்ள ஆரம்பப்பள்ளி மேலச்சீத்தை ஊருக்குள் சற்று தூரத்தில் இருக்கிறது. ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலான உயர்நிலைப் பள்ளி பேருந்து நிறுத்தத்திற்கருகிலேயே இருக்கிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட கடுமையான புயலினால் கட்டடங்கள் இடிந்துபோய் விட்டனவாம். எனவே பெரும்பாலான வகுப்பறைகள் ஓலைகூரை வேயப்பட்ட இடத்தில் நடக்கின்றன.


மேலச்சீத்தையைச் சுற்றியுள்ள 19 கிராமங்களிலிருந்து மாணவ, மாணவியர் இந்தப் பள்ளிக்குப் படிக்க வருகின்றனர். மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 575. பத்தாம் வகுப்பில் ஆண்டுதோறும் 90% தேர்ச்சி பெறுகிறது இப்பள்ளி. அதற்குக் காரணம் இப்பள்ளி ஆசிரியர்களின் முழுமையான ஈடுபாடும் கடின உழைப்புந்தான் என்று பெருமையாகக் குறிப்பிடுகிறார் தாளாளர். ஜனவரி மாதத்திலிருந்து மாணவ, மாணவியர் இரவில் பள்ளியில் தங்க வைக்கப் பட்டு ஆசிரியர்களால் தேர்வுக்குத் தயாராக்கப் படுகின்றனர். இந்த கவனிப்பு காரணமாய் அருகில் உள்ள உத்திரகோச மங்கை டவுனிலிருந்தும் கூட இப்பள்ளிக்கு நிறைய மாணவர்கள் வந்து சேர்கிறார்கள்.

விழா 11.30 மணிக்கு ஆரம்பமானது. கிராமத் தலைவர், பெற்றோர் - ஆசிரியர் சங்கத் தலைவர் மற்றும் பல பெரியோர்கள் கலந்துகொண்டு



அகதா கிறிஸ்டி எழுதிய 'மௌஸ் டிராப்' (எலிப்பொறி) என்னும் நாடகம் 25.12.1952 அன்று லண்டன் அம்பாசிடர் தியேட்டரில் அரங்கேறி இன்றும் தொடர்ந்து நடந்து வருகிறது.

- ஆர். பிரசன்னா,
கரூர்.



நியூயார்க் நகரைச் சேர்ந்த வால்டர் ஹண்ட் என்கிற மெக்கானிக்தான் முதன்முதலில் ஆடையில் குத்தப் பயன்படும் பின்னை உருவாக்கினார். ஒருநாள் எதையோ யோசித்துக் கொண்டு ஒரு கம்பியை கையில் வைத்து மடக்கிக் கொண்டிருந்தபோது எதிர்பாராமல் அந்தக் கம்பி பின் வடிவில் மடங்க, அதையே பின்னாக உருவாக்கி விட்டார்.

- சித்தோடு
க. பூங்கொடி

பள்ளியையும், கோப்பை கிடைக்கக் காரணமாக இருந்த அருண்குமார், நடராசன், பாண்டியம்மாள் மற்றும் இராமநாதன் ஆகியோரையும் வாழ்த்திப் பேசினர்.

பலத்த கரவொலிக்கிடையே மாணவர்களிடம் கோப்பை வழங்கப்பட்டது. நால்வருக்கும் தனித்தனியே பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளியின் தாளாளர் ''படிக்கும் பழக்கத்தை மாணவர்களாகிய நீங்கள் சிறுவயதிலேயே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கோகுலத்தை உங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வரக்கூடிய ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்த ஆண்டும் நம் பள்ளியே இக்கோப்பையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

மேலும் உதவித் தலைமை ஆசிரியர் மற்றும் பல ஆசிரிய, ஆசிரியைகள் வாழ்த்திப் பேசினர்.

பிறகு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் அருண்குமார் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.

மதிய உணவுக்குப்பின் மீண்டும் ஸ்ரீசேதுமாணிக்கம் பள்ளியில் உற்சாகம். காரணம் கோகுலம் நடத்திய கதைப் போட்டிதான். இதில் 54 மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (முடிவு அடுத்த இதழில்...)

மேலச்சீத்தை ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளியை வாழ்த்துவோம். அடுத்த ஆண்டு சுழல் கோப்பையைப் பெறப் போகும் பள்ளி எது? முயற்சி செய்தால் உங்கள் பள்ளியும் கோப்பையைப் பெறலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நீங்களும் உங்கள் நண்பர்களும் படைப்புகளைக் கோகுலத்துக்கு அனுப்ப வேண்டியதுதான். இப்போதே களத்தில் இறங்குங்கள். கோப்பையைக் கைப்பற்றுங்கள்!

முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பள்ளிகள்

1. ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை.
2. புதிய அலாய்சியஸ் உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.
3. அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி.
4. பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.
5. சோ.சு.க.வி. மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

அட்டையில்:
பெ. நடராசன், நா. பாண்டியம்மாள்,
ஹ. அருண்குமார், குரு, இராமநாதன்
அட்டை மற்றும் படங்கள்: ஸ்ரீஹரி

இடமிருந்து வலம்

1. கடுகு, சீரகம் போன்ற மசாலா பொருட்களில் ஒன்று. கசப்பானது; குளிர்ச்சியானது (5)


4. காலையில் பருகும் பானம் (3)

5. கொழுத்த உடல், குட்டையான கால்கள், நீண்டு குவிந்த வாய் உடைய விலங்கு. குப்பைமேடுகளில் சுற்றித் திரியும் இது (3)

8. தலையில் பூவால் அலங்கரிக்கப்பட்ட குடத்தை வைத்து ஆடும் நடனம் (4)

12. இந்தச் சாதுவான பிராணியைக் காதைப் பிடித்து தான் தூக்க வேண்டும் (3)

குறுக்கெழுத்துப் புதிர்



வலமிருந்து இடம்

3. தங்கத்துக்கு அடுத்து இந்த உலோகம் அணிகலன்களுக்குப் பயன்படுகிறது (3)

7. பிராணிகளில் ________ அதிகமானது ஒட்டகச்சிவிங்கி (4)

10. விளையாட்டுகளில் பந்தை அடிக்கப் பயன்படும் சாதனம் (3)

11. கனற்று கொண்டிருக்கும் கங்குகள் (3)

14. வியப்பு தரும் வகையில் சிறப்பான நிகழ்ச்சி (5)

மேலிருந்து கீழ்

1. உரிக்க, உரிக்க தோலாண்டி, உரிச்சுப் பார்த்தால் மாயாண்டி (5)

2. ________ உடையான் படைக்கு அஞ்சான் (3)

3. ________யும், தோல்வியும் வீரனுக்கு அழகு (3)

9. மழை பொழியாமல் விளைச்சல் குறைந்தால் ________ ஏற்படும் (4)

10. கடிதம் (3)

கீழிருந்து மேல்

5. கல்வி பயிலும் இடம் (3)

6. மேடு என்பதற்கு எதிர்பதம் (4)


12. ஆமை மணலுக்குள் ________ இட்டு குஞ்சு பொரிக்கும். (3)

13. காற்றும் மழையும் தீவிரமானால் ________ உருவாகும் (3)

14. திரிசங்கு நிலை (5)

— பி. திவ்யா,
பத்தாம் வகுப்பு, திருமோகூர்,
மதுரை.

விடை 61 ஆம் பக்கம்



வாயில் என்ன?

ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு உறவினர் ஒருவர் வந்திருந்தார். என் தங்கைக்கு அவரை மிகவும் பிடிக்கும். அதனால் அவரைப் பார்த்தவுடன் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அடுத்த நாள் அவர் ஊருக்குக் கிளம்பினார். என் தங்கையோ இன்னும் இரண்டு நாள் இருக்குமாறு கூறினாள். ஆனால் அவரோ தனக்கு அவசர வேலை இருப்பதால் அன்றே கிளம்ப வேண்டும் என்று கூறினார். இதனால் என் தங்கை அழுதே விட்டாள். பிறகு பேருந்து நிறுத்தத்தில் வந்து நின்றோம். அப்போது ஒரு பேருந்து வந்தது. உடனே என் அப்பா "மினு! மாமாவுக்கு டாடா சொல்லு" என்றார். உடனே அவள் கையை ஆட்டினாள். "வாயில என்ன கொழுக்கட்டையா வச்சிருக்கே? வாயைத் திறந்து டாடா சொல்லு" என்றார் அப்பா. இதைக் கேட்டவுடன் அவள் வாயை 'ஆ'வென்று திறந்து கையை ஆட்டினாள். இதைப் பார்த்து அனைவரும் விழுந்து விழுந்து சிரித்ததில் அடுத்த பேருந்துக்காக காத்திருக்க வேண்டியதாகிவிட்டது.


எங்கள் ஊரில் நடந்தது

வாயில் கொழுக்கட்டையா?

டாடா

என் யூ.கே.ஜி. படிக்கும் தங்கைக்கு அன்று பள்ளியில், 'ட'கர வரிசை எழுத்துக்களான 'ட, டா, டி, டீ...' போன்றவற்றை சொல்லிக் கொடுத்திருந்தனர். அன்று இரவு எங்கள் வீட்டுக்கு ஒரு நண்பர் வந்து பேசிக் கொண்டிருந்தார். அவர் விடை பெற்றுச் செல்லும் போது, என் தங்கையிடம், "டாடா சொல்லு" என்று கூற, அவள், "ட, டா, டி, டீ, டு, டூ..." என்று சொல்லிக் கொண்டே போக, அனைவரும் சிரித்துவிட்டோம்!

- ப. அசோக், பன்னிரண்டாம் வகுப்பு, பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.



சர்ச்சில்...

எனது நண்பன் ஒருவனின் பெயர் வின்சென்ட் சர்ச்சில். ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமையன்று அவனைச் சந்திப்பதற்காக அவனது வீட்டுக்குச் சென்றேன். வாசலில் நின்றிருந்த அவன் அப்பாவிடம் "சர்ச்சில் இருக்கிறானா?" என்று கேட்டேன். உடனே அவர், "சர்ச்சில் இருக்கிறான்" என்று சொல்ல, "அவனைக் கூப்பிடுங்கள்" என்றேன். அதற்கு அவர் சிரித்தவாறே "அவன் வீட்டில் இல்லை. சர்ச்சுக்குப் போயிருக்கிறான். அதைத்தான் சர்ச்சில் இருக்கிறான் என்று சொன்னேன். இன்று ஞாயிற்றுக் கிழமையல்லவா?" என்று அவர் சொல்ல சிரித்துவிட்டேன்.



டக்!


என் அம்மா என்னையும், என் தங்கையையும் அழைத்துக் கொண்டு டெய்லர் கடைக்குப் போய் பாவாடை தைக்க அளவு கொடுத்தார். அப்போது டெய்லரிடம், "நிறைய 'டக்' வச்சு தையுங்க" என்று அம்மா கூறி னார். இதை என் தங்கை கவனித்துக் கொண்டிருந்தாள். சில நாட்கள் கழித்து என் அப்பா பேண்ட் தைக்கக் கொடுப்பதற்காக டெய்லர் கடைக்குச் சென்றார். என் தங்கையையும் அழைத்துச் சென்றார். என் தங்கை டெய்லரிடம், "அப்பா பேண்ட்ல நிறைய 'டக்' வெச்சுத் தையுங்க" என்று கூற, டெய்லர் உட்பட கடைச் சிப்பந்திகள் மற்றும் கடைக்கு வந்தவர்கள் அனைவரும் சிரித்து விட்டனர்!

- ப. சௌந்தர்யா,
மடிப்பாக்கம்.

துவையல்

வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பினேன். வாசலில் விளையாடிக் கொண்டிருந்த தம்பியிடம் "அம்மா என்ன செய்து கொண்டிருக்கிறாங்க" என்று கேட்டேன். "துவையல் செய்து கொண்டிருக்காங்க" என்றான் தம்பி. ஆனால் அம்மா உள்ளே துணிகளுக்கு சோப்புப் போட்டுக் கொண்டிருந்தார். நான் தம்பியிடம், "அம்மா சோப்புப் போட்டுக் கொண்டிருக்கிறாங்க, நீ துவையல் செய்து கொண்டிருப்பதாகச் சொன்னியே?" என்று கேட்க, "துவைப்பதை துவையல் என்றும் கூறலாமே" என்று அவன் சொன்னதும் வியந்தேன்.

- பேச்சியப்பன்,
ராஜபாளையம்.





மழை!

ஒரு நாள் காலை நான் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் அம்மாவும், தங்கையும் கடைக்குச் செல்வதற்காகக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். உடனே நான், "சீக்கிரம் வந்து விடுங்கள். பேப்பரில் மழை பெய்யும் என்று போட்டிருக்கிறது" என்று செய்தித்தாளைக் காட்டினேன். அதைப் பார்த்ததும் என் தங்கை, "பேப்பரில் மழை பெய்யும்னா பேப்பரை உள்ளே எடுத்து வைத்துவிட வேண்டியது தானே" என்று கூறினாள். அதைக் கேட்ட உடன் அனைவரும் சிரிப்பு 'மழையில்' நனைந்து விட்டோம்.


- விநோதா,
விருதாச்சலம்.




நெருப்புக்கோழி

ஆழி——


தென் ஆப்பிரிக்காவில் தான் நெருப்புக் கோழிகள் அதிகம். நெருப்புக் கோழி சுமார் 2.75 மீட்டர் உயரம் இருக்கும். சுமார் 100 கிலோ எடை இருக்கும்! முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும், அவற்றின் அழகிய சிவப்பு இறகுகளுக்காகவும் பண்ணைகளில் வளர்க்கப் படுகின்றன. நேட்டாலின் தேசியப் பறவை நெருப்புக்கோழி







நெருப்புக்கோழியால் பறக்க முடியாது. ஆனால், அது மிக வேகமாக ஓடும். அதன் வேகம் மணிக்குச் சுமார் 90 கி.மீ! இறக்கைகள் பறப்பதற்கு உதவா விட்டாலும், விரைவான ஓட்டத்தின்போது சுக்கான் போலப் பயன்படுகின்றன. நெருப்புக்கோழி ஒரே தாவலில் 4.50 மீட்டர் தாண்டி விடும்!

பண்ணைகளில் வளர்க்கப்படும் நெருப்புக் கோழிகள் சுமார் 68 ஆண்டுகள் உயிர்வாழும்!






இதன் இரை: தாவர விதைகள், இலைகள், பூச்சிகள், பல்லிகள். தினமும் 10 கிலோ எடையுள்ள இரை தின்னும். தன் இரையுடன், இரும்புத் துண்டுகள், கற்கள் முதலிய கடினமான பொருள்களையும் விழுங்கும். அவை, அதன் வயிற்றில் தங்கி, உணவை அரைத்துச் சீரணிக்க உதவுகின்றன!



'நெருப்புக்கோழி' என்பது இங்கே நாம் வைத்த பெயர். இதன் வயிற்றில் ஆணி, கல், நாணயங்கள், கரித்துண்டு முதலியவற்றைக் கண்டவர்கள், இது நெருப்புத் துண்டையும் விழுங்கியிருக்கும் என்று நினைத்து அந்தப் பெயர் வைத்துவிட்டார்கள்.

உலகிலேயே பெரிய முட்டை நெருப்புக்கோழியின் முட்டை தான். முட்டை சுமார் 20 செ.மீ. நீளமும், 15 செ.மீ. குறுக்களவும், 1.5 கிலோ எடையும் இருக்கும்! ஒரு மனிதனின் தலை அளவு! சுமார் 28 கோழிமுட்டை களின் அளவு! ஒருமுட்டையைச் சமைத்தால் 8 பேர்கள் சாப்பிட லாம்! முட்டை வேக 40 நிமிடங்கள் ஆகும்!






நெருப்புக்கோழி முட்டையின் ஓடு 1.6 மி.மீ. கனம் உள்ளது. முட்டையின் மேல் ஒரு மனிதன் ஏறிநின்றால் உடையாது! ஆப்பிரிக்க ஆதிவாசிகள், இந்தமுட்டை யின் உள்ளே உள்ள கருவைப் பயன்படுத்தி விட்டு ஓட்டினைத் தண்ணீர் பாத்திரமாக வைத்துக் கொள் கிறார்கள்!


நெருப்புக்கோழிகளில், ஆண்பறவை, பெண் பறவையைத் தன் இறக்கைகளால் விசிறிச் சந்தோஷப்படுத்தும். தலையை முன்னும் பின்னும் அசைத்து நடனமாடும்!

ஓர் ஆண் நெருப்புக்கோழிக்கு மூன்று நான்கு பெண் நெருப்புக்கோழிகள் துணையாக இருக்கும். அவை தனித் தனியாக இருந்தாலும் ஒரே கூட்டில்தான் முட்டை யிடு கின்றன. மணல் தரையில் பள்ளம் தோண்டி, சுற்றிலும் கற்களை வைப்பதுதான் கூடு! ஒரு பெண் நெருப்புக்கோழி ஒரு பருவத்தில் சுமார் 20 முட்டைகள் இடும்.






முட்டைகளை இரவில் ஆண் பறவையும், பகலில் பெண் பறவையும் மாற்றி மாற்றி அடைகாக்கும். முட்டையிலிருந்து குஞ்சு வெளிவர 42 நாட்கள் ஆகும்.






நெருப்புக்கோழி கத்தும் ஒலி, சிங்கம் கர்ஜிப்பது போல் இருக்கும்! வேட்டைக்காரர்களுக்கே சந்தேகம் வந்துவிடும். இது மாதிரி ஒலி எழுப்பி, இது தன் எதிரிகளிடமிருந்து தப்புகிறது!


பாலைவனப் பறவையான நெருப்புக்கோழி பல நாட்கள் தண்ணீர் குடிக்காமலே சமாளித்துக் கொள்ளும்!



ஒரு நெருப்புக் கோழிக்குக் கோபம் வந்துவிட்டால் ஒரு மனிதனை ஒரே உதையில் கொன்றுவிடும்! இது ஒரு கழுதைப்புலியைக்கூட உதைத்துக் கொன்றிருக்கிறது. இது குதிரை மாதிரி உதைக்கும்!




நெருப்புக் கோழிகள், கூட்டம் கூட்டமாக உறங்கும். ஆனால், அந்தக் கூட்டத்தில் ஒன்றே ஒன்று மட்டும் தூங்காமல் விழித்துக் கொண்டு காவல் காக்கும்! ஆபத்து வரும் போல் இருந்தால், அது குரல் கொடுத்து எச்சரிக்கை செய்யும்!




நெருப்புக்கோழியின் கால்களில் இரண்டு விரல்களே இருக்கின்றன. ஓடும்போது இரு விரல்களில் ஒன்றைத்தான் பயன்படுத்தும். விரல்களின் அடிப்பக்கம் அகன்று இருப்பதால் ஒட்டகத்தைப்போல மணல் வெளியில் சுலபமாக நடந்து போகும்.

இதன் கால்களைப் போலவே கழுத்தும் நீளமானது. எனவே இது பகைவர்களைத் தூரத்தில் இருந்தே கண்டுகொள்கிறது. இதன் கண்கள் மிகப் பெரியவை. சுமார் 5 செ.மீ. ஒரு டென்னிஸ் பந்து அளவு!




ஆதிகாலத்தில், நெருப்புக் கோழிகள் பறக்கக்கூடிய பறவையாக இருந்தன என்றும், தொடர்ந்த பழக்கம் இன்மையின் காரணமாக அந்தச் செயலை இழந்துவிட்டன என்றும் கூறுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்!




தென் ஆப்பிரிக்காவில் ஆட்டு மந்தைகளின் காவலுக்கு நெருப்புக்கோழிகளை வளர்க்கிறார்கள். சில விவசாயிகள், பயிர்களை அழிக்கும் பறவைகளை விரட்டவும் வளர்க்கிறார்கள்!

தென் ஆப்பிரிக்காவில், நெருப்புக் கோழிகளைச் சிறு வண்டிகளில் பூட்டிக்கொண்டு பந்தயங்கள் நடத்துகிறார்கள்!





அங்கே நெருப்புக்கோழியின் மேலே ஓர் ஆள் உட்கார்ந்தும் சவாரிசெய்து பந்தயங்கள் நடத்துகிறார்கள் — குதிரைப் பந்தயம் மாதிரி!



ராமன் சாப்பிட்ட இட்லிகள் எத்தனை?

1. எங்கள் ஊரான ஆதனூர் தொடக்கப்பள்ளியில் மொத்தம் 100 மாணவர்கள் படிக்கிறார்கள். முதல் வகுப்பில் படிக்கும் மாணவர்களில் பாதி அளவுதான் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறார்கள்.

முதல் வகுப்பு மாணவர்களும், இரண்டாம் வகுப்பு மாணவர்களும் சேர்ந்து எண்ணிக்கையில் 52 உள்ளனர். இரண்டாம் வகுப்பு மாணவர்களும் மூன்றாம் வகுப்பு மாணவர்களும் சேர்ந்து எண்ணிக்கையில் 42 உள்ளனர். மூன்றாம் வகுப்பு மாணவர்களும், நான்காம் வகுப்பு மாணவர்களும் சேர்ந்து எண்ணிக்கையில் 34 உள்ளனர். நான்காம் வகுப்பு மாணவர்களும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களும் சேர்ந்து எண்ணிக்கையில் 30 உள்ளனர்.

ஐந்து வகுப்புகளிலும் சேர்ந்து மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 100. மாணவர்களின் எண்ணிக்கை முதல் வகுப்பிலிருந்து பார்த்தால் இறங்கு வரிசையிலும், ஐந்தாம் வகுப்பிலிருந்து பார்த்தால் ஏறு வரிசையிலும் தோன்றும்.

அப்படியானால் ஒவ்வொரு வகுப்பிலுள்ள மாணவர்களைத் தனித்தனியே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

— மணிக்கலா, ஆதனூர்.

II 100 சிற்பிகள், 100 சிலைகளை 100 நாளில் செய்து முடித்தால், ஒரு சிற்பி ஒரு சிலையை எத்தனை நாளில் செய்து முடிப்பார்?

— நா. பாண்டியம்மாள், ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை.

III ஒரு ஊரில் சாப்பாட்டு ராமன் என்ற ஒருவர் இருந்தார். அதே ஊரில் புகழ் பெற்ற உணவகம் ஒன்று இருந்தது. சாப்பாட்டு ராமன் அடிக்கடி அங்கு சென்று உணவு உட்கொள்வது வழக்கம். ஒருநாள் வழக்கம் போல் அங்கு சென்று சாப்பிட்டு விட்டு வெளியே வந்த ராமன், பணம் செலுத்தும் இடத்தில் முதலாளியைப் பார்த்து, "உங்கள் உணவகத்தில் இட்லி மிகவும் பிரமாதமாக உள்ளது. இன்றுடன் சேர்த்து கடந்த 5 நாட்களில், நான் மொத்தம் 50 இட்லிகளைச் சாப்பிட்டுள்ளேன். ஒவ்வொரு நாளும், அதன் முந்தைய நாளைவிட, 3 இட்லிகள் அதிகமாக சாப்பிட்டிருக்கிறேன்" என்று பெருமையுடன் கூறினார்.

அப்படியானால் சாப்பாட்டு ராமன் ஒவ்வொரு நாளும் எத்தனை இட்லிகளைச் சாப்பிட்டார் என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.


— அரவிந்த்.

IV கிமு 50ம் ஆண்டு பிறந்த ஒருவருக்கு கிபி 50ம் ஆண்டில் அவரது பிறந்த நாளின்போது வயது என்னவாக இருக்கும்?

V 'சொன்னால் தெரியும்' என்கிற விசித்திரமான பெயரைக் கொண்டவரின் மகன் 'சொல்லவே மாட்டேன்' என்பவர். கம்பீரமான குதிரை ஒன்றை வளர்த்தார். அற்புதங்கள் பல புரியும் அந்தக் குதிரையின் பெயர் என்னவென்று சொல்லுங்.

— எம். வினோத், விருத்தாசலம்.

விடை 60 ஆம் பக்கம்



"எதுக்கெடுத்தாலும் சத்தியம் பண்ணுவியாமே?"

"யார் சொன்னது? நான் அப்படி பண்ண மாட்டேன். சத்தியமா சொல்றேன்."

- மு. பெரியசாமி

ஜோக்ஸ் எழுதுங்கள்; பரிசை வெல்லுங்கள்!


ஜோக்ஸ் எழுதுபவர்களுக்குப் புத்தாண்டில் இனிய செய்தி. 'பரிசு ஜோக்ஸ்' என்று குறிப்பிட்டு சிறந்த ஜோக்ஸ்களை எழுதி அனுப்புங்கள். மிகச் சிறந்த ஜோக்குகளுக்கு முதல் பரிசு ரூ. 100, இரண்டாம் பரிசு ரூ.50, மூன்றாம் பரிசு ரூ.25, ஆறுதல் பரிசுகளாக தலா இரண்டு ஜோக்குகளுக்கு ரூ. 15 பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.



"கவலைப்படாதீங்க, விஷம் 'படிப்படி'யா இறங்கிடும்."

"எங்கே விஷம் இறங்கற 'படி'ய கொஞ்சம் காமிங்க டாக்டரே!"

- வி. கலாதேவி



இக்காலத்தில் செய்திகளை அனுப்புவதற்கும் பெறுவதற்கும் எவ்வளவோ நவீன வசதிகள் உள்ளன.

தந்தி, தொலை பேசி, மெயில், ஈ-மெயில் போன்ற பல சாதனங்களை இக்காலத்தில் செய்தி போக்குவரத்துக்குப் பயன்படுத்துகிறோம். இம்மாதிரி நவீன சாதனங்கள் கண்டுபிடிக்கப்படாத காலத்தில் செய்திகளை அனுப்பிப் பெறுவதற்கு மக்கள் என்ன நடைமுறைகளைக் கையாண்டார்கள் என்பதை அறியும்போது நமக்கு அதிசயமாகவும் வியப்பாகவும் இருக்கிறது.

ஏசு பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு பாரசீக நாட்டை ஆண்ட டேரியஸ் என்ற மன்னன் செய்தியை அனுப்புவதற்கு ஒரு வினோதமான முறையைக் கையாண்டான்.

அருகருகே உள்ள மலைகளின் சிகரத்தில் உரத்த குரல் படைத்த மனிதர்களை மன்னன் நிறுத்தினான். அரசாங்க உத்தரவுகளை முதல் மலைச் சிகரத்தில் உள்ள மனிதன் உரத்த குரலில் கூவிச் சொல்வான். அதைக் கேட்கும் இரண்டாம் மலையில் உள்ள மனிதன் உரத்த குரலில் அச் செய்தியை அடுத்த மலையில் உள்ளவனிடம் கூறுவான்.

இதே போன்று தொடர்ச்சியாக அரசாங்க உத்தரவு தொடர்பான செய்தி தொலை தூரத்தில் உள்ள மக்களுக்குப் போய்ச் சேருமாறு மன்னன் ஏற்பாடு செய்திருந்தான்.

மிகவும் பழங்காலத்தில் கிரேக்கர்கள் ஒளியைக் கொண்டு செய்திகளை வெகு தொலைவுக்கு அனுப்பும் உத்திகளைக் கையாண்டார்கள்.

மலைகளின் உச்சியில் வெள்ளைத் துணியால் ஆன திரைகளைத் தொங்க விடுவார்கள். அந்தத் திரையின் மீது ஒவ்வொரு எழுத்துகளையும் குறிக்கும் ஒளிக் குறியீடுகளைப் படுமாறு செய்வார்கள்.

திரையில் தெரியும் ஒளிக் குறியீடுகள் மூலம் செய்தியினைத் தெரிந்து கொண்ட அடுத்த மலை உச்சியில் இருப்பவன் அதே குறியீடுகளைப் பட வைத்து அடுத்த மலை யில் இருப்பவனுக்குத் தெரிவிப்பான்.

இதே போன்று திரையில் விழச் செய்யும் ஒளிக்குறியீடுகள் மூலம் தொலை தூரங்களுக்குச் செய்தி அனுப்பி வந்தனர்.

ரோமா புரியின் புகழ் பெற்ற மன்னராக விளங்கிய ஜூலியஸ் சீசர் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் ஆட்களை வரிசையாக நிறுத்தி வைப்பாராம்.

முதல் ஆளிடம் செய்தி சொல்லப்படும். அவன் ஓடிச் சென்று இரண்டாவது ஆளிடம் செய்தியைக் கூறுவான்.

இரண்டாவது மனிதன் மூன்றாவது மனிதனிடம் ஓடிப்போய் செய்தியைக் கூறுவான்.

இதே போன்று செய்தி மிகவும் துரிதமாகத் தொலை தூரத்திற்கு அனுப்பப்படும். இந்தத் தகவலை ஜூலியஸ் சீசரே தமது குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.



ஆப்பிரிக்க நாட்டில் செய்தியை அனுப்புவதற்கு முரசினைப் பயன்படுத்தி வந்தார்கள்.

கடினமான அடிமரத்தில் செய்யப்பட்ட முரசில் வெவ்வேறு வகையான துளைகள் இருக்கும். இந்த முரசைக் கொண்டு வெவ்வேறு வகையான ஒலிகளை எழுப்புவார்கள்.


ஒவ்வொரு வித ஒலிக்கும் இன்ன சொற்கள் என்ற சங்கேதக் குறி உண்டு. முரசின் ஒலி ஒரு மைல் தொலைவு வரை தெளிவாகக் கேட்கும். முரசொலி காதில் விழும் தூரத்தில் உள்ளவர்கள் அங்கிருந்தவாறு மேலும் ஒரு மைல் தொலைவில் உள்ள முரசுக்காரனுக்கு முரசு ஒலி மூலம் செய்தியைத் தெரிவிப்பார்கள்.

இதே நடைமுறையில் செய்திகள் வெகு

செய்திகள் அனுப்பப்பட்ட விதங்கள்...



தொலைவுக்குத் தெரிவிக்கப்படும். இந்த முறையை இன்றும் கூட ஆப்பிரிக்கப் பழங்குடியினர் கையாளுகின்றனர்.



பதினெட்டாம் நூற்றாண்டு கடைசிவரை செய்திகள் போக்குவரத்துத் தொடர்பாக புதுமையான நடைமுறைகள் ஏதும் கண்டுபிடித்துக் கையாளப்படவில்லை.

கிளாட் சாப்பே என்ற பிரெஞ்சுக்காரர் 1792ம் ஆண்டில் ஒளியின் மூலம் செய்தியை அனுப்பும் புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்துப் பயன்படுத்திக் காண்பித்தார்.

சாப்பேயின் முறையில் கைகாட்டி மரங்களில் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். கம்பத்தில் பல கைகாட்டிகள் இருக்கும். எழுத்துகளைக் குறிக்கவும் எண்களைக் குறிக்கவும் தேவையான கைகள் வெவ்வேறு உண்டு.

கம்பத்தில் எழுபது முதல் தொண்ணூறு வரை கைகள் வெவ்வேறு இடங்களில் பொருத்தப்பட்டிருக்கும். எந்தெந்த எழுத்தைக் காட்ட வேண்டுமோ அந்தந்த எழுத்துக்கான கை காட்டிய சரிய,விளக்கொளி புலப்படும். அதை அடுத்த கம்பத்தில் இயக்க வேண்டியவர் தொலை நோக்கியில் பார்த்துத் தானும் அதைப் போல இயக்குவார்.

இவ்வாறு செய்தி தொலை தூரம் செல்லும். அந்தக்காலத்தில் இந்தமுறை நன்கு செயல்பட்டது.

உதாரணமாக பாரீஸ் நகரில் காட்டப்பட்ட விளக்குக் குறி 130 மைல் தொலைவில் இருந்த லில்லி என்ற ஊருக்கு இரண்டே நிமிடங்களில் எட்டிச் சாதனையாகியது.

நெப்போலியனது மகத்தான வெற்றிகளுக்கு இந்த சாப்பேயின் செய்தி அனுப்பும் முறையும் பேருதவியாக இருந்தது.

1809ம் ஆண்டில் மியூனிச் நகரத்தை ஆஸ்திரியர்கள் கைப்பற்றி விட்டார்கள். பாரிஸில் இருந்த நெப்போலியன் அந்தச் செய்தியை சாப்பே முறைச் செய்தி மூலம் அறிந்தான்.

விரைந்து சென்று கடுமையாகத் தாக்கி நகரத்தை மீட்டு பவேரிய மன்னனிடம் ஒப்படைத்தான்.

பிற்காலத்தில் செய்திப் போக்குவரத்து முற்றிலும் நவீனமயமாகியதற்கு சாப்பே முறைதான் வழி அமைத்துத் தந்தது என்று கூறலாம்.

- ஆர்.ஆர். பூபதி

ஆளவந்தார்

ஆர். பொன்னம்மாள்

ஸ்ரீநாத முனிகளின் பேரன்; ஈச்வர முனிகளின் பிள்ளை யமுனைத் துறைவர். இவர் பிறந்த ஊர் வீர நாராயணபுரம். இவரது குரு மகாபாஷ்ய பட்டர்.


அரசரின் ஆஸ்தான குருவாயிருந்த ஆக்கியாழ்வான் மகா கர்வம் கொண்டவன். புலவர்களை வாதுக்கழைத்து தோற்கடித்துக் கப்பம் பெற்று வந்தான். தோற்றவர் தலையில் வென்றவர் காலை வைக்க வேண்டும் என்பது நிபந்தனை. அவன் பாதம் படாத புலவர் தலையே இல்லை! புலவர்கள் ஆக்கியாழ்வான் பேரைக் கேட்டாலே காததூரம் ஓடினர்.

'மகாபாஷ்ய பட்டருக்கும் கப்பம் கட்டுகிறீர்களா? வாதம் செய்ய வருகிறீர்களா?' என்று கேட்டு ஓலை வந்தது. யமுனைத் துறைவர் குருநாதருக்குத் தைரியம் சொல்லி அந்த ஓலையைக் கிழித்தெறிந்தார்.

ஆக்கியாழ்வான் இதைக் கேட்டு கோபத்துடன் மற்றுமொரு ஓலை அனுப்பினான். அதில்,

'ஓலையைக் கிழித்தவனே! சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவனாக இருப்பின் வாதிட வராமல் இருப்பது ஏன்?' என்று எழுதியிருந்தது. யமுனைத் துறைவர் இதற்குப் பதில் அனுப்பினார்.

'நான் வெறும் கவி மட்டு



மல்ல! பிரதிவாதி என்ற யானையை அடக்கும் ஆண் களிறு.'

இந்த ஓலையை அரசனிடம் காட்டினான் ஆக்கியாழ்வான். அரசன் உடனே வாதம் செய்ய வருமாறு யமுனைத் துறைவருக்கு ஓலை அனுப்பினான். அதையும் கிழித்து எறிந்த யமுனைத் துறைவர் ''சாஸ்திர விற்பன்னர்களை எப்படி அழைப்பது என்று இந்த அரசனுக்குத் தெரியவில்லை'' என்று சொன்னார்.

அரசன் யமுனைத் துறைவரைப் பற்றி மற்ற வித்வான்களிடம் விசாரித்தார். பிறகு அவரை அழைக்க பல்லக்கை அனுப்பினார். பல்லக்கிலேறி வந்தார் யமுனைத் துறைவர்.

இதையெல்லாம் கேட்ட பட்டமகிஷியும் அவரைக் காண சபையில் காத்திருந்தாள். அவரது தேஜஸ் அவளை பிரமிக்க வைத்தது.


''யமுனைத் துறைவர்தான் ஜெயிப்பார் என்று என் மனம் சொல்கிறது! நான் சொன்னதற்கு நேர்மாறாக நடந்தால் எனக்கு பட்ட மகிஷி என்ற அந்தஸ்து வேண்டாம்'' என்று சூளுரைத்தாள்.


அரசன் சார்பில் அமைச்சர் 'வென்றவருக்குப் பாதி ராஜ்யம் அளிக்கப்படும்' என்று அறிவித்தார்.

சபை கொள்ளாத கூட்டம். ஆக்கியாழ்வானும் யமுனைத் துறைவரும் எதிரெதிராக அமர்ந்தனர்.

''இந்தச் சிறுவனைத் தோற்கடிப்பதா சிரமம்'' என்று கர்வத்தோடு முணுமுணுத்தான் ஆக்கியாழ்வான்.

''நீங்கள் சொல்வதை நான் தகுந்த ஆதாரங்களுடன் மறுத்து சொல்ல வேண்டும். அதே போல நான் சொல்வதற்கு





பனி...

குளிர்காலங்களில் காற்றின் வெப்பநிலை மிகவும் குறைவாக இருக்கும். அப்பொழுது காற்றில் கலந்துள்ள நீராவி குளிர்ச்சியடைந்து அப்படியே தங்கிவிடுகின்றது. இதைத்தான் பனி என்கிறோம்.

காற்று மறுபடி சூடேறி பனி, நீராவியாகி மேலே போகும்பொழுது காற்றில் கலந்திருக்கும் தூசிகளின் மீது நீராவி படிகிறது. அப்பொழுது வெண்மையான புகை மண்டலம் ஏற்படுகிறது. இதைத்தான் மூடுபனி என்கிறோம்.

குளிர்ப்பகுதிகளில் உள்ள காற்றின் வெப்பநிலை, நீரின் உறைநிலை அளவான 0 டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைவாக இருக்கும். அதனால் காற்றில் கலந்துள்ள நீராவி உறைந்து, வெண்பனி துகள்களாக மாறுகின்றன. இதைத்தான் உறைபனி என்கிறோம்.

— மூ. பெரியசாமி.

எதிர்மறையாக நீங்கள் ஆதாரத்தோடு வாதிட வேண்டும்'' என்றார் யமுனைத் துறைவர்.

''ஆஸ்தான வித்வான் ஆனதால் சலுகை பெற்றான்' என்ற அவப்பெயர் எனக்கு வேண்டாம். முதலில் நீங்கள் ஆரம்பியுங்கள்'' என்றான் ஆக்கியாழ்வான்.

யமுனைத் துறைவர் ''1) உங்கள் தாய் மலடி அல்ல; 2) ராஜா சக்ரவர்த்தி 3) அரசி கற்புக்கரசி. இந்த மூன்றையும் சபையினர் ஒப்புக் கொள்ளும்படி மறுத்துப் பேச வேண்டும்'' என்றார்.

சபை நிசப்தமாக இருந்தது. ஆக்கியாழ்வான் திடுக்கிட்டான். 'தன்னைப் பிள்ளையாகப் பெற்றிருக்கும் தாயை மலடி என்று எப்படி மறுத்துப் பேச முடியும்? அரியணையில் இந்த விநாடி வரை வீற்றிருக்கும் மன்னரை மன்னரல்ல என்று சொல்வதெப்படி? மூன்றாவதாக அரசியைத் தரக் குறைவாகப் பேசினால் தலை கழுத்திலிருக்காதே!' என்று யோசித்தவன் தோல்வியை ஒப்புக்கொண்டான்.

இப்போது கேள்விகளை மறுத்து விளக்கம் தர வேண்டியது யமுனைத் துறைவரின் பொறுப்பு. அப்போதுதானே வென்றதாக அர்த்தம்! அரசர் யமுனைத் துறைவரை மறுத்துப் பேசச் சொன்னார்.

''அரசே! தனி மரம் தோப்பாகாது. ஆக்கியாழ்வார் அவரது தாய்க்கு ஒரே பிள்ளை. ஒரு பிள்ளை பெற்றவள் மலடிக்குச் சமம் என்று சாஸ்திரங்களில் சொல்லி இருக்கிறது. தாய்க்கு பிள்ளை பெறும் பருவம் தாண்டிய பிறகு அந்த மகன் மாண்டு போக நேரிட்டால் தாய் ஒற்றை மரமாவாள். அதனால் அவள் மலடிக்குச் சமம். அடுத்தது தாங்கள் அஸ்வமேதம், ராஜசூயம் போன்ற யாகங்களைச் செய்யவில்லை! அப்படிச் செய்த தருமன், நகுலன், தசரதர் போன்றவர்களே சக்ரவர்த்தி எனப்படுவார்கள். அதனால் தாங்கள் சக்ரவர்த்தி அல்ல!

''மூன்றாவதாக எல்லாப் பெண்களையும் திருமணமாவதற்கு முன் மந்திர ரூபமாகத் தேவதைகள் தீண்டுகின்றன. இது அரசிக்கும் பொருந்துமாதலால் அரசி கற்புடையவர் அல்ல என மறுக்கிறேன்.''

சபையில் பெருங் கரகோஷம் எழுந்தது. அரசி ''என்னை ஆள வந்தீரே'' என்று கண்களில் நீர் பெருக அவரை வணங்கினாள். அது முதல் யமுனைத் துறைவருக்கு 'ஆளவந்தார்' என்ற பெயர் ஏற்பட்டது.

''நிபந்தனைப்படி என் தலையில் உங்கள் காலை வையுங்கள்!'' என்று மண்டியிட்டு அமர்ந்தான் ஆக்கியாழ்வான்.

''வயதில் பெரியவர். சாஸ்திரங்களைக் கற்றவர். உங்கள் தலையில் காலை வைப்பது எனக்கு இழுக்கு'' என்று பெருந்தன்மையாகக் கூறினார் ஆளவந்தார்.

அரசர் ஆளவந்தாரை யானை மேலேற்றி ஊர்வலம் வரச் செய்து சொன்னபடி பாதி ராஜ்யத்தை அளித்தார். அந்த ஆளவந்தார் வைஷ்ணவ குரு. இராமானுஜர் இவரது சீடர்.





ஒவ்வொன்றும் ரூ. 500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!

காலத்தின் அருமை மாணவர்களாகிய உங்களுக்கு நன்றாகவே தெரியும். நேரத்தைத் திட்டமிட்டுச் செயல்படுத்த உங்களுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் 2 கைக்கடிகாரங்களைப் பரிசாக வழங்கி வருகிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பள்ளி முகவரி, வீட்டு முகவரிகளைக் கண்டிப்பாகத் தர வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்கள் ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது. சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 20.1.2002



இந்த மாதப் போட்டி:


இயற்கை சூழ்நிலையில் ஒவ்வொரு உயிரினமும் ஏறக்குறைய இவ்வளவு ஆண்டுகள் உயிர் வாழக்கூடியவை என்று ஆராய்ச்சியாளர்கள் கணித்திருக்கிறார்கள். இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஆறு உயிரினங்களில் குறைந்த ஆயுட் காலத்திலிருந்து அதிக ஆயுட்காலம் வாழ்வதை வரிசைப்படி எழுதி அனுப்புங்கள்.


ஆமை, கிளி, எலி, பாம்பு, யானை, நாய்

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97










கடலில் வாழக் கூடிய பிராணிகளில் ★🐟ம் ஒன்று. நாம் ★🐟 என்று பொதுவாக அழைத்தாலும் இது 🐟 இனத்தைச் சேர்ந்ததல்ல. முள் தோலி வகையைச் சேர்ந்தது. ★🐟க்கு உடலைச் சுற்றி ஐந்து கைகள் இருக்கும். எனவே இதைப்பார்க்கும் போது ★ போல் தோற்றம் தருவதால் கடல் ★ என்று பெயர் ஏற்பட்டது.

★🐟ன் உடல் வழுவழுப்பானது. சுலபத்தில் நம் கைகளால் பிடிக்க முடியாது. பெரும்பாலான ★🐟களுக்கு ஐந்து கைகள் உண்டு. ஐந்துக்கு மேற்பட்ட கைகளுடைய ★🐟களும் கூட உள்ளன.

உடலின் மையத்தில் வாய் இருக்கும். வாயைச் சுற்றிலும் ஐந்து கைகள் காணப்படும். ஐந்து கைகளில் ஒன்று, இரண்டு உடைந்தாலும் ★🐟க்கு ஆபத்தில்லை. ★🐟ன் நடுப்பாகம் சேதம் அடையாத வரை அது உயிரோடிக்கும். உடைந்த கைகள் மீண்டும் ஒரு மாதத்தில் முளைத்து விடும். கைகளின் நுனியில் நூற்றுக் கணக்கான உறிஞ்சு குழல்கள் இருக்கின்றன.

இக்குழல்களின் உதவியால் தான் ★🐟 உணவை உட்கொள்கிறது. இது அசைவப் பிராணி. நத்தை, சிப்பி, சின்ன 🐟, நீர்புழு, தோல் உரிந்த நண்டுகள் தான் ★🐟ன் முக்கிய உணவு.

ஓடுடைய சிப்பி, நத்தை போன்றவற்றின் மீது ஏறி அமர்ந்து தன் கைகளில் உள்ள உறிஞ்சு குழல்களை ஒட்ட வைத்து நெடு நேரம் இழுத்துக் கொண்டே இருக்கும் ★🐟. குறிப்பிட்ட நேரம் கடந்ததும் இரையாகப் பிடிக்கப்பட்ட பிராணி

  க்கு இழந்த கை முளைக்குமா?



யின் தசைகள் சோர்ந்து விடும். அவற்றின் ஓடு திறந்து கொள்ளும். உடனே ஜீரண நீரை உமிழ்ந்து அதைக் கரைத்து வாய்க்குள் தள்ளும்

★🐟. வாயிலிருந்து இரையான பிராணியின் ஓடு மட்டுமே வெளியே வரும். சில சமயங்களில் இரைப்பையை வெளியே கொண்டு வந்து ஜீரண நீரைச் செலுத்தி இரையைப் பைக்குள் திணித்துவிடுவதும் உண்டு. இப்படி இரைப் பையை வெளியே தள்ளி உணவு உட்கொள்ளும் உயிரினம் இந்த ★🐟 மட்டுமே.

★🐟 பகல் நேரத்தில் பாறைகளின் அடிப்புறத்தில் அமைதியாகக் கிடக்கும். இரவு நேரங்களில் இயங்கி இரை தேடும். நிறைய உணவைச் சாப்பிடக் கூடியது.

★🐟களில் நிறைய வகைகள் உள்ளன. உருவம், நிறம் போன்றவற்றில் இவை வேறுபடுகின்றன. வட, தென் துருவ கடல்களைத் தவிர மற்ற பகுதி கடல்களில் ★🐟கள் வசிக்கின்றன.

எஸ். சுஜாதா



சிவப்பு, நீலம், இளம் சிவப்பு, காவி நிறங்களில் கண்களைக் கவரும் வண்ணம் ★🐟கள் காட்சி தருகின்றன.

★🐟ஐ திருப்பிப் போட்டால் கைகளை வில் போல் வளைத்து கரணம் போடுவது போல குப்புறக் கவிழ்ந்து திரும்பிவிடும்.

★🐟ன் உடலைப் பல பாகங்களாக வெட்டினாலும் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் புதிய ★🐟கள் உருவாகிவிடுகின்றன.

சிலர் வீடுகளில் மற்ற 🐟களைப் போல் ★🐟களையும் வளர்ப்பது உண்டு.

வீட்டில் வளர்க்கும்போது தினமும் தண்ணீரை மாற்ற வேண்டும்.

காந்திஜியைச் சுட்டது யார்?



பள்ளி ஆண்டு விழாவுக்குக் காந்திஜியை வைத்து எங்கள் வகுப்பு மாணவர்கள் நாடகம் போட்டனர். மகாத்மாவின் வாழ்க்கையில் சில முக்கிய நிகழ்வுகள் நாடகமாக நடிக்கப்பட்டது. அந்த வகையில் கோட்சே காந்திஜியைச் சுடுவதும் போலீஸில் பிடிபடுவதுமான காட்சி அமைக்கப்பட்டிருந்தது. கோட்சேவாக நடித்தவன் காந்திஜியைச் சுடுவதாகப் பாவனை காட்டி நடித்து முடிக்க, போலீஸ் நண்பர்கள் அவனைச் சுற்றி வளைத்து, "ஏன் மகாத்மாவை சுட்டாய்?" என்று கேட்டனர். நன்றாக நடித்துக் கொண்டிருந்த கோட்சேவாக நடித்த நண்பனுக்கு அந்தச் சமயத்தில் சொல்லித் தந்த வசனமெல்லாம் மறந்து போய்விட்டது. உடனே "வரலாற்று ஆசிரியர்தான் காந்திஜியைச் சுடச் சொன்னார்" என்றான். ஆண்டுவிழா கூட்டமே சிரிப்பொலியில் அதிர்ந்தது. வரலாற்று ஆசிரியர்தான் நாடகத்தை அமைத்தவர். அவர் அதிர்ந்தே போனார்.

— ராமகிருஷ்ணன், காயக்காடு


மின் சப்ளை...

நான் என் ஊருக்கருகில் உள்ள நடுநிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். புவியியல் பாடவேளை. 'ஆப்பிரிக்கா ஏன் இருண்ட கண்டம் என அழைக்கப்படுகிறது?' என்ற கேள்வியை ஒரு மாணவரிடம் கேட்டார் ஆசிரியர். மாணவன், "ஆப்பிரிக்காவில் மின் சப்ளை கிடையாது. அதனால் இருண்ட கண்டம் என்று அழைக்கப்படுகிறது" என்று பதில் கூறியவுடன் ஆசிரியர் உட்பட அனைத்து மாணவர்களும் சிரித்தனர். ஆசிரியர் "ஆப்பிரிக்கா காடுகளும், விஷ ஈக்களும் உள்ள பகுதியாக இருந்ததால், வெகு காலமாக ஆராயப்படாமல் இருந்தது" என்று கூறினார்.

— எஸ். சுப்பிரமணியன், பாளையங்கோட்டை

எதுவரை?

எங்கள் தமிழாசிரியர் நகைச்சுவை உணர்வு மிக்கவர். எனவே நாங்களும் அவரிடம் அதிக உரிமையோடு பழகுவோம். ஒரு நாள் அவர் 'அட்டென்டன்ஸ்' எடுத்து முடித்த பிறகு, "நேற்று எதுவரை பாடம் நடத்தினேன் என்று ஞாபகம்





எங்கள் பள்ளியில் நடந்தது!

இருக்கிறதா?" என்று கேட்டார்.

உடனே ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, "நேற்று 2.55 மணி வரை தான் சார் பாடம் நடத்தினீங்க" என்றான். உடனே வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது. பிறகு அவன் மன்னிப்புக் கேட்டுவிட்டு எதுவரை அவர் பாடம் நடத்தினார் என்பதைக் கூறினான்.

– எம்.வினோத், விருதாச்சலம்

சாப்பிட்டாயா?

நான் மூன்றாம் வகுப்பு படிக்கும்பொழுது நடந்த சம்பவம். மதிய இடைவேளையில் சாப்பிட வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுதுதான் அம்மா சமையல் ஆரம்பித்து இருந்தார். அவருக்கு உடல்நலமில்லை. எனவே நான் சாப்பிடாமல் பள்ளிக்குத் திரும்பிவிட்டேன். பள்ளியில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது என் சோர்வான முகத்தைக் கண்டார். என்னைத் தனியாக அழைத்து சோர்விற்கான காரணத்தைக் கேட்டார். நான் சொன்னபிறகு வலுக்கட்டாயமாக வீட்டிற்கு அனுப்பினார். அரை மணி நேரம் கழித்து வகுப்பிற்குத் திரும்பி வந்தேன். நான் சாப்பிட்டு விட்டேன் என்று கூறியதையும் நம்பாமல் கையை முகர்ந்து பார்த்து அதன் பிறகு நம்பினார் ஆசிரியர். அவரது அன்பை இப்பொழுது நினைத்தாலும் கண்கள் கலங்குகின்றன.

– ஆ. கதிரேஷ், ஈரோடு

மௌனம் சம்மதம்!

ஆங்கில ஆசிரியர் பாடம நடத்தி முடித்துவிட்டு, நடத்திய பாடத்திலிருந்து குறிப்பெடுத்துக் காட்டும்படி சொல்லிவிட்டு அமைதியாக உட்கார்ந்திருந்தார். அப்போது அந்த ஆசிரியரின் உத்தரவுப்படி வெளியில் சென்றிருந்த ஒரு மாணவன் வாசற்படியில் நின்று கொண்டு, "மே ஐ கம் இன் ஸார்" என்றான். ஆனால் ஆசிரியர் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் இருந்தார். மறுபடியும் அம் மாணவன், "மே ஐ கம் இன் ஸார்" என்றான் சத்தமாக. நிமிர்ந்து பார்த்துவிட்டு ஏதும் சொல்லாமல் தலைதாழ்த்திக் கொண்டார் ஆசிரியர். நன்றாகப் படிக்கும் மாணவன் அவன். விளையாடிப் பார்க்க வேண்டும் என்றுதான் ஆசிரியர் அப்படி செய்தார். மூன்று முறை கேட்டுப் பார்த்த அவன் தானே வகுப்புக்குள் வந்து அவன் இடத்தில் உட்கார்ந்து கொண்டான். அனுமதி தராமலேயே வகுப்பில் நுழைந்தது ஆசிரியரைத் திகைக்க வைத்துவிட்டது. ஆசிரியர் சற்றே கோபத்தோடு, "ஏன் அனுமதி இல்லாமல் வகுப்புக்குள் வந்தாய்?" என்று கேட்டார். உடனே அம் மாணவனும் அப்பாவியாய் முகத்தை மாற்றிக் கொண்டு, "மௌனம் சம்மதம்னு வந்துட்டேன்" என்று சொல்ல ஆசிரியர் சிரித்து விட்டார்!

- கிருஷ்ணன், அறந்தாங்கி.

ஆளப் பிறந்தவன்

17 கதை: ராஜி படம்: லலிதா




சோமு குளித்துக் கொண்டிருந்தான்.
ரங்கா, நீ இங்கு எப்படி வந்தாய்? அரண்மனை வாழ்வு அலுத்து விட்டதா? காலில் என்ன...? கடிதமா?
ஆ! ஜெயசிம்மன் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறான். மறுபடியும் வீரசிம்மன் சூழ்ச்சியா?


சோமு நண்பர்களைத் திரட்டினான்.
ரங்கா, முன்னால் பறந்து சென்று வழிகாட்டு.
அதோ, அந்தப் பாறை மீது கிளி உட்கார்ந்திருக்கிறது. ஜெயசிம்மன் அங்குதான் இருக்க வேண்டும்.
இந்தப் பாறையை எப்படி புரட்டுவது?
வரும் வழியில் இரண்டு குதிரைகளைப் பார்த்தேன். அது ஜெயசிம்மனும் லைலாவும் ஏறி வந்ததாகத்தான் இருக்க வேண்டும்.


காட்டுக் கொடிகளைப் பயன்படுத்தி குதிரைகளின் உதவியால் பாறையை இழுக்கலாம்.
நல்ல யோசனை!
பாறை நகர்த்தப்பட்டது.
நண்பர்களே இந்த நாடும் நானும் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.
நண்பா, நமக்குள் பாராட்டுதல்கள் ஏன்? தாமதிக்காமல் வீரசிம்மனுக்கு முன் அரண்மனைக்குப் புறப்பட்டுப் போ...

தொடரும்


கோகுலம்
2002



ஜனவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

பிப்ரவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28		

மார்ச்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

ஏப்ரல்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

மே

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

ஜூன்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

ஜூலை

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

ஆகஸ்ட்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

செப்டெம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

நவம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

எதில் சிக்கனம்?


''இரண்டு பேருக்குக் கால்படி அரிசி போதாதா? எதற்கு இரண்டு படி போடுகிறாய்?'' என்று கேட்டாள் கமலி.

''வெளியே சொன்னால் வெட்கக்கேடு. தரித்திரனுக்குப் பசி அதிகம் என்று தெரியாமலா எழுதி வைத்திருக்கிறார்கள்? தினமும் இரண்டு படி அரிசி சாப்பிடுகிறேன். அபூர்வமாக சோழ தேசத்திலிருந்து வந்திருக்கிறாய்! உனக்குக் கொஞ்சம் கொடுத்துவிட்டு முக்கால் வயிறு சாப்பிடுவேன்'' என்று வருத்தத்தோடு சொன்னாள் தமக்கை கோமதி.

''என்ன உளறுகிறாய்! உன் ஒருத்திக்கு இரண்டு படி வடிப்பாயா? ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே! நாலு வீட்டில் வேலை செய்கிறாய்! எதுவுமே மிச்சமில்லை என்றதுமே சந்தேகப்பட்டேன். தினம் இரண்டு படி வடித்தால் எப்படி சேமிக்க முடியும்? இருட்டி விட்டதே! விளக்கேற்ற வேண்டாமா? எங்கே தீபம்?'' என்று கேட்டாள் கமலி.

''என் புருஷன் போனதுக்குப் பிறகு நான் விளக்கே ஏற்றுவதில்லை! வாழ்க்கையே இருண்டு போச்சு. வீட்டுக்கு மட்டும் எதற்கு வெளிச்சம் என்று நிறுத்தி விட்டேன்'' என்று சலிப்பாகப் பதில் சொன்னாள் தமக்கை.

''அழகுதான் போ. கிழே விழுந்து விட்டதற்காக எழுந்திருக்காமல் அடம் பிடிப்பார்களோ? விளக்கில்லாமல் நான் சாப்பிட மாட்டேன். நான்



கிளம்புகிறேன்'' என்று கமலி புறப்பட, கோமதி சமாதானம் சொன்னாள்.

''ரொம்ப நாள் கழித்து வந்திருக்கிறாய்! சாப்பிடாமல் போகலாமா?'' என்று கூறி மூலையில் போட்டிருந்த பித்தளை விளக்கை எடுத்து வந்தாள். கமலி அதை வாங்கி புளி போட்டுத் தேய்த்து களிம்பைப் போக்கி, துடைத்து குங்குமமிட்டு எண்ணெய் ஊற்றி, ஒரு பழைய துணியைக் கிழித்து திரிதிரித்துப் போட்டு ஏற்றினாள்.

துவையல் அரைத்து, சாதம் வடித்ததும் கமலி தமக்கையுடன் சாப்பிட அமர்ந்தாள்




இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டும் சோறு மீதமாகி விட்டது. ''வயிறு நிறையச் சாப்பிட்டாயா?'' என்று தமக்கையைக் கேட்டாள் கமலி.

''மூச்சு முட்டுகிறது. தினம் நான்கு வாய் போட்டுக் கொள்வதற்குள் பானை காலியாகி விடும். அரைவயிறுதான் நிரம்பி இருக்கும். உன்னைப் பார்த்த சந்தோஷத்தில் வயிறு நிறைந்துவிட்டது'' என்றாள் கோமதி.

''சொக்கா! சொக்கா! சோறுண்டா?''

மாலதி



ஒலி வடிவில்...

பார்வையற்றவர்களுக்கான படிக்கும் கம்ப்யூட்டர் அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் கண்ணாடி பரப்பில் படிக்க வேண்டியதை வைத்துவிட்டால் போதும். அதில் உள்ள செய்திகள் ஒலி வடிவில் கிடைக்கும். அதன் விலை மூன்று லட்ச ரூபாய். அந்த கம்ப்யூட்டரை தயாரித்தது ஜெராக்ஸ் நிறுவனமாகும்.

- ஆறுபாதி புகழேந்தி

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

நவம்பர் போட்டியில் நிறைய பேர் கலந்து கொண்டனர். சரியான விடைகளை எழுதியவர்களில் இருவர் குலுக்கலில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. கழுகு, 2. கிளி, 3. காகம், 4. குருவி, 5. வாத்து, 6. கொக்கு

பரிசு பெற்றவர்கள்

1. எம். மதியழகன்,
பன்னிரண்டாம் வகுப்பு,
வைதீஸ்வரா
மேல்நிலைப்பள்ளி,
மேட்டூர் அணை.

2. ந.தயாசங்கரி,
எட்டாம் வகுப்பு,
அ.வெ.நா. செ. அரசினர்
மேல்நிலைப்பள்ளி,
ஜி. அரியூர்,
விழுப்புரம் மாவட்டம்.

என்று மூன்றாவது குரல் கேட்டது.

''மூக்கா, விளக்கேற்றி கெடுத்துட்டா. இன்றைக்குப் பட்டினிதான்'' என்று பதில் வந்தது. இருவரும் சுற்றுமுற்றும் பார்த்தனர். உருவம் தெரியவில்லை!

''பேசியது யார்? பூத கணங்களுக்குத் தலைவரான எங்கள் திருவிடை மருதூர் சுவாமி மீது ஆணை. சொல்லுங்கள்'' என்று கண்டிப்பான குரலில் கூறினாள் கமலி.

''தாயே! நாங்கள் பிசாசுகள். என் பெயர் சொக்கன். இவன் என் நண்பன் மூக்கன். தினம் இந்த நேரம் இவன் இங்கு வந்து விடுவான். உன் அக்கா ஒருபிடி சாப்பிடுவதற்குள் நாங்கள் இருவரும் பாதிப் பானையைக் காலி செய்து விடுவோம். வெளிச்சம் எங்களின் பகை. அதனால் எங்களால் கீழே இறங்க முடியவில்லை'' என்று பதில் வந்தது.

''பார்த்தாயா அக்கா! தீபத்தின் மகிமையை! எண்ணெய்ச் செலவைப் பார்த்தால் அரிசிச் செலவு அள்ளிக்கொண்டு போய்விட்டது! பிசாசுகளுக்கும் சேர்த்து உழைத்து வடித்துக் கொட்டி இருக்கிறாய்! சிக்கனம் இனி விளக்கிடம் வேண்டாம்'' என்றாள் தங்கை.

அதன்பின் தமக்கை சீக்கிரமே விளக்கேற்றி சீக்கிரமே சேமித்து வசதியோடு வாழ்ந்தாள்.

தூக்கம் பலவிதம்!

• ஒரு நாளைத் தொடர்ந்து 3 நாட்கள் தூங்க விடாமல் செய்தால் இறந்து விடும்.

• துருவத்தில் உள்ள வாத்துகள் தூங்குவதற்காக, பனிக் கட்டியில் ஓட்டை போட்டு அதனுள் படுத்துத் தூங்கும்.

• கிவி பறவை பூமிக் கடியில் ஓட்டையிட்டு உறங்கும்.

• கிரிப்பர் என்ற பறவை, மனிதர்களைப் போல் மல்லாந்து படுத்து உறங்கும்.

• கடல்புறாக்கள் கடல் நீரில் மிதந்தபடியே தூங்கும்.

• வாத்துகளும் அன்னங்களும் தண்ணீரில் மிதந்து கொண்டே தூங்கும்.

• ஆஸ்திரேலியாவில் தவளை வாயன் என ஒரு பறவை உள்ளது. இது தூக்கத்தில் கும்பகர்ணன். சீல் என்ற கடற் பிராணியும் தூக்கத்தில் கும்பகர்ணன். தூங்கிய நிலையிலேயே தண்ணீரின் உள்ளேயும் வெளியேயும் சென்று வந்தபடி இருக்கும்.

• பாம்புகள் இரை தேடும்போது மட்டும் விழித்திருக்கும்.

• முயல் ஒரு மணி நேரத்திற்கு 15 நிமிடம் என்ற விகிதத்தில் தூங்கி எழுந்திருக்கும்.

• வௌவால், கிளி, தலைகீழாகத் தொங்கியபடியே ஒரு காலால் ஏதாவது ஒரு கிளையைப் பிடித்தபடி தூங்கும்.

• ஸ்விப்பட் என்ற பறவைகள் ஒன்றை ஒன்று கட்டியணைத்துக் கொண்டு தூங்கும்.

• குட்டிடெர்ன் என்ற பறவை நீரில் மிதந்தபடி தூங்கும். ஆனால் தொடர்ந்து தூங்கினால் அதன் சிறகுகள் ஊறி மூழ்கி விடும். இதனால் அடிக்கடி விழித்து விழித்து தூங்கும்.

• நீர் யானை மூக்கு மட்டும் வெளியே தெரியும்படி தூங்கும்.

• வி.ஆர். கிருத்திகா, திருச்சி.



கேட்கட்டுமா டாக்டர்?



● **எஸ். எத்திராஜன்,**
அய்யம்பாளையம்.

? 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்றொரு பழமொழி உண்டு. இது நாம் குடிக்கும் குடிநீருக்கும் பொருந்துமா, டாக்டர்?

! பொருந்தும் எத்திராஜன். உடல்நலமிக்கவர்கள் தினமும் 2 லிட்டர் தண்ணீர் குடிக்கலாம். சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள், இதயநோயாளிகள், நீர்க்கோவை நோயுள்ளவர்கள் மருத்துவர் கூறும் அளவுப்படிதான் குடிநீரைக் குடிக்க வேண்டும். அந்த அளவுக்கு மிஞ்சினால் அவர்களுக்குக் குடி நீரும் நஞ்சாகி, உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும்.

● ***க. துளசிராமன், கடம்பரவாழ்க்கை***

? யானைக்கால் நோய் ஏன் கால்களில் மட்டும் ஏற்படுகிறது? உடலின் பிற பகுதிகளைப் பாதிக்காதா, டாக்டர்?

! யானைக்கால் நோய், கால்களை மட்டுமன்றி கைகள், மார்பு மற்றும் பிறப்புறுப்புகள் ஆகியவற்றைப் பாதிக்கும். ஆனால், இந்த நோய்க்கிருமிகள் முதலில் பாதிப்பது கால்களைத்தான். 'வூச்சேரெரியா பாங்கிராப்டை' என்னும் உருண்டைப் புழுக்கள் யானைக்கால் நோயை உண்டு பண்ணுகின்றன. இவை கியூலெக்ஸ் ஃபெட்டிகன்ஸ் எனும் கொசுக்கள் மூலம் ஒரு மனிதரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகின்றன. இக் கொசுக்கள் ஒருவரைக் கடிக்கும்போது யானைக்கால் உருண்டைப் புழுக்கள் அவருடைய உடலில் புகுந்து இந்த நோயை உண்டாக்கும். எப்படியெனில், இந்தப் புழுக்கள் கால்களில் உள்ள நிணநீர்ப்பாதையில் வளரத் துவங்கும். புழுக்கள் பெரிதாக வளர வளர அங்குள்ள நிணநீர்க் குழாய்களையும் நிணநீர் முடிச்சுகளையும் அடைத்துக் கொள்ளும். இதனால் நிணநீர்ப்பாதை பழுதாகி, கால்களில் நிணநீர் தேங்கத் துவங்கும். அப்போது கால்கள் வீங்கும். காய்ச்சல் வரும். இதுதான் யானைக்கால் நோய். இந்த நோய் கால்களைப் பாதிக்கத் துவங்கியதுமே பெரும்பாலோர் சிகிச்சையைப் பெற்று விடுவதால், கால்களோடு நின்று விடுகிறது. நோயைச் சரியாகக் கவனிக்கத் தவறியவர்களுக்குக் கைகளையும் உடலின் பிற பகுதிகளையும் நோய் பாதிக்கும்.

● ***ஜஸ்டின், நெய்வேலி — 2.***

? நல்ல உறுதியான பல்லை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் வேறொரு பல்லைப் பொருத்தும்போது முன்பு இருந்த உறுதித்தன்மை அப்பல்லுக்குக் கிடைக்குமா டாக்டர்?

! நல்ல உறுதியான பல்லை அகற்ற வேண்டிய அவசியமில்லை, தம்பி. இயற்கையான பல்லுக்குச் செயற்கைப் பல் நிகராகாது. உறுதியான பல்லை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் வேறொரு பல்லைப் பொருத்தும்போது முன்பு இருந்த உறுதித்தன்மை அப்பல்லுக்கு நிச்சயம் கிடைக்காது. மேலும், செயற்கைப் பல்லைப் பொருத்திக் கொண்டவர்களுக்குப் பல் ஈறுகளில் அடிக்கடி நோய்த்தொற்று உண்டாகக் கூடிய வாய்ப்பு அதிகம்.



● **ஆர். பிரவின்,**
கோவை — 6.

? ரத்தச் சேமிப்பு வங்கிகளில் ரத்தம் உறையாமல் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?

! மனித உடலிலிருந்து ரத்தம் வெளியில் வந்ததுமே அது உறையத் துவங்கிவிடும் என்பதை நீ அறிவாய்தானே? அதனால் ஒருவரிடமிருந்து ரத்தத்தைப் பெறும்போதே அது உறையாமல் தடுக்கப்பட வேண்டும். அதற்கு மருத்துவர்கள் **A,C,D (Acid Citrate Dex-**

டாக்டர் கு. கணேசன்



trose) எனும் திரவத்தில் ரத்தத்தைச் சேகரிக்கிறார்கள். இந்தத் திரவம் ரத்தம் உறையாமல் திரவ நிலையிலேயே இருக்கும்படி பாதுகாத்துக் கொள்கிறது. மேலும், ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் உயிரோடு இருப்பதற்குத் தேவையான உணவையும் இத்திரவம் தந்து உதவுகிறது. இந்தத் திரவம் கலந்த ரத்தத்தை ரத்தச் சேமிப்பு வங்கிகளில்



ரத்தம் உறையாமல் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?

குளிர்சாதனப் பெட்டியில் 4 டிகிரி சென்டிகிரேட் குளிர்ச்சியில் வைத்துப் பாதுகாக்கிறார்கள். இந்தக் குளிர்ச்சியும் ரத்தம் உறையாமல் இருக்க உதவுகிறது.

● ***ப. இராமநாதன், காரைக்குடி.***

? பாம்பு கடித்த இடத்தில் வாயை வைத்து உறிஞ்சினால் ஆபத்து ஏற்படாதா, டாக்டர்?

! பாம்பு கடித்த இடத்தில் வாயை வைத்து உறிஞ்சும் போது, உறிஞ்சுகிறவரின் வாயில் காயமோ, சிறு புண்ணோ, சொத்தைப் பல்லோ இருந்தால், அவருடைய ரத்தத்தில் பாம்பின் விஷம் கலந்து அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும். அப்படி இல்லாத நேரத்தில், பாம்பின் விஷம் உறிஞ்சுகிறவரின் வயிற்றில் நேரடியாகச் சென்று விட்டால் எந்தக் கெடுதலும் ஏற்படாது. ஆபத்தில்லை.

● ***காழி. ஆர். சீதாராமன், தென்பாதி***

? மூளைக்காய்ச்சல் என்றால் என்ன? இது எதனால் ஏற்படுகிறது? இதைத் தடுக்க என்ன வழி, டாக்டர்?

! நோய்க்கிருமிகள் மூளையைப் பாதிக்கும்போது உண்டாகின்ற காய்ச்சலுக்கு 'மூளைக்காய்ச்சல்' என்று பெயர். இது இரு வகைப்படும். 1. மூளை அழற்சிக் காய்ச்சல். 2. மூளை உறைக் காய்ச்சல். நோய்க்கிருமிகள் மூளைத் திசுக்களைத் தாக்கும்போது வருகின்ற காய்ச்சல் மூளை அழற்சிக்காய்ச்சல். நோய்க்கிருமிகள் மூளை உறைகளை மட்டும் தாக்கும்போது வருகின்ற காய்ச்சல் மூளை உறைக் காய்ச்சல். மூளை அழற்சிக் காய்ச்சல் ஏற்படுவதற்கு ஜப்பானீஸ் பி வைரஸ் கிருமிகள் காரணம். இந்த வகை மூளைக்காய்ச்சல் பெரும்பாலும் குழந்தைகளைத்தான் பாதிக்கும். இந்நோய்க் கிருமிகள் பன்றிகளின் ரத்தத்தில் குடியிருக்கும். 'கியூலெக்ஸ் விஷ்னு' எனும் கொசுக்கள் பன்றியைக் கடித்துவிட்டு, பிறகு மனிதனைக் கடிக்கும்போது அந்த மனிதனுக்கும் இந்த நோய் வந்துவிடும். இந்தக் காய்ச்சலை முழுமையாகக் குணப்படுத்த சிகிச்சை இல்லை. ஆனால், இதனைத் தடுக்க தடுப்பூசி உள்ளது. குழந்தைப் பருவத்திலேயே இந்தத் தடுப்பூசியைப் போட்டுவிட வேண்டும். மூளை உறைக் காய்ச்சல் பல்வகை பாக்டீரியாக் கிருமிகளால் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, காசநோய்க் கிருமிகளைக் குறிப்பிடலாம். காற்று மூலம் இக்கிருமிகள் பரவுகின்றன. இந்தக் காய்ச்சலை முழுமையாகக் குணப்படுத்தி விடலாம். சுத்தமும், சுற்றுப்புற சுகாதாரமும்தான் இந்தக் காய்ச்சலைத் தடுக்க உதவும்.


குருவியும் வைரமும்

இரையைத் தேடி உண்ணவே
இங்குமங்கும் பறந்த ஓர்
குருவி தெருவின் கோடியில்
குப்பை மேட்டைப் பார்த்தது.

குருவி குப்பை மேட்டினைக்
கிளறிக் கிண்டிப் பார்க்கையில்
அருமையான பச்சையில்
ஆன சிறு கல் கண்டது.

பச்சை வைரம் தன்னையே
பருப்பென் றெண்ணிக் குருவியும்
இச்சையோடு அலகினால்
எடுத்து மெல்லக் கடித்தது.

வாயில் போட்டு அதனையே
நாவில் தடவிப் பார்த்ததும்
தூய கல்லைப் போலவே
ருசியிலாது உணர்ந்தது.





'எந்த ருசியும் தெரியலையே
இதனைக் கடிக்க முடியலையே
இந்தக் கூழாங் கல்லினால்
ஏது பயனும் இல்லையே..'

என்று எண்ணிக் குருவியும்
எடுத்த பச்சை வைரத்தை
மீண்டும் அந்தக் குப்பையில்
உமிழ்ந்துவிட்டுப் பறந்தது.

பச்சை வைரம் மனிதர்க்கே,
அரிய செல்வம் ஆயினும்,
பச்சை வைர அருமையைப்
பாவம் குருவி அறியுமோ?

உலகில் மனிதர் மட்டுமே,
உடமை சேர்க்கத் தேடுவர்
விலங்கு பறவை இனங்களோ
இரையை மட்டும் நாடுமே.

என். சுந்தரராமன், மதுரை



புத்தகங்கள் இரவல் தர முடியுமா?

புகழ்பெற்ற எழுத்தாளர் மார்க் ட்வைன் தனது பக்கத்து வீட்டுக்காரரை ஒருமுறை பார்க்கப் போனார். அவரிடம் நல்ல புத்தகங்கள் பல இருப்பதைப் பார்த்து, "இவற்றில் சிலவற்றை நான் வீட்டுக்கு எடுத்துப் போய் படிக்க இரவல் தர முடியுமா?" என்று கேட்டார். அதற்கு அவர், "என்னுடைய புத்தகங்களை நான் வெளியே எடுத்துச் செல்ல எவரையும் அனுமதிப்பதில்லை. வேண்டுமானால் எவ்வளவு நேரமானாலும் இங்கேயே அமர்ந்து நீங்கள் புத்தகம் படிப்பதில் எனக்குத் தடையில்லை" என்று கூறவும் மார்க் ட்வைனுக்கு அவமானமாகப் போய்விட்டது.



• திலகர்



• பெர்னாட்ஷா

பல நாட்களுக்குப் பிறகு பக்கத்து வீட்டு நண்பர் இவரிடம் வந்து, "ஐயா, உங்களது மண்வெட்டியைச் சற்று இரவல் தருவீர்களா...? என் தோட்டத்தில் புல் செதுக்கி விட்டுத் தருகிறேன்" என்றார்.

இதுதான் சமயம் என்று மார்க் ட்வைன், "உங்களுக்குக் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுக்கப் போகிறேன். ஆனால் ஒன்று. நான் எவருக்கும் இதனை வெளியே எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை. நீங்கள் என் வீட்டுத் தோட்டத்தில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இந்த மண்வெட்டியைப் பயன்படுத்திக் கொள்வதில் எனக்குத் தடையில்லை" என்றார்.

பக்கத்து வீட்டுக்காரர் தனது செய்கையால் தனக்கு சேர்ந்த அவமானத்தை நினைத்துக் குறுகிப் போய்த்திரும்பிச் சென்றார்.

— எம். ஜரினா பானு

மறதி

உலகம் முழுவதும் அறிந்த விஞ்ஞானி சர்.ஐசக் நியூட்டன். இவர் பல நாட்கள், உணவைக்கூட மறந்து ஆராய்ச்சியில் மூழ்கிக்கிடப்பார்.

ஒருநாள் நியூட்டனின் நண்பர் ஒருவர் அவர் அறைக்குச் சென்று நியூட்டனுக்காக வைக்கப்பட்டு இருந்த உணவைச்சாப்பிட்டுவிட்டுப் போய் விட்டார்.

சிறிது நேரம் கழித்துச் சாப்பிட வந்த நியூட்டன் தட்டு காலியாகக் கிடந்ததைப் பார்த்து விட்டு, "நான் ஒரு முட்டாள். சாப்பிட்டதை மறந்துவிட்டு மறுபடியும் இங்கே சாப்பிட வந்திருக்கிறேன்"என்றார்!

— ஆர். பிரசன்னா

சம்பளம் போதவில்லை!


பாரத தேசத்தின் விடுதலை வேள்வியில் தீவிரப் பங்கேற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர் லோகமான்ய பால கங்காதர திலகர். இவரின் நடவடிக்கைகளை உளவு பார்ப்பதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் ரகசிய போலீசார் ஒருவரை திலகர் வீட்டிற்குச் சமையல்காரராக அனுப்பி அவரைக் கண்காணித்து வரும்படி ஆணையிட்டது. அந்த ரகசிய போலீஸ்காரரும் அவ்வாறே திலகர் வீட்டிலே சமையல்காரராக அமர்ந்தார். ஆறு மாதங்கள் ஓடிவிட்டன.

ஒருநாள் அந்தச் சமையல்காரர் திலகரிடம், "எசமான், எனக்குச் சம்பளம் போதவில்லை. கொஞ்சம் உயர்த்திக் கொடுங்கள்" என்று கேட்டார். திலகர் அர்த்தச் செறிவுடன் அவரைப் பார்த்துச் சிரித்தார்.

"என்னப்பா, இப்படி குறைபட்டுக் கொள்கிறாய்? சமையல் வேலை செய்வதற்கு நான் உனக்கு மாதம் ஆறு ரூபாய் சம்பளம் தருகிறேன். பிரிட்டிஷ் அரசாங்கம் என்னைக் கண்காணிக்க உனக்கு மாதம் இருபத்தி நான்கு ரூபாய் தருகிறது. இன்னுமா உனக்குத் திருப்தி ஏற்படவில்லை?" என்றார். அந்தத் துப்பறியும் போலீசாருக்கு வியர்த்துக் கொட்டியது. தலை குனிந்தார். அன்றிரவு வெளியே போய்விட்டு வருவதாகச் சொல்லிப் போனவர் திரும்பி வரவேயில்லை.

— கே.சுதர்ஷன்

• மார்க் ட்வைன்



• லால்பகதூர் சாஸ்திரி



பொறாமை!

பிரெஞ்சு நாட்டின் பிரபலமான நாவலாசிரியரான அலெக்ஸாண்டர் டுமாஸ், இலக்கியக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

கூட்டத்தில் இருந்த ஒருவனுக்கு அலெக்ஸாண்டர் டுமாஸின் மீது பொறாமையும், வெறுப்புணர்ச்சியும் இருந்தது. இதனால் பலர் கூடியிருந்த இலக்கிய கூட்டத்தில் அவமானம் ஏற்படுத்த எண்ணினான். பேச்சின் இடையில் எழுந்து அலெக்ஸாண்டர் டுமாஸை நோக்கி "அன்பரே டுமாஸ், உம்முடைய மூதாதையரின் வரலாற்றைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான்.

டுமாஸ் "தெரியும்" என்றார்.

"அவர்களெல்லாம் மிகவும் கேவலமான இனத்தைச் சேர்ந்தவர்களாமே!" என்றான்.

டுமாஸ் மிக அமைதியாக "உண்மை தான்" என்றார். கொஞ்சமும் பொறுமை இழக்காமல் மிக நிதானமான குரலில், "என் தாத்தாவுக்குத் தாத்தா ஒரு வாலில்லா குரங்கு. ஆனால் நண்பரே ஒரு செய்தி தெரியுமா உங்களுக்கு? என் பரம்பரை ஆரம்பமான இடத்தோடு உங்களின் பரம்பரை முடிந்து விட்டது. வாலில்லாக் குரங்குகளான எங்கள் பரம்பரை படிப்படியாக்ப் பரிணாம வளர்ச்சி பெற்று மனிதர்களாகிவிட்டார்கள். ஆனால் உங்கள் பரம்பரையினரோ இன்னும் வாலில்லாக் குரங்குகளாகவே இருக்கிறார்கள்" என்று பதிலளித்தார்.

- ப. சுந்தசாமி

முட்டாள்

ஒருமுறை ஒரு பெண் பெர்னாட் ஷாவைக் காண வந்தார். அவரை மடக்கிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், "இன்று எப்படியும் ஒரு முட்டாளைப் பார்த்து விடுவது என்ற முடிவுடன் புறப்பட்டேன்" என்றார். உடனே பெர்னாட்ஷா "வழியில் கைப்பையில் உள்ள கண்ணாடியை எடுத்து உங்களை ஒருமுறை பார்த்துக் கொண்டிருப்பீர்களே" என்று கேட்டதும் அந்த அம்மையார் மௌனமாகி விட்டார்.

— பா. கவிதா, புதுடெல்லி

உயரம்

மாண்புமிகு லால்பகதூர் சாஸ்திரி பிரதமராக நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த நேரம். புதுடெல்லியில் ஆரம்பப் பள்ளி ஒன்றின் ஆண்டுவிழாவில் தலைமை ஏற்றார். விழாப்பந்தலில் சிறுவர்களும் சிறுமிகளுமாக காணப்பட்டனர். சாஸ்திரி எழுந்து மைக்கின் முன்னே நின்றவாறு பேசத் தொடங்கினார்: "அன்புத் தங்கைமார்களே! தம்பிமார்களே! இந்த ஆண்டின் விழாவுக்கு என்னைத் தலைமைதாங்கத் தேர்ந்தெடுத்ததற்கு நானும் உங்கள் உயர அளவுதான் இருக்கிறேன் என்பதே காரணம் என்று நான் கருதுகிறேன்!" என்றார். அவ்வளவுதான். மறுகணம் தம்பிமார்களும் தங்கைமார்களும் ஆனந்தமாய் கைத்தட்டி ஆர்ப்பரித்தனர்.

— எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி

10. மதுரவாயிலில் மாணவர் அணி

சுந்தர மூர்த்தி என்னும் மூர்த்தி அன்று காலையிலேயே மிகவும் கவலை யோடிருந்தான்.

காரணம் அப்பாவின் ஆணை.

அவருடைய ஆப்த நண்பர் ஒருவர் மதுரவாயிலில் மனை வாங்கி, வீடு கட்டிக் குடியேறிய பிறகு, சுந்தரமூர்த்திக்குச் சோதனைக் காலம் தொடங்கியது. வீட்டில் ஏதாவது சிறப்பாகச் சமைத்தால், அதை மூர்த்தியிடம் கொடுத்து மதுரவாயில் நண்பருக்குத் தரச் சொல்வார். வாரா வாரம் அவர் வாங்கிப் படிக்கும் வார இதழ்களை நண்பருக்குக் கொடுத்தனுப்புவார். எங் காவது சமயச் சொற்பொழிவு நடந்தால், "இது அவனுக்குத் தெரியாது. நீ போய் இந்த அழைப்பிதழ் கொடுத்துட்டு வா" என்பார் அவன் அப்பா.


மூர்த்தியின் வீடு இருப்பது கோயம் பேட்டில். அங்கிருந்து வாரத்தில் ஐந்துநாள் ஷெனாய் நகருக்கு வந்தால் மூன்று நாளுக்குக் குறையாமல் மதுரவாயில் போக வேண்டும். அதுவும் சாலையிலிருந்து தெற்கே செல்லும் வீதியில், செம்மண் புழுதி படிந்த வீதியில் சுமார் ஒரு கிலோ மீட்டர் நடந்து சென்று அப்பாவின் நண்பர் வீட்டை அடைய வேண்டும். அங்கே ஒரு பத்து நிமிடம் தங்கினால்தான் திரும்பி நடக்கத் தெம்பு வரும்.

சில சமயம், "இதை மதுரவாயிலில் கொடுத்துவிட்டு, அப்படியே பள்ளிக்கூடம் போயிடு. வீட்டுக்கு வந்துட்டு போக லாம்னு நினைக்காதே" என்பார் அப்பா. மகனுக்குச் சலுகை தருவதாக அவர் நினைப்பார். மூர்த்தி தன் பாட நூல்கள் நிறைந்த மூட்டையை முதுகில் ஏற்றிக் கொண்டு அப்பா தரும் பொருளைக் கையில் எடுத்துக்கொண்டு கோயம்பேடு டூ மதுரவாயில் டூ ஷெனாய் நகர் என்று டிரிப் அடிக்க வேண்டும்.

அன்று காலையும் அப்படித்தான் அப்பா தந்த ஏதோ ஒரு திருக்கோயில் பிர சாதத்தை எடுத்துக்கொண்டு மதுரவாயில் அடைந்தான். நண்பர் வீடுவரை நடந்து சென்று பிரசாதம் கொடுத்தான். அப்போதே நேரமாகிவிட்டதால், ஒரு நிமிடம்கூட அங்கே தாமதிக்காமல் திரும்பி நடந்தான். பாதி தூரம் கடந்தபோது 'இயற்கை அழைப்பு'- கட்டுப்படுத்த முடியாத 'இயற்கை அழைப்பு!'

அந்தத் தெருவில் ஆளோ வாகனமோ இல்லை என்றதும் ஒரு மறைவிடம் தேடினான்.

இடபுறத்தில் அடர்த்தியான முட்புதர். உடனே ஓட்டமாக ஓடி, புதரின் மறைவில் சென்றான். அப்போது தற்செயலாக, அந்த



அக்னிக் குஞ்சுகள்!

முட்புதரின் மறுபக்கத்தில், மண்ணைத் தொடாமல் புதரின் கிளைகளின் இடையே ஒரு பை தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டான்.

அது என்ன பை? யாருடைய பை?

இவையெல்லாம் அவனுக்குத் தேவையற்றவை. ஆனாலும் அவன் கண் அந்தக் காக்கிப் பையில் 'வி. நடேசன் -IX வகுப்பு' என்று பெரிய எழுத்தில் கரிய வண்ணத்தில் 'ஸ்கெச்' பேனாவால் எழுதியிருந்ததைப் பார்த்துவிட்டது.

தன் 'வேலை' முடிந்ததும் காலை எடுத்து ஓரடி முன்னே வைத்துப் பார்த்தான்.

பெயர், வகுப்பின் கீழே திரு.வி.க பள்ளி என்று இருந்தது. மூர்த்தி அதே பள்ளியில் எட்டாம் வகுப்பு படிப்பவன்.

'இது நம்ம நடேசன் பைதான்' என்று உணர்ந்த மூர்த்தி, இன்னும் இரண்டடி முன்னே சென்று, பையை முட்புதரிலிருந்து விடுவித்து, எடுத்துக் கொண்டான். முதுகில் ஒரு பையும், தோளில் ஒரு பையுமாக - 'நடேசன் பை இங்கே எப்படி வந்தது?' என்று யோசித்துக்கொண்டே சாலையை நோக்கி நடந்தான்.

அந்தப் பையைத்தான் மூர்த்தி உணவு இடைவேளையின்போது, நடேசனிடம் கொடுத்தான். காலையில் அவன் பள்ளிக்குள் நுழையும்போதே வகுப்புகள் தொடங்கிவிட்டன. அதனால் அப்போது தர முடியவில்லை. இப்போது தந்தான்.

பையைப் பெற்றுக்கொண்ட நடேசன், "என் பை, உன் கைக்கு எப்படி வந்தது?" என்று கேட்டபோது, காலையில் மதுரவாயிலில் ஒரு முட்புதரில் அதைக் கண்டெடுத்ததைச் சொன்ன மூர்த்தி, "ஆமாம், உன் பை எப்படி மதுரவாயில் முட்புதரில் பதுங்கியது?" என்று கேட்டான்.

"மூர்த்தி, அதை அப்புறம் சொல்றேன்"



டாக்டர் பூவண்ணன்

என்றான் நடேசன். அருகிலிருந்த நெடுமாறன், "மூர்த்தி, பை கிடைத்த முட்புதரை எனக்குக் காட்டறியா?" என்று கேட்டான்.

இப்படி நடேசன் கேட்காமல், நெடுமாறன் கேட்பது அதிசயமாக இருந்தது. ஆனாலும் "காட்டறேன். நாளைக்கு சனிக்கிழமை, விடுமுறைதானே. காலையிலே எங்க வீட்டுக்கு வாங்க. அழைச்சிட்டுப் போய், நடேசன் பை கிடந்த புதரைக் காட்டறேன்" என்று கூறிவிட்டுத் தன் வகுப்பு நோக்கிச் சென்றான்.

நடேசன் தன் பையைத் திறந்து, உள்ளே உள்ளவற்றைப் பார்வையிட்டான். "எல்லாம் சரியா இருக்கு. என்னைக் கடத்திய காரில் விட்டுவிட்ட பை, மதுரவாயில் முட்புதருக்கு எப்படி வந்தது?" என்று மனம் சிந்தித்ததை, வாயும் வெளிப்படுத்தியது.

"நடேசா, நீ அந்தக் காரிலிருந்து தப்பிய இடமும் மதுரவாயில்தானே! அதே ஊரில் உன் பை கிடைத்திருக்கிறது. இதில் ஏதோ ஒரு தொடர்பு இருக்கலாம்னு தோணுது. நாளைக்கு நாம் போய்ப் பார்ப்போம். உனக்கு மூர்த்தியின் வீடு தெரியுமா?" நெடுமாறன் கேட்டான்.

"தெரியும். நாளை காலை நான் உங்க வீட்டுக்கு வரேன். ரெண்டு பேரும் ஒண்ணா போவோம்" என்றான் நடேசன்.

"நானும் வருகிறேன்" என்றான் அருள்மொழி, இளங்கோவும் வருவதாகக் கூறினான். மனோவும் அப்படியே சொன்னான்.


அதன்படி மறுநாள் சனிக்கிழமை. மூவேந்தரும் நடேசன், மனோவும் சேர்ந்த ஐம்பெருங் குழு பேருந்தில் புறப்பட்டு முதலில் கோயம்பேடு சென்றது. அங்கே மூர்த்தியை அழைத்துக்கொண்டு, மதுரவாயில் சென்றது.

மதுரவாயில் பேருந்து நிறுத்தத்தில் ஆறு பேரும் இறங்கினர். மூர்த்தி "மேற்கே போகணும்" என்று கூறியபடி நடந்தான். மற்றவர் பின் தொடர்ந்தனர்.


சிறிது தூரம் நடந்ததும், நெடுமாறன் நின்றான். அந்த இடத்துக்கு அருகே எஸ்.டி.டி. பூத் இருந்தது. நடேசன் ஆபத்தில் சிக்கிய நாளில் அங்கிருந்துதான், மாறன் வீட்டுக்குப் போன் செய்தான். அதைப் பார்த்த நெடுமாறன் மற்றவர்களுக்கு அந்த பூத்காரர் செய்த உதவியைத் தெரிவித்தான்.

உடனே அருள்மொழி, "நாம் அனைவரும் போய் பூத்காரருக்கு நன்றி சொல்லலாமே!" என்று தெரிவித்த யோசனையை மற்றவர் ஏற்றுக் கொண்டனர்.

மறுநிமிடம் ஆறுபேர் குழு, அந்த பூத்தை



பாலைவனம்



உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் சகாரா. இதன் பரப்பளவு 84,00,000 ச. கிமீ. இது வெப்பமிகுந்த பாலைவனமாயினும் இரவில் கடுங் குளிர் நிலவும். இதற்குக் காரணம் அங்கு மேகம் இல்லாமையாகும். இத னால் வெப்பமும் இரவில் நிலவின் குளுமையும் நேரடியாகத் தாக்குகிறது. எனவே வெப்பமும், குளிரும் அதிகம் நிலவுகின்றன. பாலையென்றாலே நீர் மிக மிகக் குறைந்த வறண்ட நிலம் என்று பொருள். சிலியிலுள்ள அடகாமி பாலை வனம்தான் உலகிலேயே மிக மிக வறண்ட பகுதியாகும். கடந்த 400 ஆண்டுகளாக அங்கு மழையே இல்லை என்று கூறப்படுகிறது.

- க. பூங்கொடி, சித்தோடு

நிறைத்தது.

பூத்காரர் முதலில் திகைத்தாலும், நடேசனை இனங் கண்டு கொண்டார். பிறகு நெடுமாறனைப் பார்த்தார். உடனே, "வாங்க! வாங்க! எல்லாரும் புத்தக வங்கி யின் பிரமுகர்கள் என்று நினைக்கிறேன்!" என்று உற்சாகமாக வரவேற்றார்.

உடனே நெடுமாறன், நண்பர்களை அறிமுகப்படுத்தினான்.

அறிமுகம் முடிந்ததும், அருள்மொழி பேசினான்:

"ஐயா, நீங்கள் செய்த உதவிதான் எங்கள் நடேசனைக் காப்பாற்றியுள்ளது. அதை அறிந்த உடனே உங்களுக்குத் தொலைபேசி மூலமாவது நன்றி தெரி விக்க நான் விரும்பினேன். ஆனால் உங் கள் பெயரையோ, போன் நம்பரையோ தெரிந்துகொள்ளாமல் வந்து விட்டார்கள்..."

அருள்மொழி முடிக்கும் முன் பூத்காரர் தன் மேஜை அறையிலிருந்து ஒரு விசிட்டிங் கார்டு எடுத் துக் கொடுத்தார்.

அருள்மொழி அதை வாங்கிப் பார்த்து,

"கண்ணன்! அருமை யான பெயர்! உதவி செய்வதில் கண் ணனுக்கு நிகர் யாருமில்லையாம். பாரதி யார் சொல்கிறார்" என்றான்.

பூத்காரர் கண்ணன் முகத்தில் மெல் லிய புன்னகை படர்ந்தது. "தினையளவு உதவி செய்தால் - அதைப் பனையளவாய்ச் சொல்வார், பயன் தெரிவார் என்பது உண்மைதான் போலிருக்கிறது" என்றார்.

"சபாஷ்! நீங்கள் சொன்னது ஒரு இலக்கிய வரி என்று தெரிகிறது. உங்கள் நட்பை நாங்கள் போற்றி வளர்ப்போம்" என்று கூறிய அருள்மொழி, அந்த முகவரி அட்டையைத் தன் பாக்கெட்டில் வைத் துக்கொண்டான்.


"எல்லோரும் இங்கே வந்திருக் கிறீங்களே, ஏதாவது விசேஷமா?"

கண்ணன் கேட்டதும், "விசேஷம்னு சொல்ல முடியாது. ஒரு விசாரணை என்று சொல்லாம்" என்று கூறிய அருள்மொழியே, நடேசனின் பள்ளிப் பை கிடைத்த இடத்தைப் பார்வையிட வந்ததை விளக்கினான்.

கேட்ட கண்ணன், "என் உதவி தேவைப்பட்டால் தயங்காமல் தொடர்பு கொள்ளுங்கள்" என்றார்.

அப்போது பேருந்து நிறுத்தத்தில் ஒரு பேருந்து வந்து நின்றது. அதிலிருந்து ஏராளமான சிறுவர்கள் சாரண உடை யணிந்து, முதுகில் ஒரு பையும், கையில் ஒரு கோலுமாய் இறங்கி, அருகே இருந்த தெருவில் நடந்தனர். அருள்மொழி அவர்களைப் பார்த்து, "கண்ணன், ஒரே சாரணர் கூட்டமாக இருக்குதே! இங்கே ஏதாவது திருவிழாவா?" என்று கேட்டான்.

திருவிழாக்களில் மக்களுக்கு உதவி செய்யச் சாரணர் செல்வதுண்டு என்பது அருள்மொழிக்குத் தெரியும். "இந்த ஊரின் பின்னே பெரிய மாந்தோப்பு இருக்கிறது. அங்கே அடிக்கடி சாரணர் முகாம் நடக்கும்.



உலகிலேயே மிகப் பெரிய ஆலமரம் கல்கத்தாவிலுள்ள தாவரவியல் தோட்டத்தில் உள்ளது. இது சுமார் 2 ஏக்கர் விஸ்தீரணத்தில் பரவி உள்ளது. இதில் மட்டும் சுமார் 1600க்கும் மேற்பட்ட விழுதுகள் உள்ளன. இதன் உயரம் 35 அடி. கிழக்கு மேற்காக இதன் குறுக்களவு 300 அடியாகும். தெற்கு வடக்கில் 283 அடியாகும்.

எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி.

மாவட்ட சாரணர் முகாம் இன்றிலிருந்து மூன்று நாட்கள் நடக்க இருக்கிறது. பல நூறு சாரணர்கள் வருவார்கள். காலையிலிருந்து இப்படி சாரணர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்றார் கண்ணன்.

அதேசமயம், சாரணச் சிறுவன் ஒருவன், அங்கு வந்து ''போன் செய்து கொள்ளலாமா?'' என்று கேட்டதும்; அருள்மொழி முதலியோர் கண்ணனிடம் விடை பெற்றுப் புறப்பட்டனர்.

மூர்த்தி வழி காட்ட மற்ற ஐவரும் அவனைப் பின் தொடர்ந்தனர். மதுரவாயில் மேற்கு எல்லையைத் தொட்ட செம்மண் சாலையை அடைந்தனர்.

''இந்தத் தெருவில்தான், அதோ அங்கே தெரிகிறதே அந்தப் புதரில்தான் பையைக் கண்டெடுத்தேன்.''

மூர்த்தி சுட்டிக் காட்டிய திசையில் கரு வேலம் முட்செடிகள் - அடர்த்தியாக- ஆனால் அதிக உயரமில்லாமல் - ஒரு பத்து மீட்டர் நீளத்துக்கு, ஐந்து மீட்டர் அகலத்துக்குச் செழித்து வளர்ந்திருந்தன.

ஆறு பேரும் ஏதோ ஒருவகை பரபரப்போடு நடந்து அந்த இடத்தை அடைந்தனர்.

மூர்த்தி அந்தப் புதரின் கிளைகளை விலக்கி, தான் பையைக் கண்ட இடத்தை அடைந்தான்.

''இதோ இந்தச் செடியில் - பை தொங்கிக் கொண்டிருந்தது.''

மூர்த்தி சொன்னதை மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருக்க, நடேசன் கவனம் வேறு எங்கோ சென்றது. அவன் காதுகள் கூர்மையாகி வேறெதோ ஒரு சத்தத்தை உன்னிப்பாகக் கேட்டது. உடனே புதரில் படிந்த தன் பார்வையைப் பேருந்து செல்லும் நெடுஞ்சாலைக்கு மாற்றினான்.

நெடுஞ்சாலையிலிருந்து ஒரு கறுப்பு அம்பாசிடர் கார் அந்தச் செம்மண் சாலையில் திரும்பி, உள்நோக்கி வந்துகொண்டிருந்தது. உடனே நடேசன், ''கறுப்பு அம்பாசிடர் கார் வருது. என்னைக் கடத்திய காருடன் சேர்ந்து என்னைத் தேடிய கார் இதுன்னு நினைக்கறேன்'' என்றான்.

உடனே மாறன், ''காரிலிருப்பவர்கள் நம்மைப் பார்க்கக் கூடாது. மறைஞ்சுக் கோங்க'' என்று சொன்னான். உடனே அனைவரும் புதரின் மறுபக்கம் நகர்ந்து, ஒளிந்து கொண்டனர்.

நெடுஞ்சாலையிலிருந்து செம்மண் சாலை கொஞ்சம் தாழ இருந்ததால் அம்பாசிடர் வேகம்குறைத்து செம்மண்ணில் இறங்கியது. அதன் பின்பும், அந்தச் சாலை குண்டும் குழியுமாக இருந்ததால், கார் குலுங்கிக் குலுங்கி நகர, செம்மண் புழுதி மேலெழுந்து, செம்மேகம் போலப் பரவி, காரைச் சுற்றி முற்றுகையிட்டது. கார் மெதுவாகச் செல்ல, செம்மண் புழுதியும் அதனோடு சேர்ந்து நகர்ந்தது.

புதரின்பின் இருந்த நடேசன் மட்டும் மெதுவாகத் தன் முன்னிருந்த செடியை விலக்கி, பார்வையைக் கூர்மையாக்கிப் பார்த்தான்.

கார் மெதுவாகப் புதரை நெருங்கியது.

- தொடரும்

எட்டாத வெண்ணிலா எங்க வீட்டு அடுப்பில் காயுது - அது என்ன?

விடுகதைக்கு விடை என்ன?



I.

1. கோணக் கோணப் புளியங்காய் கொங்கு நாட்டுப் புளியங் காய் எங்க நாட்டிலே இருந்து உங்க நாட்டுக்கு வருது - அது என்ன?

2. எட்டாத வெண்ணிலா எங்க வீட்டு அடுப்பிலே காயுது - அது என்ன?

3. திக்குத் தெரியாத காட்டிலே சொக்கன் பந்து அடிக்கிறான் - அவன் யார்?

4. வெள்ளை வெள்ளை மூக்குத்தி. வைரக் கல் மூக்குத்தி! விடியும் முன்னே சிரித்திடும்! விடிந்த பின்னே மறைந்திடும்- அது என்ன?

5. விரலிலே ஒட்டிடும். தரையிலே முட்டிடும் - அது என்ன?

- வே. சுபஸ்ரீ, ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு, அரசினர் மேல்நிலைப்பள்ளி, நல்லூர், வந்தவாசி.

II.

1. வெள்ளை நிறத்தில் கறுப்பு விதை போட்டேன். கண்ணால் பார்க்கலாம். கையால் எடுக்க முடியாது - அது என்ன?

2. எழுந்து, விழுந்து தாவிடும், இரவும் பகலும் இரைந்திடும் - அது என்ன?

3. தலைக்கு மேலே மலரும் பூ. தண்டின் பக்கம் குவியும் பூ. வட்டப்பூ. வாடாத பூ. சூரியன் கர்வம் குலைக்கும் பூ - அது என்ன பூ?

4. குளம் வட்டக் குளம், கொக்கு நீண்ட கொக்கு. குளம் வற்றினால் கொக்கும் வற்றிவிடும் - அது என்ன?

- ஆர். பிரசன்னா, கரூர்

III.

1. வீட்டிக்கு ஒரு முரட்டு சிப்பாய் காவல் - அது என்ன?

2. சட்டையைக் கழற்றியதும் சடக் கென்று உள்ளே விழும் - அது என்ன?

3. பஞ்சை அதிகமாகச் சாப்பிட்டுப் படுத்தே கிடக்குது அது என்ன?

4. மண்ணுக்குள்ளே வெள்ளிக் கட்டி - அது என்ன?

5. இரத்தம் குடித்தே சிவந்தவன் அவன் யார்?

- எஸ்.நரேந்திர ரத்தன் ராஜ், 5ம் வகுப்பு, பாத்திமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, விருத்தாச்சலம்

IV.

1. நிலத்திலே முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி - என்ன செடி?

2. பூட்டுச்சாவி இல்லாத பெட்டி, காசு கொடுத்து வாங்கும் பெட்டி - அது எந்தப் பெட்டி?

3. விரலோடு வளர்ந்தவன் வீணாகிப் போனான் - அவன் யார்?

4. ஆண்டுக்கு ஆண்டு வரும் வரி அடுத் தடுத்து வரும் வரி - அது என்ன வரி?

5. தட்டினால் பறப்பான் தடவினால் சாவான் - அது என்ன?

- ஏ.சி. ரஞ்சித், 8ம் வகுப்பு, ஸ்ரீலஷ்மி வித்யாலயா, அம்மாபேட்டை, தஞ்சை.

விடைகள் :

I. 1. சாலை, 2. தோசை, 3. எலி, 4. விடிவெள்ளி, 5. கால்மெட்டி

II. 1. எழுத்து, 2. கடல், 3. குடை, 4. எண்ணெய், திரி.

III. 1. பூட்டு, 2. வாழைப்பழம், 3. தலையணை, 4. முள்ளங்கி, 5. மூட்டைப்பூச்சி

IV. 1. தலைமுடி 2. தீப்பெட்டி 3. நகம் 4. ஜனவரி, பிப்ரவரி 5. கொசு

வெற்றிக்கு வழி!

டி. ஜானகி

'குமுத நாட்டிற்கு நான் அரசன். அண்டை நாடான அமுத நாட்டிற்கு மகுடபதி அரசன். இரண்டு நாட்டின் பரப்பும் வளங்களும் ஏறக்குறைய சமமாகத்தான் இருக்கின்றன. அமுத நாட்டு மக்கள் ஆரோக்கியத்தோடு வளமாக வாழ்கிறார்கள். என் நாட்டு மக்கள் வறுமையில் வாடுகின்றனர். நாட்டில் சமூக விரோதச் செயல்கள் நடைபெறுகின்றன. இதன் காரணத்தைக் கண்டறிந்தே ஆக வேண்டும். பல நாட்களாக அந்த நாட்டிற்குப் போகவேண்டும், போக வேண்டும் என்று நினைத்து சோம்பலின் காரணமாக போகாமல் இருந்து விட்டேன். இன்று எப்படியும் போயே ஆகவேண்டும்' என்று மனதில் உறுதி பூண்டார் மன்னர் கஜபதி. வியாபாரி போல் மாறு வேடம் பூண்டு அமுத நாட்டிற்குக் கிளம்பினார்.



மாலை நேரத்தில் அமுத நாட்டை அடைந்தார். சற்றுத் தொலைவில் கோபுரம் தெரிந்தது. கோவிலை அடைந்தார்.

ஆலயத்தின் உள் பகுதி சுத்தமாக அழகாக இருப்பதைக் கவனித்தார். சிவ பெருமானை வணங்கி விட்டு கோவிலை விட்டு வெளியே வந்த மன்னர் கஜபதிக்குக் கோவில் வாசலில் ஒரு பிச்சைகாரன்கூட இல்லாமல் இருந்தது ஆச்சர்யமாக இருந்தது. மெதுவாகச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தார்.

மாலை நேரத்தில் குழந்தைகளும், சிறுவர்களும் சாலையில் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். பெரியவர்கள் அதிகமாகத் தென்படவில்லை. பார்த்த சில ஆட்களும் ஏதோ பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தன்நாட்டில் மாலை நேரத்தில் கும்பல் கும்பலாக ஜனங்கள் நின்று கொண்டும் பேசிக் கொண்டும், சண்டை பிடித்துக் கொண்டும் இருப்பது நினைவிற்கு வந்தது. வேடிக்கை பார்த்துக் கொண்டே சென்று கொண்டிருக்கும்போது, ''ஐயா! உங் களைத்தானே!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினார்.

எதிரே ஒரு இளைஞன். அவன் கையில் மன்னர் வைத்திருந்த பொற்காசு மூட்டை. ''ஐயா! தங்கள் இடுப்பிலிருந்து இது நழுவி கீழே விழுந்துவிட்டது. இதைக்கூட கவனிக்காமல் தாங்கள் சென்று கொண் டிருந்தீர்கள். இந்தாருங்கள்'' என்று கூறியபடி மூட்டையை அவரிடம் கொடுத் தான்.

மன்னருக்கு வியப்போ வியப்பு. அதை விட வியப்பு, பொற்காசு மூட்டையை எடுத்து தன்னிடம் கொடுத்த இளை ஞனுக்கு ஐந்து பொற்காசுகள் வெகுமதி யாகக் கொடுத்தபோது அவன் வாங்க மறுத்து விட்டதுதான். பிறர் பொருளின் மீது ஆசைபடாமல் இருக்கிறானே என்று மகிழ்ந்தார். அதேசமயம் தன் நாட்டில் வழிப்பறி, திருட்டு போன்றவை நடை பெறுவதை எண்ணி வருந்தினார்.



மேற்கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு பெரிய மரத்தடி யில் ஏழெட்டு வயது மதிக்கத்தக்க சிறுவர் சிறுமியர்கள் அமர்ந்திருந்தனர். தாடி வைத்திருந்த ஒரு முதியவர் அவர் களுக்கு ஏதோ சொல்லிக் கொண் டிருந்தார். அருகில் சென்று அவர் சொல்வதைக் கேட்கலானார் கஜ பதி. ''உங்களுக்கு நான் துரு வனின் வாழ்க்கையைப் பற்றி சொல்லியிருக்கிறேன். பொய்யே சொல்லாத அரிச் சந்திர மகாராஜாவைப் பற்றி சொல்லியிருக்கிறேன். நாளை யிலிருந்து இராமாயணக் கதை உங் களுக்குச் சொல்லப் போகிறேன். பெற்றோர் களிடம் அன்பும், ஆசானிடம் மரி யாதையும், நாட்டின்மீது பற்றும் உங்கள் இளம் உள்ளத்தில் பதிய வேண்டும். நற் பண்புகளோடு திகழ்ந் தால் நல்ல பிரஜை களாக வரலாம் என் பதை நீங்கள் புரிந்து கொள்ள

வேண்டும் என்பதற்காகத்தான் அடிக்கடி உங்களை வரவழைத்து இம்மாதிரி நற்போதனை வகுப்புகள் எடுக்கிறேன். நேரமாகிவிட்டது. நீங்கள் அனைவரும் உங்கள் வீட்டிற்குச் செல்லலாம்.''

இளம் பிஞ்சு உள்ளங்களில் நல்ல பண்புகளை பதிய வைக்க அந்நாட்டு அரசரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த முயற்சியை மனதிற்குள் கஜபதி பாராட்டினார்.

அப்பொழுது நன்றாக இருட்டி விட்டது. நேரம் செல்லச் செல்ல, இருளின் ஆதிக்கம் அதிகரிக்கவே இரவு எங்கேயாவது தங்கிவிட்டுக் காலையில் நகரத்தின் மற்ற பகுதிகளையும் பார்க்கலாம் என்று எண்ணிய மன்னர் விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு நடக்கலானார். சற்றுத் தொலைவில் மினுக் மினுக்கென்று விளக்கின் ஒளி தெரியவே ஒளி வந்த திசையை நோக்கி நடந்தார். அருகில் சென்றதும் வரிசையாக வீடுகள் இருப்பது தெரிந்தது. பக்கத்தில் இருந்த வீட்டிற்குள் நுழைந்தார்.

''ஐயா! நான் ஒரு வழிப் போக்கன். இன்று இரவு மட்டும் இங்கே தங்க அனுமதி தர வேண்டும்'' என்று திண்ணையில் அமர்ந்திருந்த முதியவரிடம் கேட்டார். உண்மையான வழிப்போக்கன் என்று எண்ணி முதியவர் மன்னரை அன்புடன் வரவேற்றார். மருமகளைக் கூப்பிட்டுச் சாப்பாடு போடும்படி கூறினார். அறுசுவை உணவை ஆடம்பரத்தோடு உண்டு பழக்கமாகிப் போன மன்னர் கத்திரிக்காய் புளிக்குழம்பு சோற்றையும் கீரை கூட்டையும் கஷ்டப்பட்டுதான் சாப்பிட்டார். இருந்தாலும் அந்த எளிய உணவு அவருக்கு நிறைவைத் தந்தது.

தன்னிடம் கொடுக்கப்பட்ட பாயையும் தலையணையையும் பெற்றுக் கொண்டு திண்ணைக்கு வந்து படுத்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு நடுத்தர மனிதர் உள்ளே நுழைந்தார். முக ஜாடையிலிருந்து வந்தவர் முதியவரின் மகன் என்பதை விளக்கின் ஒளியில் தெரிந்துகொண்டார். தங்கக் கட்டிலில் பஞ்சு மெத்தையில் உறங்கும் மன்னருக்குப் பாயில் உறக்கம் வரவில்லை.

வீட்டிற்குள்ளே தந்தையும் மகனும் பேசிக் கொள்வது மன்னரின் காதில் தெளிவாக விழுந்தது.

''அப்பா! காவேரிக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கேன்!'' மகன் சொன்னார்.

''அப்படியா! மாப்பிள்ளை பையன் என்ன பண்றான்?'' முதியவர் கேட்டார்.

''நல்ல வசதியான இடம். பையனுக்கு இருபது ஏக்கர் நிலம் இருக்காம்.''

''அப்படியா! பையன் சொந்தமாகப் பயிர்த்தொழில் செய்யறானா?''

''இல்லை. பையன் வயக்காட்டுப் பக்கமே போறதில்லையாம். கணக்குப் பிள்ளையின் மேற்பார்வையில் விட்டிருக்காங்களாம்.''

''எந்த ஊரு?''

''நம்ம நாட்டிலே இல்லேப்பா. நம்ம பக்கத்து நாடான குமுத நாட்டிலே இருக்கான். என் நண்பன் வேலப்பன் இல்லே. அவனுக்குத் தெரிஞ்சவங்களாம்''

''முத்து! இந்தச் சம்பந்தம் நமக்கு வேண்டாம்?''

''ஏம்ப்பா?''



புதிர் உலக விடைகள்

I முதல் வகுப்பு மாணவர்கள்	28
இரண்டாம் வகுப்பு மாணவர்கள்	24
மூன்றாம் வகுப்பு மாணவர்கள்	18
நான்காம் வகுப்பு மாணவர்கள்	16
ஐந்தாம் வகுப்பு மாணவர்கள்	14
மொத்தம்	100

II 100 நாட்கள்

III முதல் நாள் - 4 இட்லிகள்
இரண்டாம் நாள் – 7 இட்லிகள்
மூன்றாம் நாள் – 10 இட்லிகள்
நான்காம் நாள் – 13 இட்லிகள்
ஐந்தாம் நாள் – 16 இட்லிகள்

IV 99 ஏனென்றால் கிமு 1க்குப் பிறகு கி.பி 1தான் 0 கிடையாது.

V கேள்வியே இல்லாதபோது விடை எப்படி? அந்தக் குதிரையின் பெயர் 'என்னவென்று சொல்லுங்கள்'தான்!

''காவேரி உனக்குத் தங்கச்சி மாத்திரமில்லே எனக்கும் மகள்தாண்டா. தங்கச்சி வாழ்க்கை நல்லா அமையணும்னு நீ எப்படி ஆசைப்படறயோ அதே மாதிரி என் மகள் வாழ்க்கை நல்லா அமையணும்னு நான் விரும்ப மாட்டேனா? குமுத நாட்டில் இருபது ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரனா வாழறதை விட நம்ம நாட்டிலே ஒரு ஏக்கருக்குச் சொந்தமா இருக்கிறவனைக் கட்டிக்கிட்டா சாப்பாட்டுக்கும், துணிக்கும் பஞ்சம் இல்லாம நிம்மதியா சந்தோஷமா வாழ்வா!''

''என்னப்பா இப்படி சொல்றீங்க?''

''உண்மையைத் தாண்டா சொல்றேன். அந்த நாட்டு ராஜா நம்ம நாட்டு ராஜா மாதிரி திறமைசாலி இல்லே. அந்த நாட்டு ஜனங்களும் நம் நாட்டு ஜனங்கள் மாதிரி சுறுசுறுப்பானவங்களா இல்லே. மக்கள் மகா சோம்பேறிகள். மன்னர் அதைவிட பயங்கர சோம்பேறி. நம்ம நாடு மாதிரி அவங்க நாட்டிலே எல்லா வளமும் இருக்கு. ஆனால் மக்களிடம் உழைக்க வேண்டும் என்ற எண்ணமே கிடையாது. உழைக்காமலேயே சாப்பிட வேண்டும் என்ற எண்ணம்தான் பெரும்பாலான மக்கள்கிட்டே இருக்கு. பணக்காரங்களுக்கு வசதி இருக்கு. உழைக்கும் ஏழைகளுக்குச் சாப்பாடு கிடைக்கறதில்லே. அதனாலதான் அந்த நாட்டிலே திருட்டு, வழிப்பறி எல் லாம் இருக்கு. தக்க சமயத்திலே உழாம, பயிரிட வேண்டிய சமயத்திலே பயிரிடாம, உரிய சமயத்திலே களை எடுத்து, நீர் பாய்ச்சாமல் இருந்தால் விளைச்சல் எப்படி கிடைக்கும்?''

''அந்த நாட்டு மன்னர் தகுந்த முயற்சி எடுக்கக் கூடாதா?''

''ஓ... தாராளமாக எடுக்கலாம். மக்களுக்காகத்தான் மன்னரே தவிர மன்னருக்காக மக்கள் இல்லை என்பதை மன்னர் உணர வேண்டும். நோய் உள்ள குழந்தை குணமாகக் கசப்பு மருந்து கொடுப்பதுபோல குடிமக்கள், அதிகாரிகள் திருந்த சில கடுமையான, கண்டிப்பான நடவடிக்கைகளை அரசர் எடுக்க வேண்டும். நம் மன்னர் மாதிரி அடிக்கடி நகர்வலம் வந்து குடிமக்களின் குறைகளைக் கேட்டு அதை நீக்க உடனே முயற்சிக்கணும். சுருக்கமாகச் சொன்னால் கடின உழைப்பும், விடா முயற்சியும்தான் வெற்றிக்கு வழி. முன்னேற்றத்துக்கு வழி. இதை எல்லாம் சோம்பேறி மன்னர் கஜபதி செய்ய மாட்டார். அமுத நாட்டு மாப்பிள்ளை நமக்கு வேண்டாம். நம்ம நாட்டிலேயே உழைப்பாளியான நல்ல மாப்பிள்ளை காவேரிக்குக் கிடைக்காமலா போய் விடுவான்? சரி... சரி... நீ... சாப்பிட்டுத் தூங்கு'' என்றார் முதியவர்.

முதியவர் பேச்சு, தன்னை சாட்டையால் அடிப்பது போல் தோன்றியது மன்னர் கஜபதிக்கு. தன் தவறு புரிந்தது. கடின உழைப்பும் விடா முயற்சியும் இருந்தால் முன்னேற்றம் கிடைக்கும் என்று முதியவர் சொன்னது மன்னர் மனதில் பதிந்தது. நாட்டை ஆள்பவர் சுயநலத்தோடு தனக்காக வாழக்கூடாது. மக்களுக்காக, மக்கள் முன்னேற்றத்திற்காக வாழ வேண்டும் என்று உணர்ந்துகொண்டார். அதன்படி நடக்க மறுநாள் எழுந்ததும் சுறுசுறுப்போடு புதிய மன்னராகத் தன் நாட்டை நோக்கிச் சென்றார்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 வெ	ந்	2 த	ய	ம்	■	ளி	ள்	3 வெ
ங்	■	ம்	■	ள	■	ள்	■	ற்
4 கா	ப்	பி	■	ள்	■	5 ப	ன்	றி
ய	■	■	■	6 ப	■	■	■	■
ம்	ர	ய	7 உ	■	8 க	ர	க	ம்
■	■	■	■	9 ப	■	■	■	ர
டை	ட்	10 ம	■	ஞ்	■	ல்	ண	11 த
ட்	■	ட	■	ச	■	ய	■	ந்
12 மு	ய	ல்	■	ம்	த	13 பு	ற்	14 அ



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

தமிழ்நாட்டு பெர்னாட்ஷா!

காஞ்சிபுரத்தில் நடராசன் – பங்காரு அம்மாள் தம்பதிகளின் மகனாக 1909 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் தேதி அண்ணா பிறந்தார். இயற்பெயர் சி.என். அண்ணாதுரை.

இவருடைய குடும்பம் மிகவும் ஏழ்மையாக இருந்ததனால், அண்ணாவை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை அவருடைய சிற்றன்னை ராஜாமணி அம்மாள் ஏற்றார்.

சிறுவயதில் அண்ணாவுக்குப் படிப்பில் ஆர்வமில்லை. இதனால் எஸ்.எஸ்.எல்.சி தேர்வை மூன்றுமுறை எழுத நேரிட்டது. நம்பமுடியவில்லை அல்லவா? தேர்ச்சி பெற்ற பின் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். அப்போதே அவர் பட்டிமன்றங்களில் பங்கு கொண்டார். அவருடைய பேச்சுத்திறமை நன்றாக வெளிப்பட்டது.

ஏம்.ஏ ஆனர்ஸ் பட்டம் பெற்ற பிறகும் நூல்கள் படிப்பதை அண்ணா நிறுத்தவில்லை. இலக்கியங்கள், வரலாறுகள், புராணங்கள் அனைத்தையும் படித்தார். பேரறிஞராக உருவானார். தமிழ்நாட்டின் ஈடு இணையற்ற பேச்சாளர் ஆனார்.

பாரிமுனை அருகில் உள்ள ஒரு நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். 4 மாதங்களுக்கு மேல் அப்பணியில் நீடிக்கவில்லை.

இந்த நேரத்தில்தான், அரசியல் பக்கம் அவருடைய கவனம் திரும்பியது, நீதிக் கட்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார்.







சங்கீத தந்தி

அமெரிக்காவில் 'சங்கீத தந்தி' முறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு டாலர் பணம் கட்டி ஒரு பாடலை நீங்கள் தந்தியில் அனுப்பலாம். அந்தத் தந்தியைக் கொடுப்பவர் அப் பாடலை ராகம் போட்டுப் பாடிக் காண்பிப்பார். கண் பார்வையற்றவர்களைக் குஷிப்படுத்தவே இம்முறை அதிகமாகக் கையாளப்படுகிறது.

– ஆறுபாதி புகழேந்தி

திருப்பூரில் நடந்த இளைஞர் மாநாடு ஒன்றில்தான் முதன்முதலாக அண்ணாவும், பெரியாரும் சந்தித்துக் கொண்டனர். அண்ணா, பெரியாரின் சீடரானார்.

நீதிக்கட்சி சார்பில் நடைபெற்ற 'விடுதலை' பத்திரிகையின் துணை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அதில் அண்ணா எழுதிய கட்டுரைகள், அவர் புகழை மேலும் உயர்த்தின. நீதிக் கட்சியிலிருந்து திராவிடர் கழகம் தோன்றியது.

கட்சி வளர்ந்து கொண்டிருந்த நிலையில் பெரியார் தன்னுடைய 72வது வயதில் மணியம்மையை மணக்கப் போவதாக அறிவித்தார். இதை அண்ணாவும் மற்ற தலைவர்களும் எதிர்த்தனர். ஆனால் பெரியார்–மணியம்மை திருமணம் நடந்தது.

அண்ணாவும் மற்ற தலைவர்களும் கட்சியை விட்டு விலகினார்கள். 17.9.1949 ஆம் ஆண்டு 'திராவிட முன்னேற்றக் கழகம்' தோன்றியது.

தி.மு.கழகத்தின் பணி அசுர வேகத்தில் இருந்தது. 'வேலைக்காரி' படத்துக்கு அண்ணா எழுதிய வசனங்கள் அவர் புகழை திக்கெட்டும் பரப்பின. இளைஞர்களின் இதயவேந்தர் ஆனார் அண்ணா.

1967ஆம் ஆண்டு தேர்தலில் அனைத்து எதிர்கட்சிகளையும், ஒன்று சேர்த்து, கூட்டணி அமைப்பதில் அண்ணா வெற்றி பெற்றார். காங்கிரசைத் தோற்கடித்து அண்ணா முதலமைச்சரானார்.

ஆட்சியிலிருந்தபோது, அண்ணா அரும்பெரும் சாதனைகளைச் செய்தார். சென்னை ராஜ்ஜியம் என்ற பெயரை அடியோடு ஒழித்து தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் சீரும் சிறப்புமாக நடத்தினார். ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற வாக்குறுதியை அமுலுக்குக் கொண்டு வந்தார். கலப்புத் திருமணம் செய்வோருக்குத் தங்கப் பதக்கம் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

சிறப்பாக அண்ணா ஆட்சி செய்து கொண்டிருந்த நேரத்தில் அவருக்கு உணவுக்குழாயில் புற்று நோய் ஏற்பட்டு, அமெரிக்க மெமோரியல் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடைபெற்று, 1968ல் சென்னை திரும்பினார்.

1969 பொங்கல் தினத்தன்று சென்னை தியாகராய நகர் வாணி மகால் அருகே கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் சிலையைத் திறந்து வைத்தார். அண்ணா கலந்து கொண்ட கடைசி பொதுநிகழ்ச்சி இதுதான்.

மீண்டும் நோய்வாய்ப்பட்ட அண்ணா, தீவிர சிகிச்சைகள் அளித்தும் பலனின்றி காலமானார்.

சகல துறைகளிலும் வல்லவராக அண்ணா விளங்கினார். வேலைக்காரியை அடுத்து 'நல்லதம்பி' 'ஓர் இரவு', 'சொர்க்கவாசல்' முதலிய படங்களுக்குத் திரைக்கதை எழுதினார். 'ரங்கோன்ராதா' உள்பட அவரது பல கதைகள் படமாக்கப்பட்டுள்ளன.

'ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்த எழுத்தாளர் கல்கி அவர்கள் அண்ணாவை 'தமிழ்நாட்டு பெர்னாட்ஷா' என்று புகழ்ந்தார்.

- கமர்தாஜ்,
மரிமானிகுப்பம்.



பெரிய பதவியும் சின்ன புத்தியும்!

படத்தைப் பார்த்த உடனே, "ஆயர் பாடியில் கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த கதை" என்று சொல்லி விடுவீர்கள்! ஆனால் அந்தச் சம்பவத்தின் பின்னணி என்ன தெரியுமோ?

ஆண்டுதோறும் ஆயர்குலத்தைச் சேர்ந்தவர்கள் இந்திர விழா எடுப்பது வழக்கம். இந்திரன்தான், வருணன், வாயு முதலியவர்களுக்கு அதிபதி என்பதால் இந்திர விழா எடுத்து வணங்குவார்கள்.

ஆனால் இந்திரன் தன் உயர் பதவி காரணமாக கர்வம் அடைந்திருந்தான். அவனுக்கு அடக்கம் கற்பிக்கவில்லையென்றால் தவறுகள் செய்வான்; மக்களுக்குத்தான் துன்பம் ஏற்படும் என்பதை உணர்ந்த கண்ணன், யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். ஆயர்பாடியில் அந்த ஆண்டு இந்திர விழா வேண்டாம் என்றும் கோவர்த்தனகிரிக்கு பூஜை செய்து கும்பிட்டால் போதும் என்றும் கூறி, எல்லோரையும் சம்மதிக்க வைத்துவிட்டான்.

இந்திரன் இதைக் கேள்விப்பட்டு கோபமடைந்தான். 'ஆயர்பாடியையே வெள்ளத்தில் மூழ்கடிப்பது' என்று தீர்மானித்து, பலத்த மழை பொழியச் செய்தான். கண்ணன் கோவர்த்தன கிரியைச் சுண்டு விரலில் உயர்த்திப் பிடித்து, எல்லா மக்களையும் மாடு கன்றுகளையும் அதனடியில் தங்கி இருக்கச் செய்து காப்பாற்றினான்.

"சிறுவனாயிற்றே, மலையை நழுவ விட்டுவிட்டால் என்ன செய்வது?" என்று மக்கள் தயங்கவில்லை. கண்ணனை முழுமையாக நம்பி, மலைக்கு அடியில் வந்து ஒதுங்கினார்கள். அதேபோல், நாமும் ஆண்டவனை முழுமையாக நம்பி நமது கடமைகளைச் செய்து கொண்டு போனால், அந்த நம்பிக்கையே நம்மைக் காக்கும்.

சரி, இந்திரன் என்ன ஆனான்? தன் மிரட்டல் பலிக்கவில்லை என்று கண்டதும் கண்ணனின் ஆற்றலை உணர்ந்து தன் தவறுக்கு வருந்தினான். மழை ஓய்ந்தது. ஆயர்பாடி சகஜ நிலைக்குத் திரும்பியது. கண்ணன் தனித்திருக்கும்போது இந்திரன் அவனிடம் வந்து மன்னிப்புக்கேட்டுக் கொண்டான். எல்லோர் முன்னிலையிலும் வந்து மன்னிப்புக் கோர வெட்கம்!

கண்ணன் சொன்னான் : "அமரேந்திரா! ஒருவனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு உயர்ந்த பதவி கிடைக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அடக்கமும் வேண்டும். வரப்போவதை முன் கூட்டியே யோசித்து, முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். ஒரு சாமானியன் தப்புப் பண்ணினால் அது ஒரு சிலரைத்தான் பாதிக்கும். ஆனால் உயர் பதவியில் இருப்பவன் தவறு செய்தால் மிகப் பெரிய அளவில் தீமை விளையும். பெருவாரியான மக்கள் பாதிக்கப்படுவார்கள்."


இந்திரன் புரிந்து கொண்டு திருந்தினான். ஆனால் உலகில் உயர் பதவியில் உள்ள பலர், இதைப் புரிந்து கொள்வதே இல்லை; அதனால் திருந்துவதும் இல்லை!

நாளைக்கு நீங்கள் முதல் ரேங்கில் வரலாம், வகுப்பு 'மானிட்டர்' ஆகலாம். எதிர்காலத்தில் பெரிய பதவிகளில் அமரலாம். ஒவ்வொரு உயர்வின் போதும் கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த கதையை நினைவு படுத்திக் கொள்ளுங்கள், சரியா?

அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்!

- ஆசிரியர்


நிலாவே



* செயற்கை கோளிலிருந்து பார்க்கும்போது பூமியும் நிலாவும்

சந்திரனின் உருவம் பூமியில் கால் பங்கு மட்டுமே! சந்திரன் தூசுகளால் ஆன பாறைக் கோளம்தான். பூமி சந்திரனை விட 81 மடங்கு நிறை அதிகமானது. பூமியும், சந்திரனும் அதனதன் ஈர்ப்பு விசையால் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டு தட்டாமாலை சுற்றிக் கொண்டிருக்கின்றன. பூமியின் நிறை (mass) அதிகமானதால், ஈர்ப்பு சக்தியும் அதிகம். எனவே தான் சந்திரன் பூமியால் ஈர்க்கப் பட்டு, அதனைச் சுற்றி வருகிறது. சந்திரன் பூமியிலிருந்து 3,84,400 கி.மீ தூரத்தில் இருக்கிறது. 1 கிலோ மற்றும் 81 கிலோ எடையுள்ள இரண்டு குண்டுகளை அந்தரத்தில் தொங்கவிட்டு, இரண்டுக்கும் பொதுவான மைய நிறையைப் பார்த்தால், அது 81 கிலோவுக்கு அருகில் இருக்கும். எனவே, பூமி, சந்திரன் இவற்றின் மைய நிறை பூமிக்கு அருகில் உள்ளது. எனவேதான் பூமி சந்திரனை இழுத்து, தன்னைச் சுற்ற வைக்கிறது என்று சொல்லப்பட்டாலும், பூமி, சந்திரன் இரண்டுமே இரண்டுக்கும் பொதுவான பேரிமையத்தைச் சுற்றியே தத்தம் அச்சில் சுழலுகின்றன. பேரி மையம் பூமியிலிருந்து 1700 கி.மீ தூரத்தில் உள்ளது.

பூமியும் சந்திரனும் சம கால வயதுடையவை; ஒரே கால கட்டத்தில் தோன்றியவை என்று கணிக்கப்படுகிறது. இதனைச் சந்திரனிலிருந்து விண்கலங்கள் கொண்டு வந்த பாறைகளைச் சோதித்த போது தெரிந்தது. பூமிக்கும், சந்திரனுக்கும் சுமாராக 480 கோடி வயதாகிறது. சந்திரனும், பூமியும் ஒரே கால கட்டத்தில் சூரியனைச் சுற்றி வந்த ஒரே மாதிரியான வாயுக்கள் மற்றும் தூசுகளின் இணைப்பால், ஈர்ப்பால் உருவாகி, சூரிய மண்டலத்தைச் சுற்றுகின்றன என சில கருது கோள்கள் தீர்மானிக்கின்றன. அதேசமயம், செவ்வாய் போன்ற கோளோ/பாறையோ படு வேகத்தில் பூமி மீது மோதி, அதிலிருந்து சிதறிய பாறைத் துகள்கள் வளையம் போல் முதலில் பூமியைச் சுற்றத் தொடங்கி, பின் அவை ஈர்ப்பு சக்தியால் ஒன்றிணைந்து சந்திரனாயிற்று என சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். பூமியில் காணப்படும் தனிமங்களே,



* நிலாவிலிருந்து பார்க்கும்போது பூமி

சந்திரனில் உள்ளன என்றாலும் அவற்றின் அளவுகள் வேறு, வேறு விகிதத்தில் உள்ளன. இரும்பு போன்ற கனமான தனிமங்கள் சந்திரனில் குறைவாகவே உள்ளன. சந்திரனில் செலீனியம் என்ற தனிமம் அதிகமாக உள்ளது. சந்திரனைப் பற்றிப் படிக்கும் அறிவியலுக்கு 'செலீனாலஜி' என்றே பெயர். சந்திரனின் அடர்த்தி, பூமியின் அடர்த்தியில் 60% அல்லது 1/6 மடங்கு மட்டுமே! அதாவது பூமியில் ஒருவரது எடை 60 கிலோ என்றால், சந்திரனில் அவரது எடை 10 கிலோதான்!

சந்திரன், பூமி மற்றும் சூரியன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருக்கும்போது கிரகணம் ஏற்படுகிறது. சந்திரனுக்கும், சூரியனுக்கும் இடையில் பூமி வரும்போது, சந்திரனை பூமி சூரியனிடமிருந்து மூடி மறைத்து விடுகிறது. இதுவே சந்திரகிரகணம். சந்திர கிரகணம் 'பௌர்ணமி' தினத்தன்றுதான் நிகழும்.




* ஆம்ஸ்ட்ராங், மைக்கேல் காலின்ஸ், ஆல்ட்ரின்

வா, வா!

பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் வரும்போது, சூரிய கிரகணம் ஏற்படுகிறது. சிறிய சந்திரன், மிகப் பெரிய சூரியனை மறைத்து, பூமிக்கு ஒளியைத் தடுத்து விடுகிறது. இது அமாவாசை தினத்தன்று ஏற்படுகிறது. முழு சூரிய கிரகணத்தின் போது, சந்திரனின் நிழல், மணிக்கு 2,250 கி.மீ வேகத்தில் பூமியைக் கடக்கிறது. வருடத்திற்கு 3 முறைக்கு மேல் சந்திர கிரகணம் ஏற்படாது. 18 வருடம், 11.3 நாளைக்கு ஒருமுறை சூரியன், சந்திரன் மற்றும் பூமி மூன்றும் கிட்டத்தட்ட ஒரே இடத்திற்கு வருகின்றன. இதனைச் 'சாரோஸ் காலம்' என்று அழைக்கின்றனர்.

சந்திரனின் சுற்றுப்பாதை நீள்வட்டமாக இருப்பதால், பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலுள்ள தூரம் எப்போதும் ஒரே அளவாய் இருக்காது. சந்திரன் பூமிக்கு வெகு அருகில் வரும் தூரம் 'அண்மைத் தூரம்' என்றும், வெகு தொலைவில் உள்ள தூரம் 'சேய்மை தூரம்' என்றும் சொல்லப்படுகிறது. பூமிக்கும், சந்திரனுக்கும் இடையிலுள்ள சராசரி தூரம் 380,000 கி.மீ. சந்திரனின் சுற்றுவேகம், பூமிக்கு அருகில் வரும்போது வேகமாகவும், சேய்மைக்குச் செல்லும்போது மெதுவாகவும் சுற்றுகிறது. ஒவ்வொரு சுற்றிலும், சந்திரன் வேகமாகவும், மெதுவாகவும் சுற்றுகிறது. இதனால் சந்திரனின் சுற்று வேகம் காலப்போக்கில் குறைந்து கொண்டே வருகிறது.

சந்திரனின் சுற்று வேகம் மிகமிக மெதுவாகக் குறைந்தாலும், காலப் போக்கில் குறிப்பிடத்தக்கதாய் இருக்கும்.



பென்குவின் ஒரு முரட்டுப் பறவை. ஒரு பென்குவின் இடுகின்ற முட்டையை மற்றொன்று திருடிவிடும். இது தவிர தங்களுக்கு என தனித்தனி ஏரியாவை வகுத்துக்கொண்டு, அப்பகுதியில் மற்ற பென்குவின்கள் வந்தால் விரட்டி அடித்து விடும்.

- கே. சுதர்ஷன், தூத்துக்குடி

பூமியின் சுற்று வேகமும் இதைப் போலவே, மெல்ல மெல்ல குறைவதால், பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலுள்ள தூரம் அதிகரித்துக் கொண்டே போகும். வருடத்திற்கு 3 செமீ என, ஒவ்வொரு ஆண்டும் சந்திரன், பூமியிடமிருந்து விலகிக்கொண்டே செல்கிறது. இந்நிலை தொடரும்போது, பூமியின் சுற்று வேகம் மேலும், மேலும் குறைந்து, பூமியும் சந்திரன் போல் தனது முகத்தை ஒரு பக்கமே காண்பித்துக் கொண்டு சுற்றும். அச்சமயத்தில் சந்திரன், பூமியிடமிருந்து விலகுவதை நிறுத்திக் கொண்டு, மீண்டும் பூமியை நோக்கி நகரும். சந்திரன் பூமியிலிருந்து 545,000 கி.மீ தூரத்தில் இருக்கும்போது, பூமி தன் ஈர்ப்பு விசையால் உடைந்து சந்திரனை வேகமாக ஒரு குலுக்கு குலுக்கும். இதனால் சந்திரன் உதிர்ந்து நொறுங்கி விடும். சந்திரன் பூமியின் ஆரத்திலிருந்து 2.4 மடங்கு தூரத்தில் இருக்கும்போது இது நிகழும். இந்த எல்லைக்கு 'ரோச்சாஸ் எல்லை' என்று பெயர். நொறுங்கிய சந்திரப் பாறைகள் வளையமாய் பூமியை வலம் வரும். அப்போது பூமியும் சனி கிரகத்தைப் போல 'சந்திர வளையம்' கிரீடம் சூட்டிக் கொண்டு வலம் வரும்.

சூரியன், பூமி இரண்டும் போட்டி போட்டுக் கொண்டு சந்திரனைத் தன் பக்கம் இழுக்கப் பார்க்கிறது. சந்திரன் நீர்த்த நிலையாகவோ அல்லது வாயுவாக இருந்தால், அந்தத் திசை நோக்கி இழுபட்டே பிய்ந்து போயிருக்கும். இதுதான் ஓத ஏற்ற விளைவு. ஓத ஏற்றம் சந்திரன் பூமியைத் தன்னை நோக்கி இழுக்கும்போது மட்டுமே நிகழ்கிறது. ஒரு நாளைக்கு 2 முறை ஓத ஏற்றம் நிகழும்.

சந்திரன் மேல் மானுடத் தடத்தைப் பதித்தவர் நீல் ஆம்ஸ்ட்ராங்தான். இது 1969 ஜூலை 20ந் தேதி, அப்பல்லோ விண்வெளி ஓடத்தின் மூலம் நிகழ்ந்தது. 1994, 1998ல் செலுத்தப்பட்ட விண்கலங்கள், சந்திரனில் துருவங்களில் நீர் பனிக்கட்டிகள் உள்ளதை உறுதிப்படுத்தியது. இவை நீண்ட காலத்திற்கு முன் வால் நட்சத்திரங்கள் சந்திரனின் மேல் மோதியதால் வீழ்ந்தவை என்றும் தெரிய வருகிறது.

நிலா உச்சியில் இருக்கும்போது நம் எடை சற்றுக் குறைவாய் இருக்கும்.


முழு நிலாவின் ஒளி, அரை நிலா வின் ஒளியைவிட 9 மடங்கு பிரகாசமாய் ஒளிர்கிறது.

சந்திரன் உதிக்கும்போது, தொடுவானில் அதன் உருவம், உச்சி வானில் தெரியும் நிலாவைவிடப் பெரிதாக தெரியும். இது போலிமைதான். உண்மையாகவே உச்சியின் நிலவுதான், தொடுவான் நிலவை விட 2% பெரியதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு நாள் இரவும் நிலா தோன்றும்போதும், முந்தைய நாளைவிட 50 நிமிடம் தாமதமாய்த் தெரிகிறது. இதன் காரணம், சந்திரன் பூமியைச் சுற்றும் வேகம், பூமி தன் அச்சில் சுழல்வதை விட மெதுவாகச் சுழல்வதாலேயே இந்த நேர வேறுபாடு தோன்றுகிறது.

சந்திரனின் ஒளி பூமியை வந்தடைய 1.3 வினாடி ஆகிறது.

- மோகனா


ஆப்பம் உணர்த்திய பாடம்
கதை : ஆர். சாரதா
படம் : மகேஸ்
சந்திரகுப்த மௌரியரும் அமைச்சர் சாணக்கியரும் நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.
சாணக்கியரே, நந்தவம்சத்து மன்னனை முறியடிப்பது சிரமமாயிருக்கும் போலிருக்கே?
ஆம் அரசே! அது சுலபமான காரியம் அல்ல. நம் அணுகு முறையில் மாற்றம் தேவை.
எப்படி? எனக்குப் பசி அதிகமாகி விட்டது. சாப்பிட்டு விட்டுப் பேசுவோம்.
அதோ ஓர் பெண் ஆப்பம் சுடுகிறாள். சாப்பிட்டுச் செல்லலாம்.
மன்னருக்குச் சூடான ஆப்பங்கள் வைக்கப்பட்டன. மன்னர் ஆவலுடன் ஆப்பத்தின் நடுப் பகுதியைத் தொட்டார்.
ஆ... விரல் சுட்டு விட்டதே
மன்னா! முதலில் ஆப்பத்தின் ஓரப் பகுதியைச் சாப்பிட்டு விட்டு நடுப் பகுதிக்கு வர வேண்டும். அப்போது ஆறியிருக்கும்.
சபாஷ் அமைச்சரே! எனக்குப் புரிந்துவிட்டது. முதலில் நந்த வம்சத்து மன்னனைச் சுற்றியுள்ள சிற்றரசர்களை வென்றால், பிறகு அவனை வெல்வது சுலபம்.
இதைத்தான் அணுகு முறையில் மாற்றம் தேவை என்றேன் மன்னா!
சொன்னதுபோல் செய்து நந்த வம்சத்து மன்னனை வென்றார் சந்திரகுப்த மௌரியர்.



• எரிகற்கள் பொழிவு

தொலை தூர கிரகத்தில்...

பூமியிலிருந்து தொலை தூரத்தில் உள்ள ஓர் நட்சத்திரத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும் கிரகத்தின் வளி மண்டலத்தில் சோடியம் கலந்திருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர்.

விண்வெளியில் நிறுத்தப்பட்டுள்ள ஹப்பிள் தொலைநோக்கி மூலம் ஆராய்ந்ததில் இந்த உண்மையை விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர். பூமியிலிருந்து 150 ஒளி ஆண்டுகள் (ஓர் ஒளி ஆண்டு என்பது ஒளி ஓர் ஆண்டில் பயணம் செய்யும் தூரம்) தொலைவில் உள்ளது பெகாசஸ் என்னும் நட்சத்திரக் கூட்டம். அதில் எச்.பி 209458 என்னும் நட்சத்திரம் உள்ளது. ஏறக்குறைய நமது சூரியனைப் போன்றது அது. அதைச் சுற்றிக்கொண்டிருக்கிறது அந்தக் கிரகம். அது தனது சூரியனைச் சுற்றிவர மூன்றரை நாட்கள் எடுத்துக்கொள்கிறது.

வியாழன் கிரகத்தைப் போலவே அந்தக் கிரகமும் வாயுவால் ஆனதாகும். பூமியைப் போல் திடப் பொருள்களால் ஆனதல்ல. பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தில் மீதேன், நீராவி, பொட்டாசியம் போன்ற வேதிப் பொருள்கள் இருக்கின்றன. அதே போன்ற வேதிப் பொருள்கள் வேற்று கிரகங்களின் வளி மண்டலங்களில் இருக்கிறதா என்பதைக் கண்டறியும் சோதனைகளை ஹபிள் தொலைநோக்கி மூலம் மேற்கொள்ள விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

வேலை இழப்பு

அமெரிக்காவில் செப்டெம்பர் 11ந் தேதி அன்று உலக வர்த்தக மையத்தின் இரு கட்டடங்களும் தகர்க்கப்பட்டன. இத் தாக்குதலை அடுத்து 29,500 பேர் விடிழந்து இருக்கின்றனர். கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும் 80,000 பேர் வேலை இழந் திருக்கின்றனர்.

தொழுநோயாளிகள்


தமிழகத்தில் 24,000 தொழு நோயாளிகள் உள்ளனர். அதாவது லட்சத்தில் 38 பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண், பெண் வயது வித்தியாசமின்றி இந் நோய் தாக்கினாலும் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது.

தமிழகத்தில் நாமக்கல், வேலூர் மாவட்டங்களில்தான் இந்நோய் தாக்குதல் அதிகமாகக் காணப்படுகிறது. 1982ஆம் ஆண்டில் உலகிலேயே அதிகமான தொழு நோயாளிகள் நம் நாட்டில்தான் இருந்தனர். உலகில் மொத்தமிருந்த 1.2 கோடி தொழு நோயாளிகளில் 40 லட்சம் பேர் இந்தியர்களாக இருந்தனர். ஆனால் அரசும், தொண்டு நிறுவனங்களும் தொடர்ந்து எடுத்த நடவடிக்கைகளால் இன்று 4.95 லட்சம் தொழுநோயாளிகளே இந்தியாவில் உள்ளனர். இன்னும் மூன்று ஆண்டுகளில் இது முற்றிலும் ஒழிக்கப்பட்டு விடும் என்று தொழுநோய் ஆய்வு அறிக்கை கூறுகிறது.

எரி நட்சத்திரக் கற்கள்

நவம்பர் 18ந் தேதி பிற்பகல் 2.30 மணி முதல் 3.30 மணி வரையிலும் இரவு 10.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் 'லியோநிட்' எரி நட்சத்திரக் கற்கள் பூமியில் மழையாகப் பொழிந்தன. இதனால் செயற்கைக் கோள்களில் உள்ள கேமராக்களின் செயல்பாடு 10 மணி நேரத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த எரிக்கற்கள் பொழிவால் இந்திய செயற்கைக் கோள்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை.

கைக்கடிகாரத்தால் மகிழ்ச்சி!



'கிருஸ்துமஸ் பரிசுகளும்; மெழுகுவர்த்தி சடங்குகளும்' கட்டுரை புதிய தகவல்களைச் சொல்லியது. படங்கள் வித்யாசமாகவும் நன்றாகவும் இருந்தன. நகைகளைத் தின்ற கறையான் கதை சிரிப்பை வரவழைத்து விட்டது.

- எல்.சந்தானலக்ஷ்மி,
ஏரல், தூத்துக்குடி மாவட்டம்.

'பரத நாட்டியக் கலைஞராகப் பளிச்சிட...' ஸ்ரீநிதி சிதம்பரம் அளித்த டிப்ஸ்கள் பயனுள்ளதாக இருந்தன. கஜானா அதிகாரியை மன்னர் தேந்தெடுத்த விதம் சூப்பர்.


- கே.கல்யாணி, ஒன்பதாம் வகுப்பு,
மீஞ்சூர்.

'வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்' என்பது பழைய பழமொழி. ஆனால் இன்று 'வீட்டிற்கு ஒரு தோட்டம் அமைப்போம்' என்று புதிய மொழியை ஏற்படுத்திவிட்டார் அழகனார். 'அக்னிக் குஞ்சுகள்' தொடர்கதை மிகவும் விறுவிறுப்பாகவும் அடுத்து என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகிறது.

- எஸ்.அமீர்ஜான்; பதினோராம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

கோகுலம் படிக்க எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதிலும் டிசம்பர் இதழில் வெளியிட்ட அறிஞர்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களைப் படித்ததும் உற்சாகம் பொங்கியது. அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.

- ந. சுதாகர், பட்டவர்த்தி,
தஞ்சை மாவட்டம்



பொன்மாரி கதையில் முன் யோசனை இன்றி, சீடரின் பேச்சையும் கேட்காத குருஜிக்கு நேர்ந்த கதி பலருக்கும் பாடமாக இருக்கும். எங்கள் பள்ளியில் நடந்தது பகுதியில் 'நாக்கு எங்கே?' என்ற தலைப்பில் வெளியான அனுபவம் உண்மையிலேயே சிரிப்பை வரவழைத்து விட்டது.

- சே. பாமாராணி, ஒன்பதாம் வகுப்பு,
குற்றாலம்.

நானும் என் தங்கையும் கோகுலத்தின் தீவிர வாசகர்கள். நாங்கள் படித்த, கேட்ட, ரசித்த செய்திகளைத் துணுக்குகளாக கோகுலத்துக்கு அனுப்பி அவ்வப்போது சன்மானமும் பெறுகிறோம். கோகுலத்திலிருந்து கைக்கடிகாரம் பெற்றது குறித்து நானும் என் குடும்பமும் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். என்னை ஊக்கப்படுத்திய கோகுலத்துக்கு நன்றி.

- க. விக்னேஷ், பத்தாம் வகுப்பு,
தூத்துக்குடி.

ஓவியப் போட்டி

நீங்கள் டயனோசரைப் புத்தகத்திலும், சினிமாவிலும் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : டயனோசர். எந்த வகையான டயனோசராகவும் இருக்கலாம். ஓவியங்கள் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரியைத் தரவும்.

கடைசி தேதி :
2.1.2002

பறக்கும் பாராசூட்கள்!

ஓவியப் போட்டி முடிவுகள்!

டிசம்பர் இதழில் 'பாராசூட்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். நீல வான்வெளியில், பச்சைப் புல்வெளிகளுக்கு மேல், மலைக்கு அருகில் என்று பாராசூட்கள் ஏராளமாகப் பறந்து வந்து சேர்ந்தன. அவற்றில் ஐந்து பாராசூட்கள் பரிசுகளைப் பெற்றுள்ளன.



முதல் பரிசு ▲ **எஸ்.ஸ்ரீவித்யா,**
ஆறாம் வகுப்பு,
டவுன் உயர்நிலைப் பள்ளி,
கும்பகோணம்.



ஆறுதல் பரிசு

ஜி.சரவணகுமார், ▶
எட்டாம் வகுப்பு,
காந்தியடிகள் கல்வி நிறுவனம்,
இடையர்பாளையம், கோவை.



எம்.ரோஸ்மேரி,
ஏழாம் வகுப்பு, கீழமாத்தூர்,
மதுரை.

இரண்டாம் பரிசு



அ. பாரி,
சென்னை.


மூன்றாம் பரிசு



ஆறுதல் பரிசு

இரா. பாரதி,
ஐந்தாம் வகுப்பு, டி.ஏ.வி.
மேல்நிலைப் பள்ளி, சென்னை.


IN GOKULAM THIS MONTH



PATTERNS ON THE FLOOR

- Cover Story

Kolam means 'beauty' or 'beautiful'. Drawing Kolams in an art, an ancient art. It is a tradition...



ALL IN GOOD SPIRIT

- Humour Contest - I Prize

The morning bell rings... The teacher walks down the corridor. Students run helter, skelter jumping over benches...

THE WHITE GIANTS

- In the Wild



The home of the polar bear is the frozen Arctic region around the north pole. Here, this beautiful white giant...



EVOLUTION OF THE CONSTITUENT ASSEMBLY

- A Report

January 26 is Republic Day - a day that is marked with pomp and pageant, a day that recalls the patriotic fervour...

THE STRANGE CREATURE



- Short Story Competition

Once upon a time, there lived a poor fisherman with his wife and three children in a small village...


GOKULAM

The monthly magazine for children

JANUARY 2002 **Rs.6/- ONLY**

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

• கும்ப்ளே





• தீப்தாஸ் குப்தா



• டினு யோஹனன்

கும்ப்ளேயால் கிடைத்த வெற்றி!

இந்திய கிரிக்கெட் அணி தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று ஒரு தினப் போட்டிகள் மற்றும் டெஸ்ட் தொடரை கோட்டை விட்டதோடு, டெண்டுல்கர் உட்பட 6 வீரர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டு திரும்பி வந்தது.

தாயகம் திரும்பிய உடனே இங்கிலாந்து அணியுடன் டெஸ்ட் தொடர் ஆரம்பமாகிவிட்டது. இந்த டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியில் புதிதாக மூன்று பேர் சேர்க்கப் பட்டுள்ளனர். இதில் ஒருவர் டினு யோஹனன் என்பவர். இவர் கேரளாவைச் சேர்ந்தவர். இந்திய கிரிக்கெட் அணியில் இரண்டாவது ஆளாக கேரளாவிலிருந்து சேர்க்கப் பட்டிருக்கிறார் இந்த டினுயோஹனன் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் டெஸ்ட் போட்டி மொஹாலியில் 3ந் தேதி துவங்கியது. டாஸ் வென்ற கங்குலி இங்கிலாந்து அணியை பேட் செய்யச் சொன்னார். முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 238 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. பிறகு ஆடிய இந்திய அணி 469 ரன்களைக் குவித்தது. இதில் விக்கெட் கீப்பர் தீப்தாஸ் குப்தா சதம் அடித்தார். இது அவருக்கு முதல் சதமாகும். முதல் இன்னிங்ஸில் ஹர்பஜன்சிங் 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்த இங்கிலாந்து அணியால் கும்ப்ளேவின் பந்து வீச்சைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. மளமளவென்று 6 விக்கெட்டுகளைச் சாய்த்தார் அனில்கும்ப்ளே. மேலும் டினு யோஹனனும் ஹர்பஜன்சிங்கும் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்த 235 ரன்களில் இங்கிலாந்து அணி சுருண்டது.

அனில் கும்ப்ளே பதினேழாவது முறையாக 5 விக்கெட்டுகளை டெஸ்ட் போட்டிகளில் சாய்த்திருக்கிறார். கபில்தேவ் 23 முறை 5 விக்கெட்களுக்கு மேல் எடுத்து முதல் இடத்தில் இருக்கிறார். கும்ப்ளே இரண்டாம் இடம் வகிக்கிறார். ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார் கும்ப்ளே.

5 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி இக்பால் சித்திக் கால் இலக்கை அடைந்தது. முதல் டெஸ்டில் வென்ற இந்திய அணி அடுத்து வரும் டெஸ்ட்களிலும் வென்று தொடரைக் கைப்பற்றுமா?



பூக்களைப் பார்த்து நெஞ்சம் நிறையாதவர், மகிழாதவர், ரசிக்காதவர் யாருமே இருக்க முடியாது. நெஞ்சைக் கவர்பவை பூக்கள் மட்டுமே...! இவற்றை நாம் ரசிக்கக் காரணமே... அவற்றின் கண்ணைக் கவரும் நிறங்கள்தான். பூக்களில்லாத, தாவரங்களில் வேறுபகுதிகள் கூட கலர், கலராக அழகாகத் தென்பட்டு, நம்மை அவை 'பூ' என எண்ண வைத்து, ரசிக்க வைக்கின்றன. நாம் எப்போதும் நிறத்தை ரசிப்பவர்கள் அல்லவா? பூக்களைத் தவிர, தாவரத்தின் இலை, கனி மற்றும் மறைந்திருக்கும் வேர்ப்பகுதிகள்கூட அழகிய நிறங்களில் காணப்படுவதுண்டு. காரட், பீட்ருட் மற்றும் டர்னிப் போன்றவற்றின் நிறங்கள் நாமறிந்ததுதானே!

பூக்கள் வண்ணமயமாய் காட்சியளிப்பதே பூச்சிகளை அழைத்து, மகரந்த சேர்க்கை செய்து தங்களின் இனத்தை விருத்தி செய்யவே! 'போய்ன் செட்டியா' என்ற மரம் பூத்துக் குலுங்குகிறது என எண்ணுகிறோம்; ஆனால் அப்படி தெரிபவை அதன் இலைகளே! சில தாவரங்களின் பூவிதழ்களை விட, அதன் புல்லிதழ்கள் பூக்கள் போல் நல்ல நிறத்துடன் இருக்கின்றன.

பூக்கள் சிவப்பு, மெல்லிய ஊதா, நீலம், கருஞ்சிவப்பு மற்றும் வயலட் என பல வண்ணங்களில் நம் நெஞ்சைக் கொள்ளை கொள்ளக் காரணம், அதிலுள்ள 'ஆந்தோசயனின்' நிறமிதான். மேலும் இவற்றிலுள்ள பச்சையம் மற்றும் கரோட்டின் என்ற நிறமிகளால்தான் பூக்கள் மஞ்சள், ஆரஞ்சு மற்றும் பச்சை நிறத்தில்

எத்தனை, எத்தனை நிறங்கள்!




காணப்படுகின்றன.

ஆந்தோசயனின் பூவிலுள்ள செல் திரவத்தில் கரைந்துள்ளது. பச்சையமும், கரோட்டினும், புரோட்டோபிளாசத்திலுள்ள 'பிளாஸ்டிட்கள்' என்ற வேதிப் பொருளில் உள்ளது.

தாவரங்களின் முக்கிய நிறமி பச்சையமே! இவை இலைகளுக்குப் பச்சை நிறத்தைத் தருவதுடன், உணவு தயாரிக்கும் சமையல்காரராகவும் செயல்படுகிறது.

பச்சையத்தின் இயற்கை நிறம் நீலப்பச்சை. இலைகளின் நிறத்தில் 2/3 பங்கு மட்டும்தான் பச்சையத்துக்குச் சொந்தம்; சாந்தோபில் 23 சதவீதமும், கரோட்டின் 10 சதவீதமும் மீதி ஆந்தோசயனினும் உள்ளன. இந் நிறமிகளிலுள்ள மக்னீசியம், இரும்பு, தாமிரம், துத்தநாகம் போன்ற உலோகங்கள்தான் தாவரங்களுக்கு நிறத்தைத் தருகின்றன.

குளிர் காலத்திலும் ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களிலும், மரங்களிலுள்ள இலைகள் கீழே உதிர்வதற்குமுன், உடனே காய்ந்துவிடாமல், அவை கருஞ்சிவப்பாகி, ஆரஞ்சு மற்றும் ரோஸ் நிறமடைந்து, பின் பழுப்பு வண்ணமாகி, பிறகு பச்சையம் மற்றும் மற்ற நிறமிகளை இழந்து காய்ந்து விடுகின்றன. கோடையில் நமக்கு இவற்றின் பச்சை நிறம் தவிர வேறு



பாம்பே!... நாம்பே!...

உலகில் மொத்தம் 2500 வகை பாம்புகள் இருந்தாலும் அவற்றில் 216 வகைகளே விஷமுள்ளவை. இந்தியாவில் மட்டும் 62 வகை பாம்புகள் உள்ளன. அவற்றில் 4 பாம்புகளே அதிக விஷமுடையன.

சாதாரணமான பாம்புகளுடைய ஆயுட்காலம் 5 முதல் 10 ஆண்டுகள். உணவே இன்றி ஓராண்டு வரை வெறும் தண்ணீர் மட்டும் பருகி பாம்புகளால் வாழ முடியும்.

பழி வாங்கும் குணம் எந்தவகைப் பாம்புக்கும் கிடையாது. பாம்பிலிருந்து மாணிக்கம் கிடைக்கிறது என்பதும் பொய். 'அவனுக்குப் பாம்புக் காது' என்பது மிகவும் தவறு. ஏனெனில் பாம்புகளுக்குக் காது கேட்காது.

- ஆர். பிரசன்னா, கரூர்.

தெரிவதில்லை. ஆனால் குளிர்காலம் தொடங்கியதும், இலைகளில் சேமிக்கப்பட்டுள்ள உணவு இலைகளுக்கும், மரத் தண்டுக்கும் இறங்கிவிடுகிறது. ஏனெனில் இப்போது உணவுத் தொழிற்சாலை மூடப்பட்டு, இலைகளிலுள்ள பச்சையம் கரைந்து விடுகிறது. எனவே இலைகளிலுள்ள மற்ற நிறமிகளான சாந்தோபில், கரோட்டின் மற்றும் ஆந்தோசயனின் போன்றவை தங்களின் முகங்களை வெளியே காட்டுகின்றன. எனவே, இலைகள் இப்போது அழகாக பல வண்ணங்களில் காட்சியளிக்கின்றன. எல்லா இலைகளும் மரத்திலிருந்து உதிரும் முன்பு, இலையின் காம்பிலுள்ள செல்களும் இறந்து விடுகின்றன. காற்றடித்ததும், இலைகள் கீழே உதிர்ந்துவிடும்.

இலைகள் உணவுத் தயாரிப்பை நிறுத்தியதும், அதிலுள்ள பச்சையம் சிதைந்து, கரோட்டினாய்டுகளாய் மாறுகின்றன. இதனால் இலை மஞ்சள் அல்லது பழுப்பு நிறமடைகிறது. இக் கரோட்டின்கள்தான், நம் உடலில் வைட்டமின் ஏ ஆக மாறுகிறது. இலைகள் கருஞ் சிவப்பு மற்றும் சிவப்பாக மாறக் காரணம், இதிலுள்ள ஆந்தோசயனிதான். தக்காளியின் சிவப்பு நிறத்துக்கான காரணம் அதிலுள்ள லைக்கோபீன் என்ற வேதிப் பொருளே! இதில் புற்றுநோயை எதிர்க்கும் 1000க்கும் மேற்பட்ட பொருட்கள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. குரோட்டன்ஸ் செடியிலுள்ள ஒரே இலையில் பல நிறங்கள் காணப்படுவதற்கும் பச்சையம், சாந்தோபில், கரோட்டின் மற்றும் ஆந்தோசயனின் என்ற நிறமிகளே காரணமாகும். ரோஜாக்களின் பல வித நிறங்களும், கத்தரிக்காயின் அழகான வயலெட் நிறத்துக்கும் மேற்குறிப்பிட்ட பொருட்கள்தான் காரணிகள்! திராட்சை, பீட்ரூட் போன்றவற்றிற்கு வண்ண மூட்டுவது ஆந்தோசயனின்கள்தான்! இத்துடன் டானின் என்ற பொருள், தாவரப் பொருட்கள் மண் நிறத்துக்கு மாற உதவுகிறது. நிறமிகளிலுள்ள தாது உப்புகளும், கரிம அமிலங்களும், நிறம் மாற உதவுகின்றன.

- ஸ்வாதி



சாப்பாட்டு ராமன்!

நரிக்குடி கிராமத்தில் ராமன் என்ற ஒருவன் இருந்தான். அவன் சரியான சோம்பேறி. வேலை செய்யாமல் உடலை வருத்தாமல் சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தூங்க விரும்பினான். அதற்கு என்ன வழி... என யோசித்தான். சொந்தக் கிராமத்தில் அப்படி இருக்க விட மாட்டார்கள். அதனால் அடுத்த கிராமம் செல்லலாம் என முடிவெடுத்து... சிக்கல் கிராமத்திற்கு போய்ச் சேர்ந்தான்.

அங்குள்ள மக்கள் மிகவும் நல்லவர்கள். அதனால் அவர்களை ஏமாற்றி வாழ நினைத்தான். அதற்காக கண் தெரியாதவன் போல் நடிக்க ஆரம்பித்தான். அவனுடைய நடிப்பு மிக இயல்பாக இருந்ததால், கிராம மக்கள் நம்பி அவனுக்கு உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்தனர். அதனை நன்கு அனுபவித்து நிம்மதியாய் வாழ்ந்து வந்தான்...

ஒருநாள் கந்தன் அந்த கிராமத்திற்கு ஒரு வேலை விஷயமாக வந்தான். அவனும் நரிக்குடி கிராமத்தைச் சேர்ந்தவன்தான். ஆனால் ராமனுக்கு அவனைச் சரியாகத் தெரியாது. அங்கு ராமன் வெறும் சாப்பாட்டு ராமனாக, கண் தெரியாதவனாக நடித்துக் காலம் தள்ளுவதைப் பார்த்தான் கந்தன்.

எந்தக் காலத்திலும் ஏமாற்றுதல் என்பது கந்தனுக்குப் பிடிக்காதவிஷயம்! அதனால் ராமனின் ஏமாற்றுதலையும் முடிவுக்குக் கொண்டு வர தீர்மானித்தான்.

அதனால் ஒரு லாட்டரி சீட்டை வாங்கிக் கொண்டு ராமனிடம் சென்றான். "இந்த லாட்டரிக்கு லட்ச ரூபாய் பரிசு விழுந்தால் நீ ராஜாபோல் வாழலாம்... வைத்துக் கொள்..."என்று கொடுத்து விட்டுச்சென்றான்...

சோம்பேறி ராமனும் லட்ச ரூபாய் பரிசு கிடைத்தால் நல்ல சாப்பாடு சாப்பிட்டு ஓய்வெடுக்கலாம் என்று கணக்குப் போட்டு மனத்திற்குள் மகிழ்ந்தான்.

ஒரு வாரம் கழித்து, ஊர் மக்கள் கூடியிருந்தபோது கந்தன், ராமனிடம் வந்தான். ''ராமன்... உன்னிடம் கொடுத்த சீட்டுக்கு லட்ச ரூபாய் பரிசு கிடைத்துள்ளது...''

''ரொம்பச் சந்தோஷம்... நம்பரைச் சொல்...'' என லாட்டரி சீட்டை எடுத்தான் ராமன்...!

"AU 6378835" என்றான் கந்தன்.

ரகசியமாகக் கண்ணைத் திறந்து எண்களைப் பார்த்த ராமன், ''என்னிடம் உள்ளது அந்த எண்கள் இல்லையே'' என்றான் வருத்தத்துடன்.

உடனே கந்தன் பிடித்துக்கொண்டான். ''உன்னிடம் உள்ள சீட்டில் அந்த எண்கள் இல்லை என்பதை எப்படி கண்டுபிடித்தாய்...?'' என்று கேட்க பதிலுக்கு ராமன் திருதிருவென முழித்தான்.


''இவனுக்குக் கண் தெரியும். ஆனால் ரொம்ப சோம்பேறி, வேலை செய்ய அலுப்புப்பட்டுக் கொண்டு, கண் தெரியாதவன் மாதிரி நடித்து உங்களிடம் தண்டச்சோறு தின்று வருகிறான்...'' என்று கந்தன் கூறினான்.

அடுத்த நிமிடம் கூடியிருந்த கூட்டம், ராமனைப் பிடித்து துவைக்க ஆரம்பித்தது.

தலை தெறிக்க ஓடினான் ராமன்.

- வி.ஆர். கிருத்திகா

தண்ணீருக்குள் மூழ்கிய காகிதம் நனையுமா?



செய்து பாருங்கள்


பெரிய பாத்திரம் அல்லது பிளாஸ்டிக் வாளி, கண்ணாடி டம்ளர், காகிதம், தண்ணீர் முதலியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

1. முதலில் பாத்திரம் அல்லது வாளியில் தண்ணீரை ஊற்றுங்கள்.

2. காகிதத்தைக் கசக்கி கண்ணாடி டம்ளரின் அடியில் திணித்து விடுங்கள். டம்ளரைக் கவிழ்த்தால் காகிதம் விழக் கூடாது.

3. டம்ளரைத் தலைகீழாகப் பாத்திரத்தில் உள்ள தண்ணீருக்குள் அமிழ்த்த வேண்டும். கவனமாக டம்ளரை நேராக அமிழ்த்துவது முக்கியம்.

4. சிறிது நேரம் டம்ளரைப் பிடித்தபடி இருங்கள். பிறகு டம்ளரை வெளியில் எடுங்கள். உள்ளிருக்கும் காகிதத்தை எடுத்துப் பாருங்கள். காகிதம் நனைந்திருக்கிறதா? சிறிதும் நனைந்திருக்காது. இந்த எளிமையான சோதனையை வீட்டில் செய்து காட்டுங்கள்.



காகிதம் நனையாத ரகசியம்:

டம்ளரில் உள்ள காற்று தண்ணீரை டம்ளருக்குள் நுழைய விடாமல் வெளியே தள்ளிவிடுகிறது. எனவே தண்ணீர் டம்ளருக்குள் வந்து காகிதத்தை நனைக்க முடியவில்லை.

எத்தனை முறை மடிக்கலாம்?

ஒரு காகிதத்தை அது எவ்வளவு பெரிதாக அல்லது சிறிதாக இருந்தாலும் சரி, எடுத்துக் கொள்ளுங்கள். அதைச் சரி பாதியாக மடித்துக்கொண்டே வாருங்கள். இப்படி எத்தனை முறை மடிக்க முடியும். 10...12...5...? ஒரு காகிதத்தை 9 மடிப்புகளுக்கு மேல் மடிக்க முடியாது. நண்பர்களிடம் செய்து காட்டி அசத்துங்கள்!

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

7 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை : 1. பறவையின் கால்கள் 2. பையிலுள்ள படம் 3. கையிலுள்ள பழம் 4. செடி 5. வானத்தில் பறவை 6. காலணிகள் 7. பறவை வாயில் பழம்.

இவற்றுள் மாறுபட்டது எது?



விடை : மாதுளம் பழம்

புள்ளிகளை இணையுங்கள்!



பிருந்தாவனம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka